விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 வைகாசி 16 வியாழக்கிழமை (30.05.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 162

## வடக்குத் தேர்தலை அரசு நடத்தினால்

# ஆயிரம் தேரர்கள் தீக்குளிப்பர்!

## ஆர்ப்பரிக்கிறது பொது பல சேனா

(கொழும்பு)

**அரசாங்கம் வட மாகாணத் தேர்தல் போன்றவற்றை நடத்தி, நாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் தீர்மானங்களை எடுக்க நடவடிக்கை எடுத்தால் அதற்கு எதிராக தீக்குளிக்க போவத்தே இந்திரரத்ன தேரர் போன்ற ஆயிரக்கணக்கான தேரர்கள் தயாராக இருப்பதாக பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கல பொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.**

இந்திரரத்ன தேரரின் உன்னதமான உயிர் தியாகத்தை தற்கொலை எனக் கூறி, அவமானம் செய்யக் கூடாது எனவும் மாடுகள் அறுக கப்படுவதற்கு எதிராக தேரர் உயிர் தியாகம் செய்ததாக கூறப்பட்ட போதிலும் தேசிய ரீதியிலும் பௌத்த சாசன ரீதிலும் 05 விடயங்களை முன் வைத்தே அவர் தனது உயிரை தியாகம் செய்துள்ளார்.

எனினும் மாடுகள் அறுக் கப்படுவதை எதிர்த்து தேரர் தீக்குளித்துள்ளதாக ஊடகங்களில் பிரசாரம் செய்யப்பட்டமையானது, அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பாரிய அநீதி எனவும் ஞானசார தேரர் கூறியுள்ளார்.

இதேவேளை, இந்திரரத்ன தேரர் உடலில் தீ மூட்டி தற்கொலை செய்து கொண்டது நியாயமானது அல்ல எனவும் எந்த சந்தர்ப்பத்திலும் இறுதி (19ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

மர்மமான முறையில் வீதியில் உயிரிழந்து கிடந்த குடும்பஸ்தர் ஒருவரின் சடலத்தை ரோந்து சென்ற யாழ்ப்பாணம் பொலிஸார் நேற்று அதிகாலை மீட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் சிவ தொண்டன் நிலையத்திற்கு முன்பாக கே.கே.எஸ்.வீதியிலிருந்து நேற்று அதிகாலை மீட்கப்பட்ட குடும்பஸ்தரின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டு பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

சடலமாக மீட்கப்பட்டவர் இணுவில் மேற்கைச் சேர்ந்த இராஜேந்திரன் திருகரன் (வயது-37) என்ற குடும்பஸ்தர் ஆவார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான மேற்படி குடும்பஸ்தரின் மரணம் தொடர்பில் யாழ்.போதனா வைத்தியசாலையின் பதில் திடீர் மரணவிசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மற்றும் யாழ்ப்பாணம் பொலிஸார் ஆகியோர் விசாரணைகளை (20ஆம் பக்கம் பார்க்க)

## புதிய அரசியலுக்கு மக்கள் ஆதரவு

### கோருகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

அதிகார வெறியை இல்லாதொழித்து மக்களிடம் அதிகாரங்களை மீளளிக்கும் நோக்கில் ஐக்கிய தேசியக் கட்சியினால் வெளியிடப்பட்டுள்ள புதிய அரசியலமைப பிறகான யோசனைக்கு நாட்டு மக்கள் ஆதரவு வழங்கி புதிய இலங்கையை உருவாக்க முன்வர வேண்டும் என எதிர்க் கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியினால் முன்வைக்கப்பட்ட புதிய அரசியலமைப்பிற்கான யோசனையை நேற்று புதன்கிழமை நாடாளுமன்றத்தில் வெளியிட்டதன் பின் (20ஆம் பக்கம் பார்க்க)




மட்டக்களப்பு வரவேற்பு பகுதியில் புத்தர் சிலையொன்றை நிறுவுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்று நடத்திய ஆர்ப்பாட்டத்தின் போது...

## ஏணையிலிருந்து வீழ்ந்த பெண் குழந்தை மரணம்

(மன்னார்)

ஏணையிலிருந்து தவறி விழுந்த மூன்று வயதுப் பெண் குழந்தை சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளது.

இந்தச சம்பவம் மன்னா மாவட்டத்திலுள்ள வெள்ளாங்குளம் புதுக்காடு என்னும் பகுதியிலுள்ள வீடொன்றில் கடந்த 24ஆம் திகதி மதியம் 12 மணிக்கு இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் சிவபாதம் நிதர்சனா என்ற 3 வயதுப் பெண் குழந்தையே உயிரிழநதுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வேலை நிமித்தம் குழந்தையின் தாய் வெளிநாடு சென்றுள்ளதால் தந்தையின் பாதுகாப்பிலேயே குழந்தையிருந்துள்ளது.

சம்பவதினத்தன்று குழந்தையின் தந்தையும் வெளியில் சென்றிருந்த வேளை 4 சிறுவர்களின் பாதுகாப்பில் குறித்த குழந்தையிருந்துள்ளது.

இந்நிலையில் ஏணையில் வைத்து குழந்தைக்கு (20ஆம் பக்கம் பார்க்க)

## அவுஸ்.செல்ல முயன்ற 52 பேர் கைது!

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவிற்கு சட்டவிரோதமாக செல்ல முயன்ற 52 போ சிலாபம், தொடுவாவ கடற்பிரதேசத்தில் நேற்று கைது செய்யப்பட்டதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

ரோசா குசும் என்ற மீன்பிடிப் படகில் இவாகள் அவுஸதிரேலியாவிற்கு தப்பிச் செல்ல முயன்றதாக தெரிவிக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்டவர்களில் 45 தமிழர்களும் 7 சிங்களவர்களும் உள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர். அவற்றில் 11 பெண்களும், 20 சிறுவர்களும் உள்ளடங்குவதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, சிலாபம் மற்றும் நீர்கொழும்பு பகுதியினை சேர்ந் (19ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ் கொலை வழக்கு ; மறு விசாரணைக்கு உத்தரவு

(புதுடில்லி)

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் மறுவிசாரணை நடத்தக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீது ஜூன் 5ம் தேதிக்குள் பதிலளிக்க வேண்டும் என்று வெளியுறவுத்துறை அமைச்சகம் மற்றும் மத்திய புலனாய்வுத்துறை (சிபிஐ) க்கு சென்னை உயர்நீதி மன்றத்தின் மதுரை கிளை நேற்று புதன் [illegible]

ராஜீவ் கொலை வழக்கின் விசாரணை பல ஆண்டுகளுக்கு முன்பே முடிவடைந்து 4 பேருக்கு தூக்கு தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் நளினிக்கு ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது.

மரண தண்டனை விதிக்கப்பட்ட பேரறிவாளன், சாந்தன், முருகன் ஆகியோர் தங்கள் கருணை மனுக்கள் குடியரசுத் [illegible] நிராகரிக்கப்பட்டதை எதிர்த்து உச்சநீதி மன்றத்தில் தாக்கல் செய்திருக்கும் மேல்முறையீட்டு மனு நிலுவையில் உள்ளது.

இந்நிலையில் மதுரை மேலூரைச் சேர்ந்த சாந்த குமரேசன் என்ற வழக்கறிஞர் சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரை கிளையில் ஒரு பொதுநல வழக்கைத் தொடர்ந்தார். அதில், கொலை வழக்கில் (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மருத்துவர் சிவசங்கரை விடுவிக்க சட்டமா அதிபருக்கு கையெழுத்து மகஜர்

(யாழ்ப்பாணம்)

அநுராதபுரம் சிறைச்சாலையில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ள மருத்துவர் சிவசங்கரை விடுவிக்குமாறு இந்துமகா சபையும் அகில இலங்கை இந்துமா மன்றமும் கூட்டாக இணைந்து நடவடிக்கை எடுக்கவுள்ளன.

மருத்துவர் சிவசங்கரை விடுதலை செய்யக் கோரும் மகஜரில் இந்து சிவில் சமூகப் பிரதிநிதிகளின் கையொப்பங்களைப் பெறுவதற்கான முயற்சியில் இந்துமகா சபை ஈடுபட்டுள்ளது.

இந்து சிவில் சமூகப் பிரதிநிதிகள் தமது கையொப்பங்களை இடுவதற்கு வசதியாக பின்வரும் இடங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் கந்தர்மடம் குமாரசாமி வீதியில் அமைந்துள்ள சிவகுருநாதர் பீடம்,

கிளிநொச்சியில் சிவத்தமிழ் அறநெறி மையம், வவுனியாவில் கோயில்குளத்தில் அமைந்துள்ள சிவன் கோவில்,

திருகோணமலையில் திருமலையில் நகரில் உள்ள சிவன் மானிட மேம்பாட்டு நிறுவனம்,

அம்பாறையில் தம்பிலுவில் உள்ள சிவ தொண்டர் அமைப்பு காரியாலயம், மட்டக்களப்பில் கல்லடியில் உள்ள சிவன் மானிட மேம்பாட்டு நிறுவனம் ஆகிய இடங்களில் கையெப்பம் இடமுடியும்.

இம்மகஜர் அகில இலங்கை இந்துமா மன்றத்தின் ஊடாக சட்டமா அதிபரிடம் கையளிக்கப்படும் என இந்துமகா சபை அறிவித்துள்ளது. (ந)

# துப்பித்த கார் மீது துப்பாக்கிச் சூடு

## இருவர் காயம்



கெப்பிற்றிகொல்லாவயில் இருந்து நேற்று வவுனியா நோக்கி பயணித்துக் கொண்டிருந்த கார் ஒன்று பொலிஸ் காவலரணில் நிறுத்தாமல் சென்றமையினால் நடத்தப்பட்ட துப்பாக்கி சூட்டில் இருவர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் வவுனியா பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கெப்பிற்றிகொல்லாவ பகுதியில் கார் ஒன்று மோட்டார் சைக்கிளுடன் விபத்துக்குள்ளான நிலையில் நிறுத்தாமல் செல்வதை அவதானித்த பொலிஸார் 6ஆவது மைல் கல்லில் உள்ள பொலிஸ் காவலரணுக்கு தகவலை வழங்கியிருந்தனர்.

எனினும் 6ஆவது மைல்கல் பொலிஸார காரை இடைமறித்தபோதும் அந்த கார் நிறுத்தாமல் சென்றமையினால் துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

காரினுள் இருந்த இருவர் காயமடைந்ததுடன் இருவர் தப்பியோடிய நிலையில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவத்தினை உறுதிப்படுத்திய வவுனியா மருத்துவமனை பொலிஸார், சம்பவத்தில் காயமடைந்த இருவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும அவர்களில்ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்கு மாற்றப்படவுள்ளதாகவும் தெரிவித்ததுடன்,

வவுனியா பொலிஸார் ஏனைய இருவரிடமும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர். (செ-11)

# பல்கலைக்குள் வைத்து மாணவன் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

சிரேஷ்ட மாணவர்களின் தாக்குதலில் படுகாயமடைந்த நிலையில் யாழ்.பல்கலைக்கழக மாணவன் ஒருவன் யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்தின் 2-ம் வருடத்தில் கல்வி பயின்றுவரும் மாணவனை அதே பீடத்தில் கல்வி பயிலும் 3-ம்,4-ம் ஆண்டு சிரேஷ்ட மாணவர்கள் கடுமையாக தாக்கியுள்ளனர்.

நேற்று காலை 10மணியளவில் பிரஸ்தாப மாணவனின் விரிவுரை மண்டபத்தினுள் புகுந்த 20ற்கும் மேற்பட்ட சிரேஷ்ட மாணவர்கள் அவரையும் அவரது வகுப்பு சக மாணவர்களையும் கடுமையாக தாக்கியுள்ளனர்.

இதில் குறித்த மாணவன் ஒருவன் கழுத்து, கை,கால்களின் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் யாழ்.பல்கலைக்கழக நிர்வாகம்,யாழ்.பொலிஸ் நிலையம்,மனித வுரிமைகள்ஆணைக்குழு ஆகியவற்றில் மேற்படி மாணவரின் தரப்பினர் முறையிடவுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (செ-6)

# வீட்டுக்குள் கார் விபத்து; தாயும் மகளும் பலி

காரொன்று வீதியை விட்டு விலகி வீட்டு விறாந்தையில் விழுந்து விபத்துக்குள்ளானதில் தாயும், மகளும் பலியாகியுள்ளனர்.

இந்த சம்பவம் கண்டி-குருணாகல் வீதியில் கஹகொல்ல சந்தியில் நேற்று புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

விறாந்தையிலிருந்த 47 வயதான தாயும் ஒன்பது வயதான மகளும் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி அவ்விருவரும் உயிரிழந்து விட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, காரை செலுத்தி சென்ற சாரதியை கைது செய்துள்ளதாக தெரிவித்த குருணாகல் பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற் கொணடுவருவதாக தெரிவித்தனர். (செ-11)

# ஆட்கடத்தல்களை கண்டிக்கிறோம்

## - அரசாங்கம்

சகலவிதமான ஆட்கடத்தல் நடவடிக்கைகளும் கண்டிக்கப்பட வேண்டுமென அரசாங்கம் அறிவித்துள்ளது.

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் அமைப்பின் கொள்கைகளுக்கு அமைவாகவே நடவடிக்கை எடுக்கப்படுகிறது என தெரிவித்துள்ளது.

ஜெனீவாவில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில இலங்கை இந்த கருத்தை வெளியிட்டுள்ளது.

ஆட்கட்டதல் நடவடிக்கைகள், இலங்கையில் பாரிய குற்றச் செயலாக கருதப்படுவ தாகவும், கடுமையான சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

2006ம் ஆண்டு 16ம் இலக்க குற்றவியல் சட்டத்தின் அடிப்படையில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் கடத்தப்படுவதற்கு எதிராக சட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகளை தடுக்கவும், எதிராக நடவடிக்கை எடுக்கவும் சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து இலங்கை அதிகாரிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.(செ-11)

# இலங்கை-சீனா செய்மதி ஒப்பந்தம்



சீனாவின் கிரேட் வால் கைத்தொழில் கூட்டுத்தாபனம் இலங்கையின் முதல் தகவல் தொடர்பு செயற்கைக்கோளை வழங்க ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

உலக சந்தையில் வர்த்தக செயற்கை கோள்களை ஏவுவதற்கான சேவையை வழங்க அதிகாரம் அளிக்கப்பட்ட ஒரேயொரு நிறுவனமாக கிரேட் வோல் கைத்தொழில் கூட்டுத்தாபனம் உள்ளது.

இந்த ஒப்பந்தம் மூலம் இந்தியப் பெருங்கடலின் தீவு நாடுகளில் சீனாவின் பிரசன்னத்தை மேலும் விரிவாக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த ஒப்பந்தத்தில் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் சீன ஜனாதிபதி ஸி ஜின்பிங் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது.

எனினும், இந்த ஒப்பந்தம் தொடர்பாக நிதி மற்றும் வேறு விடயங்கள் வெளியிடப்படவில்லை.

இவ்வொப்பந்தத்தின் மூலம் இரு நாடுகளுக்கிடையே உள்ள வர்த்தகத் தினை விரிவாக்க ஒரு பகுதியாக அமையும் என தெரிவிக்கப்படுகிறது.

இந்த செய்மதி இலங்கைக்கும் அதன் அயல் நாடுகளுக்கும் தொலைத்தொடர்பு மற்றும் ஒலி, ஒளிபரப்புச் சேவைகளை வழங்கும். பல நாடுகள் இலங்கையிடமிருந்து இந்த சேவைகளை வாங்குவதற்கு விருப்பம் கொண்டுள்ளன என "சைனா டெய்லி" கூறியுள்ளது.

இதுவரையில் 18 நாடுகளுக்கு 43 செய்மதிகளை ஏவிக்கொடுத்துள்ளதாக இந்த சீன கம்பனி கூறியுள்ளது.

2015ஆம் ஆண்டளவில் உலக செய்மதி சந்தையில் 10 சதவீதத்தை பிடிக்க சீனா எண்ணியுள்ளது என இந்தக் கம்பனி கூறியுள்ளது.

இதேவேளை.சீனா தவிர்ந்த வெளிநாடுகளில் இடம்பெறும் அபிவிருத்திகளுக்கு நிதி உதவிகளை வழங்கும் திட்டங்களை வழங்கும்போது இலங்கைக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று சீன அபிவிருத்தி வங்கி கூறியுள்ளது.

1994ஆம்ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட சீன அபிவிருத்தி வங்கியானது, வெளிநாடுகளில்மேற் கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு கடனுதவிகளை வழங்கும் பாரிய அமைப்பாக இருக்கின்றது. (செ-11)

# கல்வியில் ஏற்பட்ட குறைபாடே யுத்தத்தையும் ஏற்படுத்தியது

## - அமைச்சர் பந்துல

யுத்தத்திற்கான ஏதுவாக நாட்டின் கல்வித் துறையையும் கருத வேண்டுமென கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். பொலனறுவையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் கல்வித்துறையில் காணப்பட்ட குறைபாடுகளும் யுத்தத்தை ஏற்படுத்த வழிகோலியது. மனிதாபிமானத்தை உணர்த்தக் கூடிய வகையில் கல்வித்துறையில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டுமெனவும அவர் வலியுறுத்தியுள்ளார்.

எதிர்கால உலகை வென்றெடுக்கக்கூடிய வகையிலான கல்வி இலங்கையர்களுக்கு புகட்டப்படவில்லை என அவர் சுட்டிக் காட்டியுள்ளார், இவ்வாறான காரணிகளும் நாட்டில் மூன்று தசாப்தங்களாக நீடித்த யுத்தத்திற்கு ஏதுவாக அமைந்தது என கல்வி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)


காணி, வீடு விற்பனைக்கு


காணி — நாயன்மார் வீதி
கச்சேரி - நல்லூர் வீதியில் இருந்து 100 M தொலைவில் நாயன்மார் வீதியில் 4 3/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

வீடு — மல்லாகம்
மல்லாகம் சந்திக்கு அண்மையில் ஸ்ரேசன் வீதியில் 2 பரப்புக் காணியுடன் வீடும் கடைத் தொகுதியும் விற்பனைக்குண்டு.

காணி — மல்லாகம்
மல்லாகம் கே.கே.எஸ் வீதியில் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
வீடு, கடை கட்டுவதற்குப் பொருத்தமான காணி.

காணி — யாழ்ப்பாணம்
யாழ்ப்பாணம் ஒட்டுமடச் சந்திக்கு அண்மையில் 3 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. கடை கட்டுவதற்குப் பொருத்தமான காணி.

தொடர்புகளுக்கு:
ராஜலக்ஷ்மி என்ரபிறைஸ்
Rajaluxmy Enterprise
Real Estate
காணி, வீடு வாங்கித் தருவதற்கும் விற்றுக்கொடுப்பதற்குமான நிறுவனம்
26D, பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம்.
(தொழில்நுட்பக் கல்லூரிக்கு முன்பாக)
E-mail:nrluxmy@gmail.com
தொ.பே: 0779994603, 0215684810



பிள்ளையார் இன்
இன்றுமுதல் அதி விசேட 25% விலைக்கழிவுடன் தரமான சைவ உணவுகள் எமது உணவகத்தில் நிறைவான சேவையுடன் காலை. மாலையில் வழங்கப்படும்.
25% கழிவு
இன்றைய விசேட உணவு :-
பூரி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-
சப்பாத்தி உருளைக்கிழங்கு கறியுடன் ரூ100/-
(சி-3442) தொடர்புகளுக்கு : இல. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829



31-ம் நாள் இதய அஞ்சலி

சிதம்பரப்பிள்ளை வள்ளியம்மை
(செல்லம்மா)



"அம்மாவாக மலர்ந்த நீ அம்மனாக மறைந்தாயோ"

துயருறும் நண்பர் குழாம்
வினோபா
பாலர் பகல் பராமரிப்பு இல்லம்
வினோபா நகர்
கச்சாய்.
(2882)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## நன்றி

ஒரு ஊரிலே குரு இருந்தார். அவர் ஒருநாள் இரவு ஒரு முக்கியமான புத்தகத்தைக் கையிலே வைத்து படித்துக் கொண்டிருந்தார்.

அவர் படித்துக் கொண்டிருந்தது ஒரு ஞானநூல். அதிலே ஆழ்ந்து போய் இருந்தார் அந்தக் குரு.

அந்த நேரம் ஒரு திருடன் கையிலே கத்தியுடன் மெதுவாக உள்ளே நுழைந்தான். அந்தக் குருவின் அருகில் மெதுவாகப் போய் மிரட்டினான்.

''சத்தம் போடாதே! மரியாதையாக உன்னிடமுள்ள பணத்தைக் கொடு... இல்லையென்றால் கொன்று விடுவேன்... பணத்தைக் கொடுக்கிறாயா... இல்லையேல் ஒரு குத்தாக குத்தட்டுமா...?'' என்று மிரட்டினான்.

அந்தப் பெரியவர் நிமிர்ந்து பார்த்தார்.

''இதோ பாரப்பா... என்னைத் தொந்தரவு செய்யாதே! கொலை அச்சுறுத்தல் விடுக்காதே! அதோ பார்... அந்த மேசை மேலேதான் பணம் உள்ளது. எடுத்துக் கொள்'' என்று கூறிவிட்டு மறுபடியும் படிக்க ஆரம்பித்தார்.

திருடனும் மேசையை நோக்கி நகர்ந்தான்.

இவ்வேளை பெரியவர் தலை நிமிராமல் புத்தகத்தை பார்த்துக் கொண்டு சொன்னார்; ''எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு போக வேண்டாம். சிறிதளவு மிச்சம் இருக்கட்டும்... நாளைக்கு வரி கட்ட வேண்டியிருக்கிறது'' என்றார்.

இவருடைய நிதானம், பதற்றமின்மை, அமைதி இவற்றையெல்லாம் பார்த்த திருடன் அசந்து போனான்.

இருந்தாலும் அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் அவர் கூறியவாறே சிறிதளவு பணத்தை வைத்து விட்டு மிகுதியாக இருந்த பணத்தை எடுத்துக் கொண்டு வாசலைத் தாண்டும்போது அந்தப் பெரியவர் சொன்னார்;

''எதை யார் கொடுத்தாலும் நன்றி சொல்ல வேண்டும்... அதுதான் நாகரிகம்?'' என்றார்.

திருடன் திகைப்புடன் திரும்பிப் பார்த்தான். "நன்றி" என்று சொல்லிவிட்டு அவன் தனது பயணத்தைத் தொடர் ந்தான்.

நாட்கள் சென்றன. அந்தத் திருடன் ஒருநாள் பொலிஸாரி டம் மாட்டிக் கொண்டான். பொலிஸார் அவனை விசாரணைக்குட்படுத்தினர். இதன்போது பெரியவர் ஒருவரின் வீட்டிலே திருடியதை அவன் ஒத்துக் கொண்டான்.

அந்தப் பெரியவரை சாட்சி சொல்ல பொலிஸார் அழைத்தனர். அதற்கு அவர் சொன்னார்; ''என்னைப் பொறுத்த வரைக்கும் இவன் திருடன் இல்லை; அவனுக்கு ஏதோ பணக்கஷ்டம் ஏற்பட்டது. அதனாலே அவன் என்னிடம் வந்தான்; நான் கொடுத்தேன்– ''நன்றி'' கூறி விட்டு போனான்... என்னப்பா "நன்றி" கூறினீயா இல்லையா? என்றார்.

''ஆமாம் சுவாமி... சொன்னேன்'' என்றான் திருடன் ஆச்சரியத்துடன்...

வேறு குற்றத்திற்காக அவன் சிறைக்குப் போனான்; சிறிது நாட்கள் சென்றபின் வெளியிலே வந்தான்.

வந்தபின் நேராக அந்தப் பெரியவரிடம் சென்றான்; ''குருவே என்னை சீடனாக ஏற்றுக் கொள்ளுங்கள்'' என்றான்.

அதன்பின்னர் அவன் பெரியவரின் சீடனானான்.

அந்தக் காலத்திலே இப்படி நல்லவர்களுடைய நடவடிக்கைகளே கெட்டவர்களை திருத்தியது. இந்தக் காலத்திலே அப்படியெல்லாம் நடக்குமா?

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# எல்லை நிர்ணயம் தொடர்பில் கட்சிகள் கருத்துக்களை முன்வைக்க தவறியுள்ளன

## தேர்தல் ஆணையாளர் குற்றச்சாட்டு

எல்லை நிர்ணயம் தொடர்பில் தேர்தல்கள் திணைக்களம் எவ்வித உத்தியோகபூர்வ தொடர்பினையும் கொண்டிருக்கவில்லை. இது தொடர்பில் கருத்துக்களை முன்வைக்க வேண்டிய அரசியல் கட்சிகள் தமது கருத்துக்களை முன்வைக்க தவறியுள்ளன. இனி எல்லை நிர்ணயம் தொடர்பில் கலந்தாலோசிப்பது பொருத்தமற்ற விடயமாகும். இதனை எதிர்ப்பதோ ஆதரிப்பதோ எனது தொழில் அல்ல. வழி நடத்த வேண்டியது மட்டுமே எனது கடமை ஆகும் என்று தேர்தல்கள் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

கொழும்பு, கொள்ளுப்பிட்டி ரேணுகா ஹோட்டலில் உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் திருத்தச் சட்டம் தொடர்பிலான கலந்துரையாடல் நிகழ்வு ஒன்று நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் இடம் பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து அங்கு பேசுகையில்,

எனது நிர்வாக விடயங்களுக்கு அப்பாற்பட்ட சில விடயங்கள் தொடர்பில் பகிரங்கமாக என்னால் எவ்வித கருத்துக்களையும் தெரிவிக்க முடியாது. எல்லை நிர்ணயம் தொடர்பில் யார் எக்கருத்துக்களை கூறினாலும் நாம் அரசியல் சார்ந்து செயற்பட மாட்டோம். தேர்தல் திணைக்கள உறுப்பினர்கள் கட்சி சார்பாக செயற்படமாட்டார்கள். எல்லை நிர்ணயம் மற்றும் உள்ளூராட்சி தேர்தல்கள் திருத்தச் சட்டம் தொடர்பில் ஓரிரு கட்சிகள் மட்டுமே தமது யோசனை களை முன்வைத்துள்ளன. இது தொடர்பிலான கால அவகாசங்கள் அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்பட்ட போதிலும் அவைகள் இது தொடர்பில் கருத்துக்களை வெளி யிடத் தவறியுள்ளன.

தொழில் அல்லது வேறு நிமித்தமாக இடம்பெயர்ந்து வெவ்வேறு இடங்களில் வாழ்பவர்கள் தேர்தல் இடாப்பில் தமது பெயரையும் குடும்பத்தின் பெயரையும் பதிவு செய்து கொள்ள முடியும். ஆனால் ஏதாவது ஓர் இடத்திலேயே தமது பெயரைப் பதிவு செய்து கொள்வது அவசியமாகும். வெளிநாடுகளில் புலம்பெயர்ந்த தொழிலாளர்களாக இருப்பவர்களும் இந்நாட்டு பிரைஜைகளே. அவர்களுக்கும் வாக்களிக்கும் உரிமையுள்ளது. அதனை தாம் பெற்றுக் கொடுக்க வேண்டும். ஆனால், இலங்கையில் தேர்தல்கள், வருடாந்த திருவிழாக்கள் போல நடைபெறுகின்றமையினால் அப்பணியைச் செய்வது கடினமான தாகவுள்ளது. மேலும் விமானிகள் இந்த நாட்டு தேர்தல்களில் வாக்களிப்பதற்கான வாய்ப்பை இழக்கின்றனர்.

இதனால் தேர்தலுக்கு முன்னமே வாக்களிக்கக்கூடிய புதிய முறைமையை உருவாக்க வேண்டும். இதேபோல வைத்தியர்கள் தபால்மூலமாக வாக்களிப்பதற்கான வாய்ப்பற்றவர்களாக உள்ளனர். எனவே அவர்களுக்கு அவ்வாய்ப்பினை பெற்றுக் கொடுக்க வேண்டும்.

சர்வஜன வக்குரிமையை நியூசிலாந்துக்கு பின்னர் பெற்ற நாடு இலங்கையாகும். ஆசியாவில் முதலாவது சர்வஜனவக்குரிமையை பெற்ற நாடு இலங்கையே. அத்தோடு முதல் பெண் பிரதமரைக் கொண்ட நாடும் இதுவே. ஆனால் இன்றும் இங்கு பால் நிலை சமநிலை காணப்படாமலே உள்ளது. இதனால்தான் பாராளுமன்றில் பெண்களின் அங்கத்துவம் மிக மிக குறைவாக உள்ளது. இந்நிலை மாற்றம் அடைய வேண்டும். பெண்களுக்கு பாராளு மன்றத்தில் 1/4 வீதமான உறுப்புரிமை வழங்கப்பட வேண்டும். அத்தோடு பெற்றோர்கள் தமது பிள்ளைகளு க்கு 18 வயது பூர்த்தியா கும் போது தேர்தலில் வாக்களிப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். அது தொடர்பில் விழிப்புணர்வுகளைவழங்கவேண்டும். ஜனவரி முதலாம் திகதி 18 வயதைப் பூர்த்தி செய்துள்ள இலங்கை பிரஜைகள் குறித்த பிரதேசத்தை குறிப்பிட்ட கால அளவு வாழ்ந்துள்ள எவரும் வாக்காளர் பதிவுக்கு விண்ணப்பிக்க முடியும். மக்கள் தமக்கு வாக்குரிமை உள்ளது என்று தெரிந்தும் அதனை உரிய முறையில் பயன்படுத்த தவறுகின்றனர். அது அரசாங்கத்தினுடையது என்று நினைத்துக் கொண்டுள்ளனர். அது மக்களது உரிமை என்று அவர்கள் உணர்வதில்லை. மேலும் புதிய வட்டாரங்கள், பாதைகள் அமைக்கப்பட்டு புதிய குடியிருப்புக்கள் உருவாக்கப்படுமாயின், அது தொடர்பில் எமக்கு கடிதம் மூலமாக தெரியப்படுத்துங்கள். புதிய பாதைகள் இணைத்துக் கொள்வது தொடர்பில் செயற்பட முடியும் என்றார். (அ–2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 70-120 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 60 | 120 | 160 |
| தக்காளி | 120 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 | 50 |
| கோவா | 90 | 80 | 120 |
| கரட் | 100 | 120 | 160 |
| பூசணி | 40 | 40 | 40 |
| புடோல் | 70 | 60 | 60 |
| வாழைக்காய் | 80 | 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 140-190 | 120 | 120-200 |
| பெரிய வெங்காயம் | 90 | 80 | 80 |
| பாகற்காய் | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 80 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | -- | 100 |
| பயற்றங்காய் | 40 | 60 | 40 |
| லீக்ஸ் | 160 | 160 | 160 |
| பீற்றூட் | 70 | 100 | 120 |
| கறிமிளகாய் | 90 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 250 | 500 | 400 |
| போஞ்சி | 140 | 120 | 140 |
| கத்தரிதம்புள்ள | 80 | 60 | -- |
| கீரை – 1 பிடி | 20 | 40 | 20 |
| தேசிக்காய் | 150 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 40 | 35-40 |
| இராசவள்ளி | 100 | 120 | 120 |

# இராசி பலன்

30.05.2013
(வைகாசி 16, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.54 மணிக்கு
சஷ்டி முன்னிரவு 8.47 மணிவரை
திருவோணம் பிற்பகல் 2.01 மணிவரை
இராகுகாலம் 1.22-2.52 மணிவரை
சுபநேரம் 7.22-8.52 மணிவரை

**மேடம்** ஒளிமயமான எதிர்காலத்திற்கு அத்திவாரம் அமைத்துக் கொள்வீர்கள், உறவினரும் நண்பர்களும் வலிய வந்து உதவ முன்வருவர், முயற்சிகள் கைகூடும்.

**இடபம்** செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், திடீர் பயணங்களால் நன்மையுண்டு, பித்த சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், மனதில் இனம் புரியாத மகிழ்ச்சி குடிகொள்ளும், சொத்துக்களால் நன்மையுண்டு.

**மிதுனம்** கணபதியை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், குடும்பத்தில் கோபமாக பேசிவிட்டு பின்னர் மனம் வருந்த நேரிடலாம், போசன நன்மையுண்டு, வீண் செலவுகள் கூடும்.

**கடகம்** சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும், களஸ்திர நன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு முயற்சிகள் கைகூடும், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**சிங்கம்** சுவாரஸ்யமான நாள், காரிய நன்மையுண்டு, தன்னம்பிக்கை அதிகரிக்கும், உற்சாகமான நாள் , செய்தொழிலில் சிறப்பு பெறுவீர்கள், பகைவர்கள் விலகுவர்.

**கன்னி** தாழ்ந்த சுபாவமுண்டு, பிறருக்கு உதவி செய்யும் எண்ணம் மேலோங்கும், தொழிலை விருத்தி செய்ய முற்படுவீர்கள், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும்நாள்.

**துலாம்** பணத்தேவைகள் பூர்த்தியாகும், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் மேலோங்கும், நண்பர்கள் சந்திப்பால் நன்மையுண்டு, வாகன சுகமுண்டு, முயற்சிகள் கைகூடும்.

**விருச்சிகம்** உடன் பிறப்பின் மூலம் உதவிகள் கிடைக்கலாம், இனிய சம்பவங்கள் நிகழும் வாய்ப்புண்டு, கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் உருவாகும்.

**தனுசு** எதிர்பாராத தன வரவுகள் வந்து சேரலாம், அரசியல் ஈடுபாடு அதிகரிக்கும், இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறி தோன்றும், வாக்கு மேன்மையுண்டு.

**மகரம்** ஆழ்ந்த சிந்தையுண்டு, வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள் , நடைபெறாது என நினைத்த காரியமொன்று நடைபெற்று மகிழ்ச்சி தரும், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள்.

**கும்பம்** சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், புண்ணிய காரியங்களில் நாட்டம் செல்லும், மாலை நேரம் மகிழ்ச்சிக்குரிய சம்பவமொன்று நடைபெறலாம், சயன சுகக்குறைவான நாள்.

**மீனம்** அதிர்ஷ்டகரமான நாள், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும் , பணப்புழக்கம் அதிகரிக்கும், நண்பர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரலாம், விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சிநேகபூர்வ விளையாட்டு விழா; வட்டுக்கோட்டையில் இன்று

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநரின் வழிநடத்தலின் கீழ் வடமாகாணக் கல்வித் திணைக்களத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட வடமாகாணப் பாடசாலை மாணவர்களுக்கும் தென் பகுதி பாடசாலை மாணவர்களுக்குமான வலைப் பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம், துடுப்பாட்டம், கொக்கி, உதைபந்தாட்டம் ஆகிய விளையாட்டுப் போட்டிகள் சிநேகபூர்வமாக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில், இன்று வியாழக்கிழமையும் நாளை வெள்ளிக்கிழமையும் நடைபெறவுள்ளன.

வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் முதலாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இப்போட்டி நிகழ்வில் 500 பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் அதிபர்களும் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



நன்றி: ஜலணட்

# 22 வர்த்தகர்களுக்கு அபராதம் விதிப்பு; நான்கு வர்த்தகர்களுக்கு பிடியாணை

(யாழ்ப்பாணம்)

காலாவதியான பொருட்களை விற்பனை செய்த 4 வர்த்தகர்களுக்கு எதிராக யாழ். நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்துள்ளது.

காலாவதியான பொருட்களை விற்பனை செய்தமை, விலைப்பட்டியல் இன்றி பொருட்களை விற்பனை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் 26 வர்த்தகர்களுக்கு அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது என பாவனையாளர் அதிகார சபையின் யாழ்.மாவட்ட அதிகாரி என்.சிவசீலன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண ஆஸ்பத்திரி வீதி, நாவலர் வீதி, காங்கேசன்துறை வீதி மற்றும் திருநெல்வேலி பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களிலேயே இவ்வாறு பாவனைக்குதவாத, காலாவதியான பொருட்கள் விற்பனை செய்தமை வர்த்தக நிலையங்களை பரிசோதித்தபோதே கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு காலாவதியான பொருட்களை விற்பனை செய்தமை, விலைப்பட்டியல் இன்றி பொருட்களை விற்பனை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் பேரில் வர்த்தக நிலைய உரிமையாளர்கள் 30 பேர் மீதும் சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டது.

இவர்களுக்கு எதிராக யாழ்.நீதவான் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு விசாரணை முடிவில் காலாவதியான பொருட்களை விற்பனை செய்த 7 வர்த்தகர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் 70 ஆயிரம் ரூபாவும் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாமல் பொருட்களை விற்பனை செய்த 17 வர்த்தகர்களுக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் 17 ஆயிரம் ரூபாவும் பொருட்களுக்கு உற்பத்தி மற்றும் காலாவதி திகதி குறிப்பிடாத இரு வர்த்தகர்களுக்கு தலா 2 ஆயிரத்து 500 ரூபா வீதம் 5 ஆயிரம் ரூபாவும் அபராதத் தொகையாக அறவிடப்பட்டுள்ளது.

இதேவேளை, பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 4 வர்த்தகர்களும் மன்றுக்கு சமுகமளிக்காத காரணத்தினாலேயே பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (அ-4)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத் திருவிழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஜூன் மாதம் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சப்பறத் திருவிழாவும் 6 ஆம் திகதி வியாழக்கிழமை வேட்டைத் திருவிழாவும் நடைபெறும்.

மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெற்று அன்றிரவு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (அ)

* * *

(அராலி)

அராலி மத்தி-உலோலை சிட்டி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத் திருவிழா இன்று வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளன.

மஹோற்சவத்தில் ஜூன் மாதம் 5 ஆம் திகதி புதன்கிழமை மாலை வேட்டைத் திருவிழாவும் மறுநாள் 6 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை சப்பறத் திருவிழாவும் 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 8 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (அ)

# கொடி தின வேலைத்திட்டம்

(தும்பளை)

சர்வதேச புகைத்தல் எதிர்ப்புத் தினத்தை முன்னிட்டு யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களிலுள்ள புகைத்தல் எதிர்ப்புத் தினத்தின் கொடி தின வேலைத்திட்டம் நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் ஜூன் மாதம் 10 ஆம் திகதி வரை நடைபெறும் என யாழ். மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் க.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இக்கொடி தின நிகழ்வில் 100 ரூபா, 50 ரூபா, 20 ரூபா, 10 ரூபா ஆகிய கொடிகளும் ஒட்டுப் படங்களும் விநியோகிக்கப்படவுள்ளன.

இதன்மூலம் பெறப்படும் நிதிகள் யாவும் அந்தந்த பிரதேச செயலகங்களிலுள்ள சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றங்களின் ஊடாக அந்தந்தப் பிரதேச மக்களின் வாழ்வாதாரங்களை மேம்படுத்த பயன்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ-3-19)

# பாதீனிய செடிகளை அழிக்க நடவடிக்கை

(நல்லூர்)

கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் பாதீனியச் செடிகளை அழிப்பதற்கு துரித நடவடிக்கை எடுக்கப்படுமென பிரதேச செயலர் ந.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

கோப்பாய் பிரதேச செயலக விவசாய ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் கோப்பாய் பிரதேச மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றபோதே ஏகமனதாக இம்முடிவு எடுக்கப்பட்டது.

இது விடயமாக 31 கிராம அலுவலர் பிரிவுகளிலும் கலந்துரையாடல்களை நடத்துவதுடன் விவசாய சம்மேளன பிரதிநிதிகள், விவசாயிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் மத்தியிலும் கூட்டங்களை நடத்தி சிரமதானங்களின் மூலம் பாதீனியங்களை அழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-3-134)




# 55 இலட்சம் ரூபா செலவில் ஐந்து வேலைத் திட்டங்கள்

(பருத்தித்துறை)

கரவெட்டிப் பிரதேச சபை நிதியிலிருந்து 55 இலட்சம் ரூபா செலவில் ஐந்து வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இதனடிப்படையில் தச்சன் தோப்பு வீதி, மணியம்பாடசாலைவீதி, பிரதேசசபைத்தலைமை அலுவலக வாகனத் தரிப்பிடம், கொல்களம் அமைத்தல், கட்டைவேலி நூலகத்தின் மேல் தளம் அமைத்தல் போன்ற வேலைத்திட்டங்கள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கான ஏற்பாடுகளை வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் பொ.வியாகேசு மேற்கொண்டு வருகின்றார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-3-10)

# கொலைச் சந்தேக நபரின் பிணைமனு நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)

இளைஞர் ஒருவரை வெட்டிக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைதான நபரை பிணையில் விடுதலை செய்ய யாழ். மேல் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

கடந்த 2012 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5 ஆம் திகதி ஊர்காவற்றுறை நாரந்தனை பகுதியைச் சேர்ந்த செல்வராசா அனுராஜ் (வயது 26) என்ற இளைஞர் இனந்தெரியாத நபர்களால் வெட்டிக் கொலை செய்யப்பட்டிருந்தார்.

இக் கொலையின் சூத்திரதாரி என்ற சந்தேகத்தின் பேரில் ஊர்காவற்றுறை பொலிஸாரால் ஜேசுராஜா ஜெயராஜ் என்பவர் கைது செய்யப்பட்டார்.

குறித்த கொலைச் சந்தேக நபர் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு வழக்கு விசாரணைகள் இடம்பெற்று சட்டமா அதிபரின் ஆலோசனையுடன் குறித்த வழக்கு யாழ்.மேல்நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டது.

கொலைச் சந்தே நபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் அவருக்கு பிணை வழங்க கோரி அவரது மனைவி சட்டத்தரணி முடியப்பு றெமீடிஸினூடாக யாழ்.மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் செய்திருந்தார்.

சந்தேக நபரின் மனைவியின் பிணை விண்ணப்பத்தை பரிசீலித்த யாழ்.மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் கொலை குற்றச்சாட்டின் விசாரணை முடிவுறாத நிலையில் சந்தேக நபருக்கு பிணை வழங்க முடியாது எனக் கூறி பிணை மனுவை நிராகரித்துள்ளார். (அ-4)

# கழிவுநீர் கால்வாயை கவனத்தில் எடுங்கள்

(யாழ்ப்பாணம்)

தட்டாதெருவிற்கும் யாழ்.இந்துக் கல்லூரிக்கும் இடைப்பட்ட கனகசபை ஒழுங்கையில் அமைந்துள்ள கழிவு நீர்க் கால்வாய் சுகாதார சீர்கேட்டுடனும் சேதமடைந்தும் காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கனகசபை ஒழுங்கையில் காணப்படுகின்ற கழிவு நீர்க் கால்வாய் சேதமடைந்துள்ளதனால் அதன் ஊடாக வெளியேறுகின்ற கழிவு நீர் வீதியில் தேங்கி நிற்கின்றது.

சில வேளைகளில் இக் கழிவு நீர் துர்நாற்றம் வீசுவதால் அவ்வீதியூடாக பயணிப்போர் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனைக் கவனத்திற் கொண்டு இதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூச்சுவிடக்கூடாது!

## நவநீதம்பிள்ளையை எச்சரிக்கிறது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

**நவநீதம்பிள்ளை இலங்கை வரலாம். ஆனால், அரசியல் பேசக்கூடாது. அத்தோடு விசாரணை அது இது என்ற பேச்சுக்கே இங்கு இடமில்லை என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் வசந்த பண்டார தெரிவித்துள்ளார்.**

அரசாங்கம் விரைவில் காணி, பொலிஸ் அதிகாரங்களை இரத்துச் செய்யும் பிரேரணைகளை பாராளுமன்றத்திற்கு கொண்டு வருவதற்கு உத்தேசித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலாளர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியா, அமெரிக்கா உட்பட மேற்கத்தைய நாடுகள் அனைத்தும் இலங்கையில் வடமாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் அதிக அக்கறை காட்டி வருகின்றன.

கடந்த மார்ச் மாதம் ஐ.நா.மனித உரிமை ஆணைக்குழுவில் அமெரிக்கா எமக்கெதிராக முன்வைத்த பிரேரணையில் வடமாகாண சபை தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்றும் தெரிவித்திருந்தது.

அதனை நடைமுறைப்படுத்துவதற்காக அரசாங்கத்தின் மீது இறுதிக்கட்டத்தில் கடும் அழுத்தத்தை வழங்கவே ஐ.நா.மனித உரிமை ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை இலங்கை வருகின்றார்.

இவ்வாறான அழுத்தங்களுக்கு அரசாங்கம் அடிபணியாது, தைரியத்துடன் தீர்மானங்களை எடுக்க வேண்டும். அத்தோடு ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை இலங்கை வரலாம். வடக்கு, கிழக்கிற்கு விஜயங்களை மேற்கொள்ளலாம். அரச தலைவர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தலாம்.

ஆனால், அரசியல் கருத்துக்களை பேசும் அதிகாரம் அவருக்கு இங்கு கிடையாது. அத்தோடு விசாரணைகள் தொடர்பில் மூச்சு விடக்கூடாது. இங்கு வரலாம், போகலாம் அதுதான் வரையறை.

13 ஆவது திருத்தத்திலுள்ள காணி, பொலிஸ் அதிகாரங்களை இரத்துச் செய்யும்போது பாராளுமன்றத்திற்கு சில பிரேரணைகள் கொண்டு வரப்படும் போதும் மாகாண சபைகளின் அங்கீகாரத்தை மத்திய அரசாங்கம் கோர வேண்டும் என்ற சட்டத்தை நீக்கவும் பிரேரணைகளை அரசாங்கம் கொண்டு வரவுள்ளது.

இவ்வாறான திருத்தங்கள் கொண்டு வந்த பின்னரே வடமாகாண சபை தேர்தலை நடத்த அரசு உத்தேசித்துள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தேர்தலில் போட்டியிடுவதா? இல்லையா? என்பது இப்போது பிரச்சினை அல்ல. அதற்காக பிரிவினைவாத சட்டங்களை வைத்துக்கொண்டு தேர்தலை நடத்த முடியாது என்று மேலும் தெரிவித்தார்.(அ-2)

## பால்மா வகைகளை பரிசோதியுங்கள் அரச மருத்துவர் சங்கம்

(கொழும்பு)

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் பால்மா வகைகளில் காணப்படுகின்ற டைனமைட் என்ற இரசாயன பொருள் தொடர்பில் பரிசீலனை மேற்கொள்ள வேண்டும் என்று அரச மருத்துவர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற அனைத்து பால்மாவிலும் குறித்த பரிசோதனை மேற்கொள்ள வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இது தொடர்பில் ஏற்கனவே உலக சுகாதார ஸ்தாபனத்திடம், இலங்கையின் சுகாதார அமைச்சு வினவி இருந்தது.

இதன்போது இலங்கைக்கு இறக்குமதியாகின்ற பால்மா பொருட்களில் மனிதனின் உடலுக்கு தீங்கு விளைவிக்கும் அளவுக்கு டைனமைட் இரசாயனப் பொருள் காண ப்படுவதில்லை என்று உலக சுகா தார ஸ்தாபனத்தால் தெரிவிக்கப்பட்டது. (அ-2)

## புலித்தடம் தேடி வலைவீச்சு

(கொழும்பு)

மாத்தறை வெசாக் வலயத்திலிருந்து தப்பிச் சென்ற தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினரைக் கைது செய்ய நாடு முழுவதிலும் தேடுதல் வேட்டைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் உள்ளிட்ட ஐந்து பேர் தப்பிச் சென்றுள்ளதாகவும், இவர்களை மீளவும் கைது செய்ய இராணுவத்தினரதும் பொலிஸாரினதும் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்பட உள்ளதாகவும் சிறைச்சாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த புலி உறுப்பினருக்கு பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் ஐந்து ஆண்டு கால கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

தண்டனைக் காலத்தில் ஓராண்டை மட்டுமே புலி உறுப்பினர் கழித்திருந்துள்ளார்.

சிறைச்சாலையில் மிகவும் அமைதியான முறையில் இந்த புலி உறுப்பினர் செயற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரை மாத்தறை வெசாக் வலயத்திற்கு அழைத்துச் செல்ல சிறைச்சாலை அதிகாரிகள் விரும்பவில்லை என்ற போதிலும் அரசியல்வாதியொருவரின் பலத்த வேண்டுகோளுக்கு அமையவே மாத்தறை வெசாக் வலயப் பணிகளில் குறித்த புலி உறுப்பினர் ஈடுபட்டார் எனவும் தெரிய வருகின்றது. (அ-2)


வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:
T.P : 021 321 0815, 021 567 1540

**தொடர்ந்தும் உங்கள் சேவையில்....**

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
கடிதங்கள் அன்பளிப்பு பொருட்கள் உடுபுடவைகள்
CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.
(C-3199)
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392
WESTERN UNION MONEY TRANSFER


## மக்கள் வங்கி
### அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் *31.03.2012* வரை அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள் *2013.06.15* (சனிக்கிழமை) இலிருந்து பின்வரும் மக்கள் வங்கிக் கிளைகளில் காலை 8.30 மணி முதல் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் | ஏலம் விடப்படும் திகதி | ஏலம் விடப்படும் இடம் |
|---|---|---|---|
| யாழ்.ஸ்ரான்லி வீதி. | நாவலர் வீதி. | 15.06.2013 முதல் காலை 8.30 மணி | மக்கள் வங்கி சுன்னாகம் |
| | மானிப்பாய். | | |
| காங்கேசன்துறை | மல்லாகம் | | |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் | | |
| ஊர்காவற்றுறை | --- | | |
| சங்கானை | பண்டத்தரிப்பு | | |
| சுன்னாகம் | கோப்பாய் | | |
| | அளவெட்டி | | |
| சாவகச்சேரி | கொடிகாமம் | | |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி | | |
| | கல்வியங்காடு | | |
| யாழ்.கன்னாதிட்டி | இணுவில் | | |

| கிளைகள் | சேவை நிலையம் | ஏலம் விடப்படும் திகதி | ஏலம் விடப்படும் இடம் |
|---|---|---|---|
| நெல்லியடி | --- | 15.06.2013 முதல் காலை 8.30 மணி | மக்கள் வங்கி பருத்தித்துறை |
| அச்சுவேலி | புத்தூர் | | |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி | | |
| பருத்தித்துறை | புலோலி | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப்போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

(சி-3446)

**பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிரதேச காரியாலயம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**

2013.05.28


**கல்யாண மாலை**

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1981 இந்து (V)
நட்சத்திரம்: சதயம் 3
உயரம் : 5'7"
கி.பா: 15.25
தகைமை/தொழில்: BSc Eng, Engineer
சைவபோசனம்
தொ.இ: B -1872

பிறப்பு: 1986 Non RC (V)
உயரம்: 5'8"
தகைமை/ தொழில்: College Teacher
தொ.இ: B -1878

பிறப்பு: 1980 இந்து (செட்டி)
நட்சத்திரம்: அச்சுவினி 1
உயரம்: 5'6"
கி.பா: 10.75
தகைமை/ தொழில்: O/L, Bussiness
தொ.இ: B -1879

பிறப்பு: 1979 இந்து (விஸ்வகுலம்)
நட்சத்திரம்: உத்தரம் 4
உயரம்: 5'5"
கி.பா: 17.5
தகைமை/தொழில்: Diploma in Accounting, Accountant
தனியார்
தொ.இ: B -1880

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1981 இந்து (குருகுலம்)
நட்சத்திரம்: மிருகசீரிடம் 1
உயரம்: 155 செ.மீ
கி.பா:22.75, 8 இல் செவ்
தகைமை/தொழில்: Diploma in Education, ஆசிரியர்
தொ.இ: G -1875

பிறப்பு: 1979 இந்து (V)
நட்சத்திரம்: திருவாதிரை 1
உயரம் : 5'
கி.பா:63.75
தகைமை/ தொழில்:A/L, சமூக விஞ்ஞானம்
தொ.இ: G-1876

பிறப்பு: 1985 இந்து (Na)
நட்சத்திரம்: ரோகினி 2
உயரம்: 5'2"
கி.பா: 32, 9 இல் சூரி,செவ்
தகைமை/ தொழில்: A/L, கணனி ஆசிரியர்
தொ.இ: G -1877

பிறப்பு: 1975 இந்து (KO)
நட்சத்திரம்: பூரம் 1
உயரம்: 5'3"
கி.பா: 34, 2 இல் செவ்
தகைமை/ தொழில்: இராமநாதன் நுண்கலைப் பீடம் 3ஆவது வருடம்
தொ.இ: G -1885

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் தீ பரவல் சம்பவங்கள் உள்நோக்கம் கொண்டவை

## திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி.குற்றச்சாட்டு

காணமல் போன மசகு எண் ணெய் கப் பல் காரணமாக அமைச் சரவையில் தீ பற்றி யுள்ளதாக ஐக் கிய தேசியக்கட்சியின் பொதுச் செய லாளர் திஸ்ஸ அத்தநாயக்க கொழு ம்பில் நேற்று நடைபெற்ற ஊடகவி யலாளர் சந்திப்பின் போது தெரி வித்துள்ளார்.

ச்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை மூடப்பட்டமையானது படிப்படியான வேலைத்திட்டம் ஒன்றின் பிரதிபலன் எனவும், இதன் நோக்கம் எண்ணெய் சுத்திகரிப்பு பணிகளை அரபு நாட்டில் உள்ள அமெரிக்க நிறுவனத்திற்கு விற் பனை செய்வதாகும். இதற்கான நடவடிக்கைகளில் அரசாங்கம் தற் போது ஈடுபட்டுள்ளது. இது குறித்து அரசாங்கம் உடனடியாக நாட்டிற்கு விடயங் களை அம்பலப்படுத்த வேண்டும்.


கொழும்பு துறைமுகத்தில் ஏற்பட்ட தீ சம்பவம் குறித்த விடயங்களை அரசாங்கம் மூடிமறைத்துள்ளது. குறைந்தளவான இழப்பபே ஏற்பட்டுள்ளதாக கூறிய போதிலும் 50 கோடி முதல் 100 கோடி ரூபா வரையில் இழப்பு ஏற்பட்டுள்ளது.

கொழும்பு கச்சேரியில் ஏற்பட்ட தீயும் இதேபோன்ற ஒரு சம்பவ மாகும். இதுபற்றி உரிய விசாரணைகளை மேற்கொள்வ தில்லை. கச்சேரி அமைந்திருந்த இடத்தை கைப்பற்ற பலர் முயற்சித்து வருகின்றனர்.

கொழும்பு துறைமுகத்தில் ஏற்பட்ட தீ காரணமாக இலங்கையின் ஆடை உற்பத்தித் துறைக்கு சொந்தமான பொருட்கள் பெரு மளவில் அழிந்துள்ளன.

இதனைப் பயன்படுத்தி கொழும்பு துறை முகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணி களை அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு கொண்டு செல்ல அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

அதேபோல் கட்டுநாயக்க விமான நிலை யத்தில் புனரமைப்பு பணி களை மேற் கொள்ளும் போர்வையில் விமான சேவை களை மத்தள விமான நிலையத்திற்கு கொண்டு செல்ல முயற்சித்து வருவதை போலவே, கொழும்பு துறைமுகத்தின் பணி களை அம்பாந்தோட்டைக்கு கொண்டு செல்ல அரசாங் கம் திட்டமிட்டுள்ளது எனவும் அத்த நாயக்க சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)




சித்தி விநாயகர் சனசமூக நிலையம், சன்ஸ்ரார் விளையாட்டுக் கழகம், ரேணுகா முன்பள்ளி ஆகியவை இணைந்து நடத்திய மாபெரும் உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டமும் பரிசளிப்பு நிகழ்வும் அண்மையில் நடைபெற்றது. நிகழ்வின் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் வெற்றியீட்டிய அணிக்கான வெற்றிக் கேடயத்தை வழங்கியதைப் படத்தில் காணலாம்.

# குடிநீர் விநியோக கலந்துரையாடல்

(கரணவாய்)

குடிநீர் விநியோகம் தொடர்பான கலந்து ரையாடல் இன்று வியாழக் கிழமை காலை 10 மணிக்கு கர வெட்டிப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப் பாளர் கி.ஸ்ரீபாஸ்கரன் தலைமையில் நடை பெறவுள்ளது.

இப் பிரதேசத்தில் குடிநீர் வழங்கல் தொடர் பாக ஆராய்ந்து பொருத்தமான தீர்வை அடையும் நோக்கில் யாழ்ப்பாணம், கிளி நொச்சி நீர்விநியோகத் திட்ட குழு வினரால் ஒழுங்கமைக்கப்பட்டுள் ளது.

எனவே இதில் பொதுஅமைப்புக்கள் கலந்து கொண்டு குடிநீர்த் திட்டம் வெற்றி யளிப்பதற்கு ஆலோசனை வழங்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (அ-3-60)

# நெடுந்தீவில் வேற்றுமை அகற்றிய சமரச ஒன்றுகூடல் நிகழ்வு

நெடுந்தீவில் "வேற்றுமை அகற் றிய சமர சம்" என்னும் தொனிப் பொருளில் மக்களின் தேவைகள், கருத்துக்கள், பிரச்சினைகள் தொட ர்பில் ஜனாதிபதியின் ஆலோசகரும் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ரஜீவ விஜேசிங்க தலைமையில் கலந்துரை யாடலொன்று நடைபெற்றது.

நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் அண் மையில் நடைபெற்ற கலந்துரையாடலில் கடற் றொழிலாளர்களுக்கு வாழ்வாதார உத விகள், போக்குவரத்து, விவசாயிகளின் பிரச்சினை கள், வீதிகள், மின்சாரம், குடிநீர் உள்ளிட்ட பல் வேறு விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன.

இதன்போது கருத்துத் தெரிவித்த ரஜீவ விஜேசிங்க,

தொழில்சார் பயிற்சி நிலையங்களை அமைப்பதற்கும் போக்கு வரத்து சேவைகளை மேம்படுத்துவதற்கும் உரிய ஆலோசனை களை வழங்கியதோடு இரண்டு விதமான அமைப்புக்களை நெடுந்தீவில் நிறு வுதல் வேண்டும்.

ஒன்று அபிவிருத்தி சார்ந்ததாகவும் மற் றையது மக்களின் பாது காப்பு பற்றியதாகவும் இருத்தல் வேண்டும் எனவும் மக்களின் கோரிக்கைகள் தொடர்பில் தாம் ஜனாதிபதி யின் கவனத்திற்கு கொண்டு செல்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதன்போது நெடுந்தீவு பிரதேச செயலர் ஆழ்வாள்பிள்ளை சிறி, நெடுந்தீவு பிரதேச சபை தவிசாளர் தானியேல், நெடுந்தீவு கழகங் கள், மற்றும் சங்கங்களின் பிரதிநிகள், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் அரச அலுவல கங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், கடற்படை மற்றும் பொலிஸ் உத்தியோகத் தர்கள் என பல துறைகளைச் சேர்ந்தவர்களும் பங்குபற்றினர். (அ-2)

# வருடாந்த ஒன்றுகூடல்

யா/வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் உயர் தர மாணவர்களின் வரு டாந்த ஒன்று கூடலும் "இந்து விழிகள்" சஞ்சிகை வெளியீடும் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் கல் லூரி அதிபரின் தலைமை யில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல் கலைக்கழக நிதிமுகாமை த்துவ வணிக பீடத்துறைத் தலைவர் ஆறுமுகம் சுப்பிர மணியம் கலந்து கொள் ளவுள்ளார். (அ-5)

# கண்ணீர் அஞ்சலி



மு.சுந்தரேசன் மு.தங்கம்மா சு.சிவசித்திரலீலா சு.தாமிரா

*கடந்த 20.05.2013 அன்று சென்னையில் காலமான திருநெல்வேலி கலாசாலை வீதியைச் சேர்ந்த எம் சொந்தங்களை நினைவு கூருகின்றோம்.*

கல்லில் வடிவானீர் இறைவா
காணாப் பொருளானீர்
நல்ல மனிதர்களை - ஏன்
நரக வழிவிட்டீர்
சொல்லும் பொருளுமேது
உன் திருவடி தனை தொழுதோம்

**கல்லடி இளைஞர்கள், திருநெல்வேலி.**

(சி-3458)

# மருந்தேற்றல் இடம்பெறாது

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை பொதுச் சுகா தார பிரிசோதகர் பிரிவுக்குட்டப்பட்ட இடங் களில் இன்று இடம்பெறவிருந்த வளர்ப்பு நாய்க ளுக்கு தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படமாட்டாது என யாழ். மாநா கரசபை சுகாதார வைத்திய அதிகாரி வைத் தியர் அ.எ.ஞான ஜோதி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக் குள் அமைந்த வண்ணார் பண்ணை பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நோய் த்தடுப்பூசி (A.R.V) இன்று வியாழக்கிழமை ஞானக் குழந்தை பாலர் பாடசாலை அரசடி வீதி, ஐயனார் கோவி லடி, முருகமூர்த்தி வீதி, கலை வாணி சனசமூக நிலையம் ஆகிய இடங் களில் வைத்து விலங்கு விசர் நோய் தடுப் பூசி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த தினத்தில் மேற்படி வளர்ப்பு நாய்களுக்கு ஊசி வழங்கும் நடவடிக்கை மேற் கொள்ளப்படமாட்டாது என அறிவிக்கப் பட்டுள்ளது. (அ-5)

# மரண அறிவித்தல்



## நாகேந்திரன் கிருஷ்ணகலாநிதி

யாழ். கல்வியங்காடு விளையாட் டரங்கு வீதியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட நாகேந் திரன் கிருஷ்ணகலாநிதி அவர்கள் **26-05-2013** ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், மாணிக்கம் அன்னம்மா (பரிமளம் - ஓய்வு பெற்ற ஆசிரியை) தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், திரு. திருமதி சரவணமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், நாகேந்திரன் அவர்களின் அன்பு மணைவியும், கம்சப் பிரியா அவர்களின் அன்புத் தாயாரும். கிருஷ்ணதயாநிதி, காலஞ் சென்ற உதயகுமார், ரமேஷ்குமார்(பாபு - கனடா) ஆகியோ ரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சுப்பிர மணியம் அவர்களின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வர்களான ரத்தினம், பரமேஸ்வரி மற்றும் லக்ஷ்மி (கனடா) ஆகியோ ரின் அன்புப் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (30-05-2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் செம்மணி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப் படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வ ரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நாகேந்திரன் (கணவர்)
தொ.பே: 0779860613 (சி-3460)

தகவல்:
ரமேஷ்குமார் (பாபு - கனடா)

# அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம் (ஆனைக்கோட்டை)
வட்டாரம் - 04, ஆதன இலக்கம் : 46
யாழ்.மானிப்பாய் வீதி, (பந்தியடி)

வட்டாரம் 04, யாழ்.மானிப்பாய் வீதி (பந்தியடி) ஆதன இலக்கம் 46 இல் அமைந்துள்ள (உறுதிப்படி வட மாகாண யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப் பகுதி மானிப்பாய் கோவில்பற்று சுதுமலை இறை 'கரகத்தனை' எனும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு 04 கொண்ட ஆதனம்) இவ்வாதனமானது சுதுமலை தெற்கைச் சேர்ந்த திருவிளங்கம் சரவணபவானந்தன் என்பவரால் சீதன உறுதி மூலம் சிவகுமார் பெண் கோகிலா என்பவர்களுக்கு குறித்த ஆதனமானது பிரசித்த நொத்தாரிஸ் மாணிக்கம் தியாகராசா முகதாவில் நிறைவேறிய 5166 ஆம் இலக்க 18.09.2002 ஆம் திகதிய சீதன உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்குச் சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளர். இவ் கரகத்தனை நிலப்பரப்பு 04 இவ்வாதனத்தில் 5166 இலக்க உறுதியில் நிலப்பரப்பு 8 இல் சொரியலாக அரைவாசிக்கு பதிலாக நிந்த ஆட்சிப்படி தெற்குப் பக்கமாக நிலப்பரப்பு 04 உள்ள ஆதனத்தில் உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள் கின்றேன். அவ்வாறு யாராவது எவ்வித உரிமையும் 14 நாட்களுக்குள் கோரப்படாதுவிடத்து இவ்வாதனம் சிவகுமார் பெண் கோகிலா என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

*தவிசாளர்,*
*வலி.தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.* (2878)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை மற்றும் மூதூர் படுகொலையை விசாரித்த குழுவுக்கு என்ன நடந்தது?

## சம்பந்தன் எம். பி கேள்வி

(திருகோணமலை)

**திருகோணமலையில் மாணவர்கள் ஐவர் கொலை செய்யப்பட்டமை, மூதூரில் தொண்டு நிறுவன ஊழியர்கள் 17 பேர் படுகொலை செய்யப்பட்டமை போன்ற மோசமான மனித உரிமை மீறல்களை விசாரிக்க நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவுக்கும் அதன் செயற்பாடுகளுக்கும் என்ன நடந்தது என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர்இரா. சம்பந்தன் கேள்வி எழுப்பியுள்ளார்.**


நாடாளுமன்றத்தில் 2008 ஆம் ஆண்டு விவாதிக்கப்பட்ட குற்றச் செயல்களால் பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளை பாதுகாப்பதற்காக கொண்டுவரப்பட்ட சாட்சிகளை பாதுகாக்கும் சட்ட மூலத்திற்கு என்ன நடந்தது என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

அந்த சட்டமூலத்தின் பிரதியும் ஹன்சாட் பிரதிகளும் என்னிடம் உள்ளன என்று தெரிவித்த அவர், இது தொடர்பிலான விவாதம் கடந்த வருடம் ஜூன் மாதம் 19 ஆம் திகதி வரையிலும் நடைபெற்றது என்று தெரிவித்துள்ளதுடன், அந்த சட்ட மூலத்தை அரசாங்கம் கைவிட்டு விட்டதா என்றும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

திருகோணமலையில் மாணவர்கள் ஐவர் படுகொலை செய்யப்பட்டமை, மூதூரில் தொண்டு நிறுவன ஊழியர்கள் 17பேர் படுகொலை செய்யப்பட்டமை போன்ற மோசமான மனித உரிமை மீறல்களை விசாரிக்க நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் தொழிற்பாட்டை அவதானிக்கவென அரசாங்கம் நியமித்த சர்வதேச சுதந்திர முக்கியஸ்தர்கள் குழுவின் அழுத்தம் காரணமாகவே இந்த சாட்சிகளைப் பாதுகாக்கும் சட்டமூலம் கொண்டு வரப்பட்டதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள் ளார்.

ஆனால் இலங்கை அரசாங்கத்தின் பராமுகம் மற்றும் அசமந்த போக்கினால் விசனமடைந்த இந்தக் குழு நாட்டைவிட்டே வெளியேறி விட்டது.

அந்த ஆணைக்குழுவுக்கும் அதன் செயற்பாடுகளுக்கும் என்ன நடந்தது என்றும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார். (அ-2)



# சார்க் நாடுகளின் கல்விக் கருத்தரங்கு

தெற்காசிய நாடுகளின் மனிதவள அபிவிருத்தி தொடர்பான தேசிய கல்விக் கருத்தரங்கு இம்முறை இலங்கையில் நடைபெற்று வருகின்றது.

கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நேற்று முன்தினம் ஆரம்பமான இந்தக் கருத்தரங்கிற்கு கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தலைமை வகித்தார்.

தெற்காசிய நாடுகளின் பிரதிநிதிகள் மட்டுமன்றி சார்க் நாடுகளின் ஆணையாளர்கள், தூதுவர்கள் மற்றும் பிரமுகர்கள் எனப் பலரும் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர். (அ-2)

# ஹெரோயினுடன் பாக். பிரஜை கைது

ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் பாகிஸ்தான் பிரஜை ஒருவரை ஒறுகொடவத்தை பகுதியில் கடந்த திங்கட் கிழமை இரவு ஹலால் திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இவர் 3 மில்லியன் ரூபா பெறுமதியான ஒரு கிலோகிராம் ஹெரோயினை வைத்திருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

லாகூரை சேர்ந்த சந்தேகநபர் பாகிஸ்தான் செய்தி முகவரகம் ஒன்றில் பணியாற்றுகின்றார்.

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் இவர் 20 தடவைகள் பயணம் செய்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# கிளிநொச்சியில் தொடரும் விசாரணை கெடுபிடிகள்

(கிளிநொச்சி)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட கிளையின் செயலாளரும் ஓய்வுநிலை கிராம அலுவலருமான சு.பசுபதிப்பிள்ளை கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை பயங்கரவாத குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் வவுனியாவுக்கு அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

மாகாண சபைத் தேர்தலில் குதிக்கப் போகிறீரா? எனவும் முன்னர் விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்துள்ளீர். இப்போது ஏன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சேர்ந்து வேலை செய்கிறீர்? என அதட்டும் வகையில் விசாரணை செய்துள்ளனர்.

தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து ஜனநாயக அரசியலில் ஈடுபட்டால் மீண்டும் மீண்டும் விசாரணைகளுக்கு வரவேண்டியிருக்கும். இது இத்துடன் முடிந்து விட்டதாக கருத வேண்டாம் என கூறியனுப்பியுள்ளனர்.

அண்மைக்காலமாக கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவப் புலனாய்வாளர்கள் வீடு வீடாகச் சென்று வாக்காளர் கணக்கு எடுப்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களைக் கைது செய்வது, விசாரணைகளுக்கு அழைப்பது, அச்சுறுத்துவது போன்ற நடவடிக்கைகள் அதிகரித்துள்ளன.

இதேபோன்று கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட முன்னாள் கல்விப் பணிப்பாளர் த. குருகுலராசாவும் கிளிநொச்சி இராணுவத் தளபதி உதய பெரேராவால் இரணைமடுதலைமையகத்திற்கு அழைக்கப்பட்டு தேர்தலில் ஈடுபடப் போகிறீர்களா? என விசாரிக்கப்பட்டுள்ளார்.

கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் சேதுபதியும் வவுனியா குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார். தமிழ் மக்கள் ஜனநாயக ரீதியில் இந்த நாட்டில் செயற்படக் கூடாது என்பதில் அரசு முழுக் கவனம் செலுத்தி வருவதையே இச் செயற்பாடுகள் காட்டுவதாக கிளிநொச்சி மக்கள் கவலை கொண்டுள்ளனர். (அ-4)

# கணனிப் பயிற்சி

(கரவெட்டி)

கரவெட்டிப் பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் இலவச MS Office கணனிப் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் பங்குகொள்ள விரும்பும் பயனாளிகள் எதிர்வரும் ஜூன் மாதம் 3 ஆம் திகதிக்கு முன்பதாக தங்கள் பெயர் விபரங்களைக் கரவெட்டிப் பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் பதிவு செய்யுமாறு பிரதேச செயலர் எஸ்.சிவசிறி கேட்டுள்ளார். (அ)

# கொழும்பு துறைமுக தீ விபத்தில் பெறுமதியான பொருட்கள் நாசம்

## 500 மில்லியன் ரூபா என மதிப்பீடு

கொழும்பு துறைமுகத்தில் அண்மையில் ஏற்பட்ட தீ விபத்தினால் 500 மில்லியன் ரூபா பெறுமதியான பொருட்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக கணிப்பிடப்பட்டுள்ளது.

சேதம் ஏற்பட்டுள்ள பொருட்கள் அனைத்தும் இறக்குமதி செய்யப்பட்டன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தீ விபத்தில் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் சேதமடைந்த 338 பேரின் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இவ்வாறு 400 இறக்குமதியாளர்களின் பொருட்கள் சேதமடைந்துள்ளன.

இந்தத் தீ விபத்து ஊர் நாச வேலை என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ள நிலையில் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். பணி இடை நிறுத்தத்தில் இருக்கும் முகாமையாளர் ஒருவர் இந்த தீ வைப்புக்கு காரணமாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

குறித்த சம்பவம் தொடர்பில் மூன்று நபரிடம் விசாரணை நடத்தப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகிறது. (அ-2)

# பௌத்த தர்மத்திற்கு ஏற்பவே அரசியலமைப்பை உருவாக்குங்கள்

## பொதுபல சேனா அமைப்பு

(கொழும்பு)

பௌத்த தர்மத்திற்கு அமைவான முறையில் அரசியல் அமைப்பு உருவாக்கப்பட வேண்டுமென பொதுபல சேனா அமைப்பு தெரிவித்துள்ளது.

மாடுகள் வதை செய்யப்படுவதற்கு எதிர்ப்பு வெளியிட்டு தீக்குளித்த போவத்தே இந்திரரட்ன தேரரின் மறைவை இழிவுபடுத்துகின்றனர் என பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் குற்றம் சாட்டியுள்ளார்.

மிருகவதை மற்றும் மத மாற்றத்திற்கு எதிராக பாராளுமன்றில் சட்டம் இயற்றப்பட வேண்டும். மிருக வதைக்கு எதிராக பல்வேறு வழிகளில் போராட்டங்கள் நடத்தப்பட்டும் எதுவித பலனுமில்லை.

எனவே, நாட்டின் அரசியலமைப்பு பௌத்த மத தர்மத்திற்கு அமைவான வகையில் உருவாக்கப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தினார். (அ-2)



பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் 2.6 கோடி ரூபா செலவில் கிளிநொச்சியில் அமைக்கப்பட்டுள்ள இலங்கை நிலஅளவை திணைக்களத்தின் பிரதேச நில அளவைத் திணைக்கள அலுவலகத் திறப்புவிழா அண்மையில் நடைபெற்றது. இத்திறப்பு விழாவில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி மங்கல விளக்கேற்றுவதையும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, அமைச்சர் ரிசாத் பதியுதீன் மற்றும் வடமாகாண ஆளுநர் ஆகியோர் திறந்து வைக்கப்பட்ட கட்டடத்தை பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என். குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் கடன் சுமை மக்களையே சாரும்-பசில்



(படங்கள்: சிவநகர், மல்லாவி செய்தியாளர்)

(புதுக்குடியிருப்பு)

**வட பகுதியில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது. வெளிநாடுகளில் கடன்களைப் பெற்று இந்த அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்தத் கடன் சுமை நாட்டிலுள்ள மக்கள் அனைவரையுமே சாரும் என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட புதுக்குடியிருப்பு பிரதேச வைத்தியசாலை மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் ஆகிய கட்டடங்கள் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டன.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 30 வருட கால யுத்தத்தில் நாட்டின் பல பகுதிகள் பாதிக்கப்பட்டிருந்தபோதும், வட பகுதிக்கெனவே பெரும் செலவிலான அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வடமாகாணத்திலுள்ள முழுச் சனத்தொகையே ஜாஎல பிரதேசத்தின் சனத்தொகை. எனினும் ஜாஎலவிலோ அல்லது வத்தளையிலோ அமைந்திருக்கும் பிரதேச செயலகங்களின் கூரைகள் திருத்தப்படவில்லை. எனினும் வடபகுதியில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது.

வெளிநாடுகளில் கடன்களைப் பெற்றே இந்த அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. இந்தக் கடன்சுமை நாட்டிலுள்ள மக்கள் அனைவரையுமே சாரும்.

வட பகுதி மக்களால் தெரிவு செய்யப்பட்டு பாராளுமன்றத்துக்கு அனுப்பப்பட்ட பிரதிநிதிகள் தமது மக்களுக்காக எந்தவொரு சிறு உதவியையேனும் செய்யவில்லை.

இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் 50 ஆயிரம் வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு ஜனாதிபதி முயற்சித்தபோது வடமாகாண மக்களின் பிரதிநிதிகளாக பாராளுமன்றம் சென்றவர்கள் அதனைத் தடுத்தனர். பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்காக வெளிநாடுகள் சென்று நாம் பேசியபோது அவற்றையும் அவர்கள் தடுத்தனர்.

உங்களுக்கு உதவி செய்வது அரசாங்கமா அல்லது அவர்களா? என்பதை நீங்களே தீர்மானிக்க வேண்டும். உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்தியுங்கள். உங்கள் பிள்ளைகள், தாங்கள் பொறியியலாளர்களாகவோ வைத்தியர்களாகவோ வர வேண்டும் என்று நினைக்கின்றார்களா? அல்லது கடந்த காலத்தைப் போன்று ஆயுதங்களைத் தூக்க வேண்டும் என்று நினைக்கிறார்களா? பெற்றோர்களாகிய நீங்களே அவற்றை உறுதி செய்ய முடியும்.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திப் பணிகளைத் திறந்து வைத்த அமைச்சர் பிற்பகல் கிளிநொச்சி சென்று அங்கு புதிதாக அமைக்கப்பட்ட நில அளவையாளர்கள் திணைக்கள கட்டடத்தையும் திறந்து வைத்தார். (அ-2)




## உர விநியோகத்தை துரிதப்படுத்துங்கள்

(புளியம்பொக்கணை)

கல்மடு குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கை ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாதங்கள் பூர்த்தியான நிலையிலும் விவசாயிகளுக்கான உர விநியோகம் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

எனவே, விதைத்து இரண்டு மாதங்களுக்குள் சகல உர வகைகளும் பயிருக்கு பயன்படுத்த வேண்டியுள்ளதால் விவசாயிகள் கடைகளில் அதிக விலை கொடுத்தே உரங்களை கொள்வனவு செய்ய வேண்டியுள்ளது.

எனவே, சம்பந்தப்பட்ட அமைப்பினரும் அதிகாரிகளும் உரிய காலப்பகுதியில் உர விநியோகம் மேற்கொள்ள வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (செ-3-263)

## இறால் கொள்வனவு செய்யலாம்

(ஆனையிறவு)

கரைச்சி வடக்கு பிரதேசத்திற்கு உட்பட்ட கடற்கரையில் மீன், இறால் கொள்வனவு செய்பவர்கள் கரைச்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாசத்திடம் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-264)

## புதிய நிர்வாகத்தை தெரிவு செய்க


(சிவநகர்)

பழைமையும் தொன்மையும் வாய்ந்த உருத்திரபுரீஸ்வர சிவன் கோவில் நிர்வாக சபை சரியான முறையில் செயற்படவில்லை என இப்பகுதி மக்களால் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

யுத்தசூழலின்பின்புஇக்கோவிலை புனரமைக்கும்நடவடிக்கைகள்எவையும் எடுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந் நிர்வாக சபைக்கு நீண்ட காலமாகியும் பொதுச்சபை கூட்டப்பட்டு புதிய நிர்வாகத் தெரிவும் இடம் பெறவில்லை.

இதனால் கணக் கறிக்கைகள் வெளிக் கொண்டு வரப்படவில்லை எனவும் மக்களால் தெரிவிக்கப்படுகிறது. (அ-3-254)



வள்ளுவர்புரத்திலிருந்து தேராவிலுக்குச் செல்லும் வீதியில் அமைந்துள்ள பாலம் யுத்த சூழலின்போது அவசரமாக அமைக்கப்பட்டதாகும். இப்பாலமானது பல வருடங்கள் கடந்தும் இன்னும் ஆபத்தான நிலையிலேயே காணப்படுகின்றது. இப் பாலத்தை படத்தில் காணலாம். (படம்:- றெட்பானா செய்தியாளர்)

## வீதி பாதுகாப்புக் குறியீடுகளை அமைக்குமாறு கோரிக்கை

(புளியம்பொக்கணை)

பரந்தன்-பூநகரி வீதிக்கு வீதிப் பாதுகாப்பு குறியீடுகள் இடப்படாது புனரமைப்பு வேலைகள் இடம்பெற்று வருவதாக பயணிகளால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்குறித்த வீதி புனரமைக்கப்பட்டு வரும் நிலையில் பல இடங்களில் வீதிப் பாதுகாப்பு குறியீடுகள் அமைக்கப்படவில்லை. இதையிட்டு பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு வீதிப் பாதுகாப்பு குறியீடு அமைக்கப்படாமை காரணமாக போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு விபத்துக்களை எதிர்கொள்ள வேண்டிய அபாய நிலை காணப்படுகின்றது.

எனவே, துறைசார்ந்த அதிகாரிகள் இவ்விடயத்தைக் கவனத்தில் கொண்டு உடன் நடவடிக்கை எடுத்து வீதிப் பாதுகாப்பு குறியீடுகளை அமைத்து உதவுமாறு பயணிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-3-263)

## கிளிநொச்சியில் யூரியா உரத்திற்கு பெரும் தட்டுப்பாடு

(புளியம்பொக்கணை)

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோக பயிர்ச் செய்கை மற்றும் மேட்டு நிலப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் யூரியா உரத் தட்டுப்பாடு நிலவுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேற்குறித்த மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் சிறுபோக பயிர்ச் செய்கை மற்றும் மேட்டு நிலப் பயிர்ச் செய்கையை ஆரம்பித்துள்ள நிலையில் இயற்கை அனர்த்தம் மற்றும் கட்டாக்காலி கால் நடைகளால் பயிர்கள் நாசமாக்கப்படுகின்றன. இந்நிலையில் யூரியா உரத் தட்டுப்பாடு பெரும் பிரச்சினையாக உள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள கமநல நிலையங்களிலும் யூரியா உரத்திற்கு தட்டுப்பாடு நிலவுகின்றது.

புளியம்பொக்கணை கமநல சேவை நிலையத்தில் யூரியா உரம் குறைந்த அளவிலேயே உள்ளது.

இராமநாதபுரம் கமநல சேவை நிலையத்தால் விவசாயிகளுக்கு யூரியா உரம் வழங்கப்படவே இல்லை.

இதனால் அங்குள்ள கடைகளிலும் யூரியா உரத்திற்கு தட்டுப்பாடு நிலவுகின்றது.

வாழ்வாதாரத் தொழிலாக பயிர்ச் செய்கையை மேற்கொண்டு வரும் விவசாயிகள் உரத் தட்டுப்பாட்டால் பயிர்ச்செய்கையில் நட்டம் ஏற்படுமோ என்ற அச்சத்துடன் உள்ளனர்.

எனவே, துறைசார்ந்த அதிகாரிகள் இவ்விடயத்தைக் கவனத்தில் கொண்டு உரிய நடவடிக்கை எடுத்து ஆவன செய்யுமாறு விவசாயிகள் கோரிக்கைவிடுத்துள்ளனர். (அ-3-263)

## இரண்டு வருடங்களாக புனரமைக்கப்படாத வீதி

(றெட்பானா)

தேராவில் பிரதான வீதி இரண்டு வருடங்கள் கடந்தும் புனரமைப்பு பணிகள் எதுவும் ஆரம்பிக்கப்படாமல் கற்குவியல்களாக காணப்படுகின்றது.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவினால் இவ் வீதிக்கான புனரமைப்புப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இதன் ஆரம்பகட்ட வேலைகளாக கொட்டப்பட்ட கற்குவியல்கள் இன்னமும் காணப்படுகின்றன. இவ்வாறு கற்குவியல்கள் கொட்டப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் இவ்வீதியில் வாகனங்களின் போக்குவரத்தினால் பரவப்பட்ட கற்கள் வீதியை விட்டு எங்கும் சிதறியுள்ளதால் வீதி மீண்டும் பழைய நிலையை அடைந்து முன்னரையும் விட மிக மோசமான நிலையில் காணப்படுகின்றது.



எனவே, இங்கு வீதியின் நிர்மாணப் பணிகளுக்காக கொட்டப்பட்ட கற்கள் வீண் விரையமாகின்றன. மேற்படி வீதியின் இந்த அவல நிலைக்கு அதிகாரிகளின் அசமந்தப் போக்கே காரணம் என்று மக்கள் மத்தியில் பல குறைகள் சுட்டிக்காட்டப்பட்டு வருகின்றன.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்வீதியின் புனரமைப்புப் பணிகளை விரைந்து மேற் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (அ-3-260)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சை மலைப் பயணம்



## ஆன்மீகம் 19

அன்னை சித்தர் இராஜ்குமார் குருஜி

29ஆம் திகதியின் தொடர்ச்சி...

அரசியல்வாதிகள் அராஜகவாதி யாயிட்டாங்க! ஏழைகள் என்று கூறி சுதந்திரப்போராட்டத்தை நடத்தி னார்கள்! ஆனால், இன்று நம்மை நாமே ஆளுகிறோம் என்று சொல் கிறோம்! ஆனால் ஓட்டுப்போடவே காசு கொடுத்து பழக்கி விட்டார் களே! அதனால் தகுதியற்றவர்களுக்கு பதவி கிடைத்து விடுகிறது. இதற் கெல்லாம் என்ன காரணம்? என்று கேட்டதும் சித்தர்பெருமான் புன்ன கையுடன் மீண்டும்பேசத் துவங்கி னார். ராஜா! முன்பே உனக்கு இதற்கெல்லாம் பதில் சொல்லி யிருக்கிறேன். இப்போது நடப்பது பறவை, முருகங்களின் ஆட்சி! மிருகங்களுக்கிடையே தர்ம நியாயம் எதிர்பார்க்கமுடியுமா? பறவைகளும் சுயநலத்தின் அங்கங்கள்தானே! வலுத்தவன் இளைத்தவனை வெல் வான்! தடி எடுத்தவன் தண்டல்கார ன்னு சொல்லுவாங்கல்ல! அது மாதிரித்தான் அரசியல்வாதிக! எரியிற வீட்டில் புடுங்கிய வரை லாபம் தானே என்று அலைபவர்கள் தானே, பதவிக்கா பஞ்சமா பாதங்களைப் புரிந்து மக்களைச் சுரண்டும் போது மட்டும், எதிர்கட்சி ஆளும் கட்சி என்ற பேதங்களை மறந்து, கூட்டுக் கொள்ளை அடிப்படை பலமுறை நிதர்சனமாக மக்களுக்கு தெரிந்திருந் தும் அவர்களுக்கு அதுபற்றிக் கவலையே இல்லை. தானும் தன் குடும்பமும் வாழ வாழ்வதுதான் தனிமனிதனின் தற்கால வாழ்க்கை முறை! வரப்புயர நீர் உயரும்! நீர் உயர நெல் உயரும்! நெல் உயர குடி உயரும்! குடி உயர கோண் உயர்வான்! நீர் உயரனும்னா காலம் தவறாமல் பருவமழை சுபீட்சத்தை அள்ளித்தரும் வகை யில் பெய்யனும்! அப்படி மழை பொழியனும்னா ஆள்பவன் நீதி தவறாமல் தருமம் தவறாமல் குடி களைக் காப்பவனாக நேசிப்ப வனாக இருக்கணும்! ஆனா இப்ப




அப்படியா நடக்குது? என்றார். அப்போது நடிகர் எம்.ஜி.ஆர். ஆட்சி நடந்துகொண்டிருந்தது. அதனால் திடுக்கிட்டநான் ஐயா எம்.ஜி.ஆர் பெரிய கொடை வள்ளல். தானிருந்த கட்சி தவறான பாதையில் செல்வ தாகக்கூறி தானே புதுக் கட்சி கண்டார். அவர் ஆட்சி நல்லாதானே நடக்குது என்றேன்! ராஜா நான் முன்பே ராமலிங்க சாமியை பார்த்து ஒருவர் இப்போதுதான் ஒரு மனிதனைக் கண்டேன் என்று மகிழ்ந்தாரே அதைப்போல் மனிதர்களும் அவ்வப் போது தோன்றுவார்கள்! அப்படிப் பட்டவர்கள்தான் எம்.ஜி.ஆரும் கலைஞ ரும். நல்லது செய்ய முயன்றவர்கள் கூட இருக்கும் கட்சிக்காரர்கள் என்ற கூட்டம் அவர்களது லட்சியங்களை அலட்சியப்படுத்தின. இப்போது ஆளும் எம்.ஜி.ஆர் என்ன முயன்றும் அவரால் இயங்க முடி யாது! அவரோ நடிகர். அவரைச்சுற்றி இருப்பவர்கள் அவ் வளவு பேரும் அவரை விட நடிப்புத் திறமை உள்ளவர்கள். வாழ்க்கை யிலே நடிக்கும் வல்ல வர்கள்! இதனால் இன்று அவரின் உள்ளம் படாத பாடு படுகிறது. ஏதாவது நல்லது செய்யணும்னு தான் மதிய உணவுத் திட்டத்தைக்கொண்டு வந்தார். ஆனால் பலன் எதிரடியாகத் தானே இருக்கு! பள்மணி அடித்தவுடன் படிக்க ஓடும் பிள்ளைகள் இன்று சாப்பாடுத் தட்டைத் தூக்கிக்கொண்டல்லவா ஓடு கிறார்கள்.

இதனால் அந்த பிள்ளைகளைப் பெற்ற தகப்பன்களுக்கு சோறு போடும் காசுமிச்சம் ஆகிறது. ஆனால், அதை எடுத்துக்கொண்டு போசாராயக் கடைகளில் அல்லவா கொட்டுகிறார் கள்! எம்.ஜி.ஆருக்கு மது என்பது விஷம் போல வெறுக்கும் விஷயம் என்று சொல்லுவார்கள்! ஆனால், இன்று அரசாங்கம் நடத்த அந்த காசு தானே தேவைப்படுகிறது! காந்தியின் கொள்கைகளை அநேகம் பேர் மறந்து விட்டபோது இவர் என்ன செய்வார்... மொத்தத்தில் குழந்தை களைப் பெறறோர் இருந்தும் அனா தைகளாக்கி விட்டமே அரசாங்கம்! அரசு செங்கோல் அடமானத்தில் அல்லவா இருக்கிறது! என்று நிறுத் தியவர் இந்த நிலைமைகளைக் கண்டு வேதனைப்பட்டுக்கொண்டு இருக்கும் அவர் உடல் விரைவில் நோய்களமாக மாறப்போகிறது என்று கூறியவாறு சித்தர்பெருமான் ஒரு மூலிகைப் பொடியை என் கையில் போட்டு சாப்பிடு என்றார். நானும் யந்திரமாகச் செயற்பட்டு அந்த பொடியை வாயில் போட்டுக் கொண்டேன்.

தொடரும்

# நாடு, வென்றவர்களுக்கும் தோற்றவர்களுக்கும் இடையே இரண்டாகப் பிளவுபட்டிருக்கின்றது

கடந்தவாரம் கொழும்பில் யுத்த வெற்றி கொண்டாடப்பட்ட அதேநாளில் யாழ்ப்பா ணத்திலும் வவுனியாவிலும், இறுதிக்கட்டப் போரில் கொல்லப்பட்டவர்களுக்கு விளக் கேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. நாட்டின் ஒரு பகுதியில் வெற்றியாகக் கொண்டாடப் பட்டது. இன்னொரு பகுதியில் துக்கமாக அனுஷ்டிக்கப்பட்டது. அதாவது, நாடு வென்ற வர்களுக்கும் தோற்றவர்களுக்கும் இடையே இரண்டாகப் பிளந்துவிட்டிருக்கிறது என்று பொருள். ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னரும் நாடு பிளவுண்டேயிருக்கிறது. வென்றவர்கள் கூறுகின்றார்கள்: நாட்டைப்



பிரிக்க முயன்ற சக்திகளைத் தோற்கடித்து நாட்டை ஒன்றிணைத்து விட்டதாக. ஆனால், வெற்றியைக் கொண்டாடிய நாளிலேயே நாடு மனதளவில் இரண்டாகப் பிளவுண்டு காணப்பட்டது. ஆயின், இதில் வெற்றி எனப் படுவது எது?

அரசாங்கம் யுத்தவெற்றிக்குத் தலைமை தாங்குவது என்று தீர்மானித்துவிட்டபிறகு, நல்லிணக்கத்திற்கு இடமே இல்லாது போய் விட்டது. ஏனெனில், வெற்றிக்குத் தலைமை தாங்குவது என்பது வென்றவர்களுக்குத் தலைமை தாங்குவதுதான். வென்றவர்களுக் குத் தலைமை தாங்கும்போது தோற்றவர்களு டன் எப்படி நல்லிணக்கத்திற்கு வரமுடியும்?

தேசிய நல்லிணக்கம் எனப்படுவது ஒரு கூட்டுச்சிகிச்சைப் பொறிமுறையாகும். போரால் ஏற்பட்ட ஒரு சமூகத்தின் கூட்டுச் சிகிச்சை யாக அது அமையவேண்டும். அதன்படி அரசாங்கமானது நாட்டின் மிகப்பெரிய மருத்து வராகச் செயற்படவேண்டும். ஆனால், யுத்த வெற்றிகளுக்குத் தலைமை தாங்கும் ஒரு அரசாங்கத்தால் அப்படியொரு கூட்டுச் சிகிச் சையை வழங்க முடியாது. மாறாக, இருக் கின்ற காயங்களும், மனவடுக்களும் மேலும் பெருகவே அது உதவும்.

வெற்றிவாதம் எனப்படுவது வெற்றிக்குத் தலைமை தாங்குவதுதான். அதாவது, வெற்றி பெற்ற தரப்புக்கு தலைமை தாங்குவதுதான். ஆனால், நல்லிணக்கம் எனப்படுவது, சம்பந் தப்பட்ட எல்லாத் தரப்புக்கும் தலைமை தாங்கு வதுதான். அப்பொழுதுதான், அரசாங்கமா னது நாட்டின் மிகப்பெரிய மருத்துவராகத் திகழ முடியும். தென்னாபிரிக்காவில் ஏறக் குறைய இதுதான் நடந்தது.

நல்லிணக்கச் செயற்பாடுகளைப் பொறு த்தவரை தென்னாபிரிக்காவும், இலங்கையும் ஒன்றல்ல. இரண்டும் இரு வேறு வேறான அனுபவங்களை உடையவை. இருவேறுகள யதார்த்தங்களை உடையவை. எனினும், வெற்றி பெற்ற தரப்பிடமிருந்து வரும் நல்லிணக்கமே நிலையானதும் நீதியா னதுமான ஒரு சமாதானத்தை கட்டியெழு ப்ப உதவும் என்பதற்கு தென்னாபிரிக்கா ஒரு பிரகாசமான முன்னுதாரணமாகக் கருதப்படுகிறது. அங்கே கொடுமை இழைக் கப்பட்டது பெரும்பான்மையினரான கறுப் பினத்தவர்களுக்குத்தான். முடிவில் வெற்றி பெற்றதும் அவர்கள்தான். ஆனால், தங்களு க்கு இழைக்கப்பட்ட அநீதிக்குக் காரணமான வர்களை அவர்கள் பழிவாங்க முற்படவி ல்லை. அப்படி அவர்கள் பழிவாங்க முற்பட்டி ருந்தால், வெள்ளையினத் தலைவர்களில் பலர் தண்டிக்கப்பட்டிருப்பார்கள். மாறாக, அங்கே நல்லிணக்கப் பொறிமுறைக்கூடாக குற்றமிழைத்தவர்கள் மன்னிக்கப்பட்டார்கள். முறைப்படி அனைத்துலகச் சட்டத்தின்கீழ் விசாரணை நடத்தப்பட்டிருந்தால், அவர் களில் பலர் தப்பியிருக்க முடிந்திருக்காது. ஆனால், குற்றவாளிகளைத் தண்டிப்பதற் குப் பதிலாக அவர்களை மன்னிப்பது என்பது அங்கு ஒரு நல்லிணக்க பொறிமுறை அம்ச மாகப் பின்பற்றப்பட்டதேயன்றி ஒரு தூய சட்டப் பிரச்சினையாக அல்ல.

நல்லிணக்கத்தின் பேரால் தமக்கு உரிய நீதி கிடைக்காமல் போய்விட்டதாகக் குறை படும் ஒரு பகுதி கறுப்பினத்தவர் அங்கு உண்டு. அங்கு இன ஒதுக்கற்கொள்கை முடிவுக்கு வந்தபின்னரும் உடனடியாகவும், அதிரடியாகவும் மாற்றங்கள் செய்யப்பட வில்லை. உதாரணமாக, தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியில் அத்தகைய மாற்றங் கள் உடனடியாகச் செய்யப்படவில்லை என் பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும்.

தென்னாபிரிக்காவைப் பொறுத்தவரை இலங்கையிலும் நல்லிணக்கமானது வெற்றி பெற்ற தரப்பிடமிருந்தே வரவேண்டுமா னால், அது கொழும்பிலிருந்தே தொடங்க வேண்டும். அதேபோல தமிழ் – முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலான நல்லிணக்கமா னது தமிழர்களிடமிருந்தே தொடங்கப்பட வேண்டும். ஏனெனில் இதில் தமிழர்களே பெரும்பான்மை. அதேசமயம், தமிழர்கள்– முஸ்லிம்கள் என்று பார்க்கும்போது தமிழர் கள் பெரும்பான்மைதான் என்றாலும் முஸ் லிம் தலைவர்கள் வெற்றி பெற்ற தரப்புடன் நிற்பதால், தோற்கடிக்கப்பட்ட தமிழ் தரப்பிட மிருந்து எப்படி நல்லிணக்கத்தைத் தொடங்கு வது என்று கேட்போரும் உண்டு. ஆனால், தமிழ்த் தேசியமானது, தனது ஜனநாயக உள்ளடக்கச் செழிப்பை அல்லது விரிவை நிரூபிக்கவேண்டிய இடம் இது என்பதன் அடிப்படையில் கூறுவதாயின், தமிழ் – முஸ் லிம் சமூகங்களுக்கிடையிலான நல்லிண க்கமானது தமிழர்களிடமிருந்தே தொடங் கப்படவேண்டும்.

ஆனால், அதுவும் சிரமசாத்தியம் என்றே தோன்றுகிறது. ஏனெனில், தென்னிலங் கையில் வெற்றிவாதம் கோலோச்சும் வரை பிரதான நல்லிணக்கக் கதவு மூடப்பட்டே இருக்கும். இந்நிலையில், உப கதவைத் திறப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் பிரகாச மாக இருக்காது. பிரதான கதவைத்திறப்ப தென்றால் அதற்கு அரசாங்கமானது, வெற்றி வாதத்தைக் கைவிடவேண்டும். ஆனால், அது நடக்காது. ஏனெனில், இந்த அரசாங் கம் தனது சொந்த வெற்றியின் கைதியாகி விட்டது. வெற்றிக்குத் தலைமை தாங்குவதன் மூலம்தான் அது தனது ஆட்சித் தொடர்ச்சி யைப் பேண முற்படுகின்றது. தமிழருக்கெதி ரான வெற்றிதான் இந்த அரசாங்கத்திற் குள்ள ஒரே முதலீடு.

குளோபல் நியூஸ் நெற்

தொடரும்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

471

## கழுதை ஜோசியம்




ஒரு ஊரில், ஒரு ஜோதிடர் இருந்தார். அவர் முகூர்த்தம் வைப்பதிலும், ஜாதகம் கணிப்பதிலும் நிபுணரென்ற பெயரைப் பெற்றுவிட்டார்.

இதை அறிந்து அந்நாட்டின் தலைநகரிலுள்ள சில உயர் அதிகாரிகள் அவரை வரவழைத்துக் கொண்டார்கள். நாளாவட்டத்தில் அவரது திறமையைக் கண்டு அரசனும் மகிழ்ந்து அவரைத் தனது ஆஸ்தான ஜோதிடராக அமர்த்திக் கொண்டான். அந்த ஜோதிடருக்குப் பணம் நிறையக் கிடைக்கலாயிற்று.

அவர் தனக்கு கிடைத்த பணத்தைக் கொண்டு தனது ஊரில் ஏராளமான நிலத்தை வாங்கிப்போட்டார். சொந்த விவசாயம் நடத்திப் பயிர் செய்து அதன் மூலமும் நிறையப் பணம் பெறலானார். அவர் அடிக்கடி தனது நிலபுலன்களைக் கவனிக்கக் கிராமத்திற்குச் செல்வது வழக்கம்.

ஒருதடவை அவர் தனது கிராமத்திற்குச் சென்றபோது, ஒருநாள் மாலை ஆற்றங்கரைப் பக்கம் உலாவிக் கொண்டிருந்தார். அவரது நிலங்களில் பயிர் அறுவடையாகித் தானியம் போர் போராகக் குவிந்து கிடந்தது.

அப்போது அவ்வழியாக ஒரு வண்ணான் தன் கழுதை மீது துணி மூட்டைகளைப் போட்டுக்கொண்டு வேகமாகப் போய்க்கொண்டிருந்தான். அவன் சட்டெனத் தன் கழுதையை



நிறுத்தி ஜோதிடரைப் பார்த்து "ஐயா! உங்கள் தானியத்தை எல்லாம் பத்திரமாக வைக்கவில்லையா? இன்னும் இரண்டு நாளிகையிலே பெரிய புயல் அடிக்கப்போகிறதே" என்று கேட்டான்.

"புயலா? இப்போது எங்கே? ஆகாயத்தில் ஒரு மேகம் கூட இல்லை. எங்கேயிருந்து புயல் அடிக்கப்போகிறது! மகாஜோசியம் சொல்ல ஆரம்பித்துவிட்டாயே, என்னிடமே! இனிமேல் அந்த மாதிரி பெரியவர்கள் முன்னால் துடுக்குத்தனமாக ஏதாவது உளறிக்கொட்டாதே. எனக்குத் தெரியாத ஜோசியமா உனக்குத் தெரியும்?" என்று கோபித்துக் கொண்டார் அந்த ஜோதிடர்.

அதற்கு வண்ணான் "என்னமோ நல்லதைச் சொன்னால் இந்தக் காலத்தில் கெட்டபெயர்தான். சரி, நான் போய் வருகிறேன்" என்று கூறிவிட்டு அங்கிருந்து கிளம்பினான். அவன் போன சற்று நேரத்திற்கு பிறகு, கீழ்வானத்தில் சிறுமேகம் தென்பட்டது. சற்றுநேரத்தில் அது கறுத்துப் பருத்து யானை உருவத்தை அடைந்தது. அது முன்னே வர, அதன் பின்னால் அடர்ந்த மேகங்கள் அதி வேகமாக வந்து ஆகாயத்தில் பரவி சூழ் நிலையை ஒரே இருட்டாக்கிவிட்டது.


ஜோசியர் பதைபதைத்தார். அந்த வண்ணான் கூறியது பலித்து விடும் போலிருக்கிறதே என்று அவர் நினைத்துத்தமக்கு அவமானம் நேர்ந்து விடுமோ என்று பய ந்து கொண்டிருந்தார். அவர் என்ன செய்வதென யோசிப்பதற்குள்ளே சூறாவளிக் காற்று வீசியது. மழையும் பொழிந்து, எங்கும் ஒரே சேதம், நஷ்டம், நாசம், ஒரே வெள்ளக் காடாகிவிட்டது அந்தப் பிரதேசம். ஜோதிடரின் சப்த நாடியும் அடங்கி விட்டது.

அப்போது அவர் "ஆமாம்,"அந்த வண்ணானுக்கு எப்படிப் புயல் வருமென்று முன்கூட்டியே தெரிந்தது என ஆச்சரியப்பட்டு அவனது வீட்டைத் தேடிக்கொண்டு கிளம்பினார்.

தன்னுடைய வீட்டுக்கு ஜோதிடர் வருவதைக்கண்ட வண்ணான், "வாங்க ஐயா, வாங்க! வாங்க! துணி மணி வெளுக்க வேண்டுமானால் ஒரு வார்த்தை யாரிடாவது சொல்லி அனுப்பி இருந்தால் , நான் உங்கள் வீட்டுக்கு வந்திருப்பேனே!" என்று அவரை வரவேற்றான். அதற்கு "அவர் துணி வெளுக்க நான் வரவில்லை. வாஸ்தவமாக நீ சொன்னபடிப் புயலும், மழையும் வந்ததே! உனக்கு ஜோசியம் தெரியுமா?" என்றார்.


அதற்கு அவன் "ஜோசியமாவது, மண்ணாவது! இந்த சமாசாரத்தை எனக்கு கூறியது என் கழுதையே. இன்னும் சற்று நேரத்தில் மழை பெய்யப் போகிறதென்றால், அதன் உடலின் ரோமங்கள் குத்திட்டு ஆணிபோல் விறைப்பாக இருக்கும். உடனே, அது தன் காதை நிமிர்த்தி ஆகாயத்தை அண்ணாந்து பார்த்துவிட்டு பலமாகக்கத்தும். பின்னர், தன் வாலை மடக்கி, நீட்டி சேஷ்டை செய்யும். இப்படிதான் மழைபெய்யப்போகிறது என்பதை தெரிவிக்கும். இது போல மற்ற சில சம்பவங்களை அறிவிக்க , வேறு சில சேஷ்டைகளையும் செய்யும்" என்றான்.

ஜோசியர் வாயடைத்து நின்றார். வண்ணானின் நுண்ணிய அறிவைக் கண்டு அவருக்கு வியப்பாக இருந்தது. அதே சமயம் கழுதை ஜோசியமே அலாதியாக இருக்கிறதே என்று மூக்கின் மேல் விரலை வைத்து தலைகுனிந்து கொண்டே சென்றார்.



### அம்புலிமாமா கதைகள்

## படித்தால் மட்டும் போதுமா?



ஆறுமுகம் ஓர் ஏழை விவசாயியாக இருந்தபோதும், தன் மகன் குமரனை மிகவும் கஷ்டப்பட்டு நன்றாகப் படிக்க வைத்தான். படித்துப் பட்டம் பெற்ற குமரனுக்கு வேலை கிடைப்பது அவ்வளவு எளிதாக இல்லை. யாராவது பெரிய மனிதருடைய சிபாரிசு இருந்தால் வேலைகிடைக்கும் என்று கேள்விப்பட்ட ஆறுமுகம் தன் மகன் குமரனை உள்ளூர் பெரிய மனிதரான ராஜமாணிக்கத்திடம்அழைத்துச்சென்று சிபாரிசுக் கடிதம் வேண்டுமென்றான். மிகவும் நல்லவரான அவரும், ஆறுமுகத்தின் குடும்பத்திற்கு உதவி செய்ய விரும்பி, குமரனிடம் சிபாரிசுக் கடிதம் கொடுத்து நகரத்திலுள்ள ரத்தினகுமார் வியாபாரியை பார்க்கச்சொன்னார். அவ்வாறே குமரன் அவரைப் போய்ப்பார்த்து ராஜமாணிக்கம் கொடுத்த கடிதத்தைக் கொடுத்து விட்டு வேலை வேண்டினான். குமரனின் கசங்கிய அழுக்கான உடைகளும், அவன் கிராமத்துப் பாணியில் வளவளவென்று பேசியதும் ரத்தின குமாருக்குப் பிடிக்கவில்லை. "ஆள் பாதி ஆடை பாதி" என்று சொல்லிவிட்டு அவனை அவர் திருப்பி அனுப்பி விட்டார்.

குமரன் திரும்பி வந்து ராஜ மாணிக்கத்திடம் தெரிவிக்க , அவர் உடனே ரத்தினகுமார் சொன்ன உட்கருத்தைப் புரிந்து கொண்டார். அவர் குமரனை நோக்கி, "தம்பி உலகம் உன்னைப் பார்க்கும், முதற்பார்வையில் நீ படித்த படிப்பும், பட்டமும் தெரிவதில்லை. உன் உடையும், உன் பேச்சும்தான் மனத்தில் படும். அது சரியாக இல்லாவிட்டால், நீ என்னதான் படித்திருந்தாலும் அது எடுபடாது" என்று சொல்லியவர் அவன் எப்படி உடுத்த வேண்டும், எப்படி பேசவேண்டும் என்று கற்றுக் கொடுத்தார். அதற்கு அடுத்து மற்றொரு பெரிய மனிதரை சந்திக்கச் சென்ற குமரன் அந்த முறை வெற்றியுடன் திரும்பினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு பல்கலை. துணைவேந்தர் பதவி விலகக்கோரி காலக்கெடு

## பல்கலைக்கழக ஆசிரியர் ஒன்றியம் கோரிக்கை

கொழும்பு பல்கலைக்கழக உப வேந்தரைப் பதவி விலகுமாறு பல்கலைக்கழக ஆசிரியர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள உப வேந்தர் பதவி விலகத் தவறினால் தொழிற்சங்கப் போராட்டமொன்றை முன்னெடுக்க நேரிடும் என கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் எச்சரிக்கையும் விடுத்துள்ளனர்.

பதவி விலகுவதற்கு இரண்டு வார கால அவகாசம் வழங்கப்படுவதாகவும் இந்த நியமனத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியாயப்படுத்தினால் மட்டுமே அதனை ஏற்றுக்கொள்ள தயார் என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் புதிய துணை வந்தராக கலாநிதி விஜயகுமார ஹிரிம்புரேகம நியமிக்கப்பட்டுள்ளார்.

எனினும் இந்த நியமனத்தில் அரசியல் தலையீடு உள்ளது என பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

கலாநிதி ஹிரிம்புரேகமவின் பாரியார் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவியாக கடமையாற்றி வருகின்றார் எனவும், இதனால் கொழும்பு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவி அரசியல் தலையீட்டின் அடிப்படையில் ஹிரிம்புரேகமவிற்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் பல்கலைக்கழக ஆசிரியர் ஒன்றியத்தின் தலைவர் நிர்மால் ரஞ்சித் தெவ்சிறி தெரிவித்துள்ளார்.

மேலும் புதிய வேந்தருடன் எவ்விதமான தொடர்புகளையும் பேணுவதில்லை என தீர்மானிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

புதிய துணை வேந்தரால் பிறப்பிக்கப்படும் உத்தரவுகளையும் கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

# மாற்றுத் திறனாளிகளுக்கான தொழிற்சந்தை ஜூன் மாதம்

(சாவகச்சேரி)

வடமாகாணத்தில் உள்ள மாற்று திறனாளிகளுக்கு அவர்களது தகைமைகளுக்கேற்ப தொழில் வசதிகள் பெற்றுக் கொடுப்பதற்கான தொழிற் சந்தை எதிர்வரும் ஜூன் மாதம் 28 ஆம் திகதி நடத்துவதற்கான ஏற்பாடுகளை சமூக சேவைகள் அமைச்சும் தொழில் மற்றும் தொழிற்றுறை அமைச்சும் இணைந்து மேற்கொள்ளவுள்ளனர்.

மேற்படி தொழில் சந்தையில் வேலைவாய்ப்பிற்காக பதிவு செய்வதற்கு தகைமையுடைய மாற்றுத் திறனாளிகள் தமது பகுதி பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுகளிலும் அல்லது மாவட்ட சமூக சேவைகள் அலுவலகங்களிலும் தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தமது சுய விபரம் அடங்கிய விண்ணப்பப்படிவத்தையும் பிறப்பு சான்றிதழ், கல்விச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை போன்ற ஆவணங்களையும் பதிவு செய்வதற்கு வரும் போது எடுத்துவரும் படி அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-3-29)

# வல்லப்பட்டைகள் பொலிஸாரால் மீட்பு

(கொழும்பு)

உலகிலேயே மிகவும் பெறுமதியான வாசனை திரவியங்களை தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப்படும் பெருந்தொகை வல்லப்பட்டைகளை பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மீட்டெடுத்துள்ளனர்.

அவிசாவளை மெதகொட பிரதேசத்திலுள்ள வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலே 300 கிலோ எடையுள்ள வல்லப் பட்டைகளை கைப்பற்றியுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படை தலைமையகம் தெரிவித்துள்ளது.

கைப்பற்றப்பட்ட வல்லப்பட்டையின் பெறுமதி சுமார் முப்பது இலட்சம் ரூபாவென மதிப்பிட்டுள்ளது. (அ-2)

# புகையிரதத்தில் மோதுண்டு இரு இளைஞர்கள் உயிரிழப்பு

(ஹிக்கடுவை)

ஹிக்கடுவை பாதுகாப்பற்ற புகையிரதக் கடவையில் மோட்டார் வண்டி ஒன்று ரயிலுடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் 18 வயதான இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றொருவர் காயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து காலி நோக்கி பயணித்த புகையிரதத்தில் மோட்டார் வண்டி ஒன்று மோதுண்டதில் இவ்விபத்து நேர்ந்துள்ளது. விபத்தின் போது உயிரிழந்தவர் ஹிக்கடுவை பிரதேசத்தைச் சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது.

மோட்டார் வண்டியை செலுத்திச் சென்றவர் காயமடைந்த நிலையில் பலப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, அனுராதபுரம் மத்திய மகா வித்தியாலயத்திற்கு அருகிலுள்ள தண்டவாள பகுதியில் 25 வயதான இளைஞர் ஒருவர் புகையிரதத்தில் மோதுண்டு உயிரிழந்துள்ளார்.

வவுனியாவிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த புகையிரதத்திலேயே அவர் மோதுண்டு உயிரிழந்துள்ளார். (அ-2)




★1431 - நூறாண்டுகள் போர்: பிரெஞ்சு வீராங்கனை 19 வயது ஜோன் ஒப் ஆர்க் ரோவென் என்ற இடத்தில் ஆங்கிலேயர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நீதிமன்றத்தினால் உயிருடன் தீ வைக் கப்பட்டு மரணதண்டனைக்கு உட்படுத்தப் பட்டாள்.

★1539 - தங்கம் கண்டுபிடிக்கும் நோக்கில் ஹெர்னாண்டோ டி சோட்டோ 600 படையினருடன்புளோரிடாவை அடைந்தான்.

★1588 - 30ஆயிரம் பேர்களுடன் ஸ்பானிய ஆர்மாடா என்ற 130 ஸ்பானியப் போர்க்கப்பல்களின் கடைசிக் கப்பல் ஆங்கிலக் கால்வாயை நோக்கிய பயணத்தை லிஸ்பனில் இருந்து புறப்பட்டது.

★1635 - முப்பதாண்டுப் போர்: பிராக் அமைதி உடன்பாடு எட்டப்பட்டது,

★1815 - இலங்கையிலிருந்து காயப்பட்ட போர்வீரர்களை ஏற்றி வந்த பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனியின் ஆர்னிஸ்டன் என்ற கப்பல் தென்னாபிரிக்காவுக்கு அருகில் மூழ்கியதில் அதில் பயணம் செய்த 378 பேரில் 372 பேர் உயிரிழந்தனர்.

★1845 - திரினிடாட் டொபாகோவுக்கு முதல் தொகுதி இந்தியர்கள் வந்திறங்கினர்.

★1883 - நியூயோர்க் நகரில் புரூக்ளின் பாலம் இடிந்து விழப்போவதாக எழுந்த வதந்தியை அடுத்து இடம்பெற்ற நெரிசலில் சிக்கி 12 பேர் உயிரிழந்தனர்.

★1913 - முதலாம் பால்க்கன் போர்: லண்டன் உடன்பாடு, 1913 எட்டப்பட்டு போர்முடிவுக்கு வந்தது. அல்பேனியா தனி நாடாகியது.

★1942 - இரண்டாம் உலகப் போர்: 1000 பிரித்தானிய போர் விமானங்கள் ஜேர்மனியின் கொலோன் நகரில் 90நிமிடங்கள் குண்டுமாரி பொழிந்தன.

★1966 - முன்னாள் கொங்கோ பிரதமர் எவரிஸ்டே கிம்பா மற்றும் பல அரசியல் தலைவர்கள் பகிரங்கமாகத் தூக்கிலிடப்பட்டார்கள்.

★1971 - செவ்வாய்க் கோளின் 70 சதவீதத்தைப் படம் பிடிப்பதற்காகவும் அதன் வளிமண்டலத்தை ஆராயவும் என மரைனர் 9 விண்ணுக்கு ஏவப்பட்டது.

★1972 - இஸ்ரேலின் விமானநிலையத்தில் ஜப்பானிய செம்படையினர் தாக்குதல் மேற்கொண்டதில் 24 பேர் பலியாகினர்.

★1981 - பங்காளதேசத்தில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியின் போது ஜனாதிபதி சியாவுர் ரகுமான் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டார.

★1987 - கோவா தனி மாநிலமாகியது.

★1998 - வடக்கு ஆப்கானிஸ்தானில் 6.6 ரிக்டர் அளவு நிலநடுக்கத்தில் 5 ஆயிரம் பேர் வரை உயிரிழந்தனர்.

★2003 - எயார் பிரான்சின் கொன்கோர்ட் விமானம் தனது கடைசிப் பயணத்தை ஆரம்பித்தது.

### பிறப்புகள்

★1899 - மணிக்கொடி சீனிவாசன், தமிழ், ஆங்கிலப் பத்திரிகையாளர் (இ. 1975)

★1931 - சுந்தர ராமசாமி, நவீன தமிழ் இலக்கியத்தின் எழுத்தாளர் (இ. 2005)

★1934 - அலெக்சி லியோனொவ், சோவியத் ரஷ்யாவின் விண்வெளி வீரர்

### இறப்புகள்

★1431 - ஜோன் ஆஃப் ஆர்க், பிரெஞ்சு வீராங்கனை (பி. 1412)

★1960 - போரிஸ் பாஸ்ரர்நாக், ரஷ்ய எழுத்தாளர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1890)

★1981 - சியாவுர் ரகுமான், பங்காள தேச ஜனாதிபதி (பி. 1936)

### போரிஸ் பாஸ்ரர் நாக்



போரிஸ் லியோனிடவிச் பாஸ்ரர் நாக் மெக்சிக்கோவில் 1890ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி பிறந்தார். இவரது தந்தை லியனீட்ப பஸ்ரர் நாக் ஒரு யூத இனத்தைச் சேர்ந்தவர். தாயார் ரோசா ராயிட்ஷா கோஃப்மான் பியானோ இசைக் கலைஞர். இவர் ஒரு ரஷ்யக் கவிஞரும், புதின எழுத்தாளருமாவார். 1958 ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசைத் தனது டாக்டர் ஷிவாகோ என்ற புதினத்துக்காகப் பெற்றுக் கொண்டார். போரிஸ் முதலில் இசைப்பயிற்சி பெற்று கலைத் துறையில் நாட்டம் கொண்டார். பின்னர் 1910 மாபர்க் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து ஸ்கண்டியன் சித்தாந்தவாதிகளான ஹேர்மன் கோஹன் மற்றும் நிக்கலாய் ஹார்ட்மன் ஆகியோரின் கீழ் தத்துவம் பயின்றார். 1914இல் மொஸ்கோ திரும்பி எழுத்துலகில் புகுந்தார். பல கவிதைத் தொகுதிகளை வெளியிட்டார்.

அத்துடன் இவர் "கடைசிக் கோடைகாலம்" (The last summer) என்ற நாவலை எழுதினார். இவரது சுயசரிதை Safe conduct என்னும் பெயரில் 1931இல் வெளிவந்தது. ஷேக்ஸ்பியரின் படைப்புகளை ரஷ்ய மொழியில் மொழிபெயர்த்தும் உள்ளார்.

முதலாம் உலகப் போர்க் காலகட்டத்தில் இரசாயனத் தொழிற்சாலை ஒன்றில் பணிபுரிந்த அவர் தனது டாக்டர் ஷிவாகோ என்ற புதினத்துக்கான தகவல்களைப் பெற்றுக்கொண்டார். இப்புதினத்தை அவர் 1948 இல் எழுத ஆரம்பித்தவர், அதனை முடிக்க அவருக்கு சுமார் 10 வருட காலம் எடுத்தது. 1958இல் டாக்டர் ஷிவாகோ நாவலுக்காக இலக்கியத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது. ஆனால் அப்பரிசை அக்கால அரசின் அழுத்தம் காரணமாக ஏற்க மறுத்துவிட்டார். இந்நாவல் 1988இலேயே ரஷ்யாவில் வெளியிடப்பட்டது. 1903ஆம் ஆண்டு வரையில் மருத்துவராகவும் கவிஞராகவும் திகழ்ந்த யூரி ஷிவாகோவின் வாழ்க்கையைக் கருப்பொருளாகக் கொண்டதே டாக்டர் ஷிவாகோ என்ற புதினமாகும். இப்புதினம் பின்னர் 1965ஆம் ஆண்டில் ஆங்கிலத்தில் திரைப்படமாகவும் எடுக்கப்பட்டது. பாஸ்ரர்நாக் 1960 ஆண்டு மே மாதம் 30ஆம் திகதி நுரையீரல் புற்றுநோய் காரணமாக மரணமானார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அமெரிக்கன் கோணர்' விவகாரத்தில் முறுகல் ஏன்?

அமெரிக்காவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளில் மேலும் நெருடல்கள் ஏற்படத் தொடங்கியுள்ளன.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், கடந்த இரண்டு ஆண்டுகளாக இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டுவந்த தீர்மானங்கள் மற்றும் பொறுப்புக் கூறல், நல்லிணக்கம் ஆகியவற்றை வலியுறுத்திவருவது போன்ற காரணங்களால், அமெரிக்கா மீது இலங்கைக்கு நல்ல அபிப்பிராயம் இல்லை என்பது தெளிவு.

வெளிப்படையாக இலங்கை அரசாங்கம் அமெரிக்காவை எதிர்த்து நிற்காமற் போனாலும், அவ்வப்போது மறைமுகமாக அமெரிக்காவைச் சாடுவதை அரசாங்கம் வழக்கமாகவே கொண்டுள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷவில் இருந்து அமைச்சர்கள், அதிகாரிகள் வரை விதிவிலக்கான நிலையில் இல்லை.



போருக்குப் பின்னர், இந்த விடயங்களில் அமெரிக்கா கடைப்பிடித்து வரும் இறுக்கமான நிலை இலங்கை அரசாங்கத்தை பல்வேறு சந்தர்ப்பங்களில் நெருக்கடிகளுக்குள் தள்ளிவிட்டுள்ளது. பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் போன்ற விடயங்களில் இலங்கை அரசாங்கத்தின் மீது அமெரிக்கா அழுத்தம் கொடுப்பதால்தான், ஏனைய பல நாடுகளும் இலங்கைக்கு நெருக்கடி கொடுத்துவருகின்றன.

அதற்கு உதாரணம், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் , அமெரிக்கா எடுத்த முன் முயற்சியினால் தான், இரண்டு தடவைகளும் இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் பெரும்பான்மை நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டன.

இதுவே, வேறு நாடு எடுத்த முயற்சியாக இருந்திருந்தால், 2009 இல் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை யின் சிறப்புக் கூட்டத்தில் சுவீடன் கொண்டு வந்த கண்டனத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது போன்ற நிலையே ஏற்பட்டிருக்கலாம்.

ஏனென்றால், கொமன்வெல்த் மாநாட்டை இலங்கையில் நடத்தக் கூடாது என்ற கருத்து கனடா போன்ற நாடுகளால் முன்னெடுக்கப்பட்ட போதும், லண்டனில் கடந்த மாதம் நடந்த கொமன்வெல்த் வெளிவிவகார அமைச்சர்கள் கூட்டத்தில் அதற்குப் போதிய ஆதரவு கிடைக்கவில்லை.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவைத் தீர்மானத்தின்போது, சந்தர்ப்ப சூழ்நிலைகளால், அமெரிக்காவின் பின்னால் நின்ற இந்தியாவே, கொமன் வெல்த்தில் இலங்கையை நெருக்கடியில் இருந்து காப்பாற்றியது.

இதே கொமன்வெல்த் அமைப்பில் அமெரிக்கா இருந்திருந்தால், நிலை வேறாகியிருந்திருக்கக் கூடும். எனவேதான், இலங்கை அரசாங்கத்திற்கு அமெரிக்காவின் மீது அவ்வளவு கோபம் இருக்கிறது.

அதேவேளை, தனது சொற்படி நடந்துகொள்ளாமல், சீனாவின் பக்கம் சாய்ந்து செல்வது குறித்து இலங்கை மீது அமெரிக்காவுக்கும் கோபம் உள்ளது.

இரு நாடுகளுமே இராஜதந்திர உறவுகளையும் தூதரக உறவுகளையும் வைத்துக்கொண்டிருந்தாலும், சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளுடன் இலங்கை கொண்டுள்ளது போன்ற நெருக்கமான உறவுகள் அமெரிக்காவுடன் கிடையாது.

அதிலும் தற்போதைய அமெரிக்கத் தூதுவர் மிச்சேல் ஜே.சிசன் கொழும்பில் கடமையைப் பொறுப்பேற்பதற்கு முன்னதாகவே, அரசாங்கத்துக்கும் அவருக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் தோன்ற ஆரம்பித்துவிட்டன.

கொழும்புத் தூதுவராக பரிந்துரைக்கப்பட்ட பின்னர், செனட் சபையின் வெளிவிவகாரக் குழு முன்பாக மிச்சேல் ஜே.சிசன் உரையாற்றியபோது, இலங்கையின் மனித உரிமைகள், நிலை குறித்து கடுமையான குற்றச்சாட்டுகளை முன் வைத்திருந்தார்.

அது அப்போது அரசாங்கத்திற்கு கடுங்கோபத்தை ஏற்படுத்தியிருந்தது. அவருக்குக் கண்டனம் தெரிவிக்க வேண்டும் என்றும், அவரது நியமனத்தை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்றும் அமைச்சர்கள் பலரும் வலியுறுத்தியிருந்தனர்.

எனினும், அமெரிக்காவின் விரோதத்தை சம்பாதிக்க நேரிடும் என்பதால் அரசாங்கம் அப்போது எந்த எதிர்ப்பையும் காட்டாமல் இருந்து கொண்டது.

மிச்சேல் ஜே.சிசன் உலகின் பல்வேறு கொந்தளிப்பு பிரதேசங்களில்



பணியாற்றிய மூத்த இராஜதந்திரி. அவரது வருகை இலங்கைக்கு நெருக்கடியாக அமையலாம் என்று அரசாங்கம் ஏற்கனவே எதிர்பார்த்திருந்தது. ஆனால், கொழும்பில் கடமைகளைப் பொறுப்பேற்ற சிறிது காலம்வரை அமெரிக்கத் தூதுவர் பெரிதாக எந்த நகர்வையும் மேற்கொள்ளவில்லை. அது அரசாங்கத்திற்கு ஒரு சந்தேகத்தை ஏற்படுத்தவே செய்தது.

ஆனால், இலங்கையின் அனைத்துப் பகதிளுக்கும் சென்று நிலைமைகளை ஆராய்ந்த பின்னர், அமெரிக்கத் தூதுவர் வெளியிடும் கருத்துகள் அரசாங்கத்துக்கு எரிச்சலை ஏற்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

அவர் உயர்பாதுகாப்பு வலையம், படைகளை நிறுத்துவது, முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பாகத் தெரிவித்த கருத்துக்கள் ஏற்கனவே கண்ணடனங்களை ஏற்படுத்தியிருந்தன.

உள்நாட்டு விவகாரங்கள் குறித்து கருத்துக்களை வெளியிடவோ, அதில் தலையிடவோ வெளிநாட்டு இராஜதந்திரியான அவருக்கு எந்த உரிமையும் கிடையாது என்று அமைச்சர்கள் பலர் கண்டனம் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் தற்போது அமெரிக்கத் தூதரகமும் திருகோணமலை நகரசபையும் செய்து கொண்டுள்ள உடன்பாடு அரசாங்கத்தை விசனத்தில் ஆழ்த்தியுள்ளது.

திருகோணமலையில் அமெரிக்கன் கோணர் எனப்படும் தகவல் நிலையத்தை அமைப்பதற்கான உடன்பாடே அது.

இதுபோன்று ஏற்கனவே, கண்டியிலும், யாழ்ப்பாணத்திலும் அமெரிக்கன் கோணர் இயங்கி வருகின்றது. இந்த உடன்பாடு குறித்து வெளிவிவகார அமைச்சுக்குத் தெரியப்படுத்தவோ, முன் அனுமதி பெறப்படவோ இல்லை என்பது அரசாங்கத்தின் குற்றச்சாட்டு.

பொதுவாக உள்ளூரில் எந்தவொரு செயற்றிட்டங்களை முன்னெடுப்பதனாலும் வெளிநாட்டுத் தூதரகங்கள் அதுபற்றி வெளிவிவகார அமைச்சுக்குத் தெரியப்படுத்தி அனுமதி பெற்றுக்கொள்வதுதான் நடைமுறை. இந்த நடைமுறை இலங்கையில் மட்டும் பின்பற்றப்படும் ஒன்று அல்ல. ஏனைய நாடுகளிலும் அதே வழக்கம் தான் உள்ளது.

ஆனால், அமெரிக்கத் தூதரகம் அவ்வாறு அனுமதி பெற்றுக்கொள்ளாதது ஏன் என்பது மர்மமாக உள்ளது. இலங்கையில் எத்தனையோ திட்டங்களை முன்னெடுக்கும் அமெரிக்காவுக்கு இந்த நடைமுறை தெரியாமல் போயிருக்க வாய்ப்பில்லை.

கிழக்கு மாகாணசபையின் ஊடாக இந்தத் திட்டத்தை முன்னெடுக்காமல் திருகோணமலை நகரசபையின் ஊடாக இதனை முன்னெடுக்க அமெரிக்கா முடிவு செய்துள்ளதும் குறிப்பிடத்தக்க ஒரு விடயமே.

கிழக்கு மாகாணசபையானது, அரசின் கட்டுப்பாட்டின் கீழேயே இருப்பதால், அமெரிக்கன் கோணரை (தகவல் நிறுவனம்)- அமைப்பதற்கு அமெரிக்கா உடன்பாடு செய்துகொண்டுள்ள இடமானது, திருகோணமலை நகரசபைகுக்குட்பட்டதான, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டில் இருக்கிறது என்பதும் அரசாங்கம் விசனம் கொண்டுள்ளதற்கு ஒரு காரணம்.

சிலவேளைகளில் ஆளும் கட்சியின் கட்டுபாட்டில் உள்ள இன்னொரு



பிரதேச சபையுடன் அமெரிக்கா இந்த உடன்பாட்டை செய்திருந்தால் அதை அரசாங்கம் கண்டும் காணாமல் விட்டிருக்கலாம். தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வசம் உள்ள ஓர் உள்ளூராட்சி சபையுடன் அமெரிக்கா புரிந்துணர்வு உடன்பாட்டை செய்துள்ளதை அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

இலங்கை அரசாங்கத்துக்கு வெறுப்பேற்றும் வகையில் அமெரிக்கா திட்டமிட்டே இதனைச் செய்திருக்கலாம் என்ற கருத்தும் உள்ளது. ஆனால், அது உறுதிப்படுத்தப்பட்டது அல்ல.

இலங்கை அரசாங்கத்துக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் உதவித் திட்டங்கள் தொடர்பான முரண்பாடுகள் அண்மையில் தலைதூக்கியுள்ளன. வடக்கில் சில திட்டங்களை நடைமுறைப்படுத்த முயன்றபோது, இராணுவத்தினர் தலையிட்டதால் அவற்றைக் கைவிட வேண்டியநிலை ஏற்பட்டதாக சில வாரங்களுக்கு முன்னர் அமெரிக்கத் தூதுவர் குற்றம் சாட்டியிருந்தார். அதன் பின்னர் இலங்கைக்கான நிதியுதவியை 20 சதவீதத்தினால் குறைக்க இராஜாங்கச் செயலர் ஜோன் ஹெரி நடவடிக்கை எடுத்திருந்தார்.

அதனையடுத்து நீதித்துறை மறுசீரமைப்புக்காக அமெரிக்கா வழங்க முன்வந்த 450 மில்லியன் ரூபா நிதியை அமெரிக்கா மீளப்பெற்றது. பிரதம நீதியரசர் விவகாரத்தில் எழுந்த சர்ச்சையால்தான், இந்த நிதி திரும்பப் பெறப்பட்டதாக கூறப்படுகிறது.

இத்தகைய பின்னணியில் தான், அமெரிக்கன் கோணரை அமைக்கும் உடன்பாட்டை திருகோணமலை நகரசபையுடன் செய்துகொண்டுள்ளது. இந்த விடயத்தில் அமெரிக்கா இராஜதந்திர நெறிமுறைகளை மீறியுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டாலும் அதை அமெரிக்கத் தூதரகம் நிராகரித்துள்ளது.

ஏற்கனவே, கண்டியிலும் யாழ்ப்பாணத்திலும் அமெரிக்கன் கோணரை அமைக்கும்போது பின்பற்றப்பட்ட வழிமுறையே இங்கும் பின்பற்றப்பட்டதாக அமெரிக்கத் தூதரகத்தின் சார்பில் உடன்பாட்டில் கையெழுத்திட்ட அதிகாரி தெரிவித்துள்ளார். ஆனால், அரசாங்கம் இதனை இப்படியே விடுவதாகத் தெரியவில்லை.

அமெரிக்க அதிகாரிகளிடம் விளக்கம் கேட்கும் முடிவில் அரசாங்கம் இருப்பதாகத் தெரிகிறது. இதனை அமெரிக்க அதிகாரிகள் முன்கூட்டியே எதிர்பார்த்திருக்கவும் வாய்ப்புகள் இல்லாமல் இல்லை. ஆனால், அமெரிக்கா இதனை ஓர் உள்நோக்கத்துடன் தான் செய்துள்ளது போலத் தோன்றுகிறது. ஏனெனில் அரசாங்கத்தின் போக்கு அதற்கு பிடிக்கவில்லை என்பது தெரிகிறது.

அதைவிட ஈரானிடம் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்யும் விவகாரத்திலும் இலங்கை மீது அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளதாகவும் கூறப்படுகிறது. இந்த விவகாரம் அமைச்சரவைக் கூட்டத்திலும் விவாதிக்கப்பட்டுள்ளது. அதனால்தான் 2012 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குப் பின்னர் ஈரானிடம் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்யப்படவேயில்லை என்று அரசாங்கம் அறிவிக்க வேண்டியேற்பட்டது. இப்போது பல்வேறு தளங்களிலும் அமெரிக்க- இலங்கை உறவுநிலை தளர்ச்சியடைய ஆரம்பித்துள்ளது.

இந்த நிலைக்கு இலங்கை அரசாங்கத்தின் போக்கும் ஒரு காரணம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இரண்டு மாதங்கள் முடிந்துள்ள நிலையில் அதனை நடைமுறைப்படுத்துவதற்கான எந்த அறிகுறிகளும் அரசாங்கத்திடம் இருந்துவரவில்லை.

தன்னால் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை இலங்கை அரசாங்கம் அலட்சியப்படுத்துவதாக அமெரிக்கா உணரத் தொடங்கியுள்ள நிலையில் தான், தற்போதைய முறுகல்கள் தோன்றத் தொடங்கியுள்ளன. இந்த முறுகல் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அடுத்தடுத்த கூட்டத் தொடர்கள் நெருங்கும்போது இன்னும் அதிகமாகலாம்.

கே. சஞ்சயன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மத்திய கிழக்கிற்கு பணிப்பெண்களை அனுப்புவதில் புதிய கோட்டாமுறை

## அமைச்சர் டிலான் தெரிவிப்பு



(கொழும்பு)

**மத்திய கிழக்கிற்கு பணிப்பெண்களை அனுப்புவதில் புதிய கோட்டா முறை அமுல்படுத்தப்படவுள்ளது. மத்திய கிழக்கு நாடுகளுக்கு திறன் அபிவிருத்திப் பயிற்சி பெற்ற இலங்கைப் பணிப் பெண்களை விசேட கோட்டா அடிப்படையில் அனுப்பும் செயன்முறையை வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சு நடைமுறைப்படுத்தி வருகின்றது.**

இதனடிப்படையில் சவுதி அரேபியாவுக்குச் செல்லும் ஒவ்வொரு பணிப்பெண்ணும் 25 வயது பூர்த்தியாகியிருப்பதுடன், திறன் அபிவிருத்திப் பயிற்சியான என்.வி.கியூ-03இல் சித்தியடைய வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளதென வெளிநாட்டு வேலை வாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் டிலான் பெரேரா கூறியுள்ளார்.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்தில் நேற்றுமுன்தினம் காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்தபோதே அமைச்சர் இதனைக் கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

இதற்கான ஒப்பந்தம் எதிர்வரும் ஒருமாத காலத்திற்குள் சவுதி அரசாங்கத்துடன் கைச்சாத்திடப்படவுள்ளது.

இலங்கையிலிருந்துவெளிநாட்டிற்கு செல்லும் பணிப் பெண்களை சிறந்த தகைமையுடன் கூடிய மட்டுப்படுத்தப்பட்ட வீட்டு உதவியாளர்களாக அங்கு அனுப்புவதே எமது இலக்காகும்.

மேலும் மத்திய கிழக்கை தவிர்ந்த ஹொங் கொங், சிங்கப்பூர், இத்தாலி, இஸ்ரேல், மொங்கோலியா ஆகிய நாடுகளிலும் திறன் அபிவிருத்திப் பயிற்சி பெற்ற இலங்கைப் பணிப் பெண்களுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டிருப்பதனால், இவற்றை நோக்கி பெண்களை ஊக்குவிக்கும் வகையிலேயே இத்திட்டம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையிலுள்ள வெளிநாட்டு முகவர் நிலையங்களின் தரப்படுத்தலுக்கு அமைவாக அவற்றுக்கென பிரத்தியேகமாக வழங்கப்படும் கோட்டா முறைக்கமையவே எதிர்வரும் காலத்தில் மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணியாட்களை அனுப்பமுடியும்.

அதன் படி இதுவரை காலமும் சுமார் மூவாயிரம் பேர் வரையில் அனுப்பி வந்த ஒரு முகவர் நிலையத்தினால் ஆகக்கூடியது ஆயிரத்து 500 பேரை மாத்திரமே மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப் பெண்களாக அனுப்ப முடியும்.

இச் செயற்றிட்டத்திற்கு எதிராக பல சவால்கள் எழுந்துள்ள போதிலும் இதனை தொடர்ந்தும் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வோம்.

முகவர் நிலையங்களுக்கான கோட்டமுறைமை கடந்த ஏப்ரல் 15 ஆம் திகதி பிரகடனப்படுத்தப்பட்டது. இதன் படி முகவர் நிலையங்கள் தற்போது தரப்படுத்தலுக்கு உள்ளாக்கப்படுகின்றன.

கடந்த 5 வருடங்களுக்குள் அவற்றால் முன்னெடுக்கப்பட்ட சிறப்பான சேவை, குற்றச் செயல்கள் அனைத்தையும் கருத்திற்கொண்டு, முகவர் நிலையங்களுக்கான தரங்கள் நிர்ணயிக்கப்படும். பின்னர் தரம் அடிப்படையில் ஆகக்கூடிய ஆயிரத்து 500 இலிருந்து வெவ்வேறு கோட்டாக்களில் ஆட்களை அனுப்புவதற்கு அனுமதிக்கப்படும்.

இருப்பினும் மத்திய கிழக்கின் ஏனைய நாடுகளுக்கு 23 வயது நிரம்பிய நிலையில் என்.வி.கியூ -03 கற்கையைத் தொடர்வது மட்டும் போதுமானது. சவுதிக்கு மாத்திரம் மேற்படி திறன் அபிவிருத்திப் பரீட்சையில் சித்தியடைவது கட்டாயமாக்கப்பட்டிருக்கிறது. (அ-2)

# சனசமூக நிலையங்களுக்கான நன்கொடைகள் கிடைக்கவில்லை?

## பேராசிரியர் ரஜீவ விஜயசிங்கவிடம் மக்கள் சுட்டிக்காட்டு

(கரணவாய்)

கரவெட்டி பிரதேசத்தில் இயங்கும் 98 சன சமூக நிலையங்களுக்கு அரசால் வழங்கப்பட்டு வந்த நன்கொடைகள் இரண்டு வருடங்களாக ஏன் வழங்கப்படவில்லை? எனவும்,

கடந்த 2007, 2008 ஆம் ஆண்டுகளில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட கரவெட்டிப் பிரதேசத்தை சேர்ந்த குருநாதன் சேவகன், கோபால் -சுரேஷ் ஆகிய இருவரையும் மீட்டுத் தருமாறும் பொது அமைப்புக்கள் மற்றும் பொது மக்களால் ஜனாதிபதியின் நல்லிணக்க ஆலோசகரான பேராசிரியர் ரஜீவ விஜயசிங்கவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை காலை 10 மணியளவில் கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற அப் பிரதேச பிரிவிற்குட்பட்ட கிராமங்களின் நல்லிணக்கம் தொடர்பான கலந்துரையாடலின் போதே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதற்குப் பதிலளித்த அவர், இரண்டு கோரிக்கைகளையும் தாம் நிறைவேற்றித் தருவதாக உறுதியளித்துள்ளார். (அ-3-60)

# அபிவிருத்தியை சீர்குலைக்க பல அமைப்புக்கள் முனைப்பு

நாட்டில் நிர்மாணிக்கப்படும் பாரிய வீதிகள், அதிவேக வீதிகள், தொழில்நுட்ப அபிவிருத்தி உட்பட பாரிய அபிவிருத்தித் திட்டங்களைசீர்குலைப்பதற்கென செயற் படும் பல்வேறு அமைப்புக்கள் உட்பட, சர்வதேச அழுத்தங்கள் தொடர்பாக மக்கள் மிகத் தெளிவுடன்செயற்படவேண்டுமென சப்ரகமுவ பல்கலைக் கழக வேந்தர் பேராசி ரியர் கும்புறுகமுவே வஜிர தேரர் தெரிவித்துள்ளார்.

சூறாவளிக்கென காலநிலை அவதான நிலையம் பெயரிட்ட மகாசேன் என்ற பெயருக்கு மன்னிப்பு கோருவதற்காக நேற்று முன்தினம் காலநிலை அவதான நிலைய திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட போதே தேரர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

கடந்த முப்பதாண்டுகாலம் நாடு பின்னோக்கிச் சென்றுள்ளது. எமக்குத் தேவையான சுபீட்சத்தை நோக்கி, நாடு முன்னேற்றப் பாதையில் செல்ல இனங்களுக்கு இடையில் ஐக்கியத்தை உருவாக்க வேண்டும் என்றார்.

இதேவேளை, திணைக்களப் பணிப்பாளர் நாயகம் எஸ்.எம்.காரியவசம் உரையாற்றுகையில்,

இதனை நாம் பாரதூரமான தவறாக கருதுகிறோம். வானிலை அவதான திணைக்களம் சார்பில் நான் இதற்காக மன்னிப்பு கோருகிறேன் என்றார்.

அத்துடன் தேசிய மட்ட கலாசார உரிமைகள் பாதுகாப்பு அமைப்பின் செயலாளர் நிமல் வீரதுங்க. பேசுகையில், நாளை இவ்விடயமாக மேற்கொள்ளவிருந்த சத்தி யாகிரகத்தை நாம் நிறுத்த தீர்மானித்துள்ளோம் என் றார். (அ-2)

# விசேடதேவையுள்ள மாணவர்களுக்கான விளையாட்டு போட்டி

(மானிப்பாய்)

வலிகாமம் கல்வி வலயம் விசேட கல்வி வள நிலையத்தின் ஏற்பாட்டில் விசேட தேவையுடைய மாணவருக்கான விளையாட்டுப்போட்டி நாளை மறுதினம் முதலாம் திகதி சனிக்கிழமை காலை 8.30மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜா தலைமையில் இடம் பெறவுள்ள இப்போட்டியில், பிரதம விருந்தினராக வடமாகாண விளையாட்டுத்துறையின் கல்வி பண்பாட்டலுவல்கள் செயலாளர் சி.சத்தியசீலனும் சிறப்பு விருந்தினராக பிரபல வர்த்தகர் ஈ.எஸ்.பி.நாகரட்ணம் ஆகியோர்கலந்து கொள்ளவுள்ளனர். (அ)

# சுட்டிக்காட்டியும் கவனிப்பாரற்று...

**பிரமாணலங்குளம்-மடு பிரதான வீதி நீண்ட நாட்களாக திருத்தப்படாமையால் மக்கள் போக்குவரத்து செய்வதில் இடர் பாடுகளை எதிர் நோக்குவதாக சுட்டிக்காட்டப்பட்டது. ஆயினும் இவ்வீதி திருத்தப்படாமல் தொடர்ந்தும் குன்றும்குழியுமாக காணப்படுகிறது.**

(படம்:- குருமன்காடு செய்தியாளர்)



# விளையாட்டு போட்டி

வல்வெட்டித்துறை கணபதி பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு போட்டி எதிர்வரும் ஜூன் மாதம் 2 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு வல்வை நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோவில் வீதியில் நடைபெறவுள்ளது.

போட்டிகள் ச.ஜெயகணேஸ் தலைமையில் இடம் பெறவுள்ளதுடன், இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வல்வை மகளிர் மகாவித்தியாலய அதிபர் செல்வி சு.இராட்சியலட்சுமியும், சிறப்பு விருந்தினர்களாக பொலிகண்டி மேற்கு (ஜே/393) கிராமஉத்தியோகத்தர் சி.தவனேஸ்வரன், புத்தூர் வலி.கிழக்கு பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளர் செல்வி இ.அமிர்தராணி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (அ)

# கடுமையான சட்டத்தை மீறி தமிழ் அகதிகள் ஆஸி.பயணம்

## இந்திய இணையத்தளம் தகவல்

அவுஸ்திரேலியாவின் கடுமையான சட்டங்களுக்கு மத்தியிலும் இலங்கைத் தமிழ் அகதிகள் அவுஸ்திரேலியாவுக்கு ஆபத்தான சூழ்நிலையில் படகுகள் மூலம் பயணிப்பதாக இந்திய இணையத்தளம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இவர்களின் தொகை தொடர்ந்தும் அதிகரித்து வருவதாக அதில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளதுடன் கடந்த ஜூன் மற்றும் ஓகஸ்ட் மாதங்களுக்குள் ஆறாயிரம் சட்டவிரோத அகதிகள் அவுஸ்திரேலியாவுக்குச் சென்றுள்ளனர்.

இந்தப் பயணங்களின் போது பலர் உயிரிழக்கலாம் என்ற அச்சத்தின் மத்தியிலும் இவ் அகதிகள் துணிச் சலுடன் சென்றுள்ளனர்.

இலங்கையில் இருந்து அவுஸ்திரேலியாவுக்கு படகுகள் மூலம் செல்வதற்கு காலநிலை இயல்பாக இருக்கு மானால் சுமார் 20 நாட்கள் வரையாகும். இதன் போது பலர் உயிரிழந்த சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன என்றும் இந்திய இணையத் தளம் தெரிவித்துள்ளது. (அ-2)

# ஜெனீவாவில் எனக்கு அதீத பாதுகாப்பு தரப்பட்டது ஏன்?

## சுவிஸிடம் விளக்கம் கோருகிறார் மைத்திரி

(கொழும்பு)

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன, அண்மையில் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜெனீவாவில் தங்கியிருந்த போது, தனக்கு குண்டு துளைக்காத சிறப்பு வாகனம் வழங்கப்பட்டது ஏன் என்று சுவிட்சர்லாந்து அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பி சுவிஸ் அரசாங்கத்துக்கு இலங்கை வெளிவிவகார அமைச்சின் ஊடாக கடிதம் ஒன்றை அனுப்பி வைக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மேலும், ஜெனீவாவில் தனக்கு சிறப்பு பாதுகாப்பு வழங்கப்பட்டது எதற்காக என்று சுவிஸ் அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பியதாகவும், அதற்கு அவர்கள் உயர் மட்ட உத்தரவு என்று பதிலளித்ததாகவும் சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடன் கடந்த காலங்களில் இடம் பெற்ற போர் நடவடிக்கையின் போது தம்மை இலக்கு வைத்து இலங்கையில் குண்டுத் தாக்குதலை நடத்தியிருந்த சூழலில், ஜெனீவா மாநாட்டுக்குச் சென்ற தமக்கு அத்தகைய பாதுகாப்பு ஏதும் வழங்கப்படவில்லை.

ஆனால், யுத்தம் வெற்றிகரமாக முடிவுக்கு கொண்டு வரப்பட்டு நான்கு ஆண்டுகள் கழித்து, இத்தகைய பாதுகாப்பு வழங்கப்பட்டமை கவலைக்குரியதாகும் என அமைச்சர் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோணாவத்தையில் மிருகபலி வேண்டாம்

## அ. இ. இந்துமாமன்றம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சிவபூமி என போற்றப்படும் யாழ்ப்பாணத்தில் கோணாவத்தை என்ற ஆலயத்தில் இவ்வருடமும் மிருகபலி நிகழ்வு இடம்பெற இருப்பதையறிந்து அதிர்ச்சியடைவதோடு அதனை நிறுத்துமாறு ஆலய நிர்வாகத்தினருக்கும் பூசகர்களுக்கும் அகில இலங்கை இந்துமாமன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன் அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

இந்து ஆலயங்களில் மிருகபலி செய்ய வேண்டாம் என காலத்துக்குக் காலம் நாங்கள் வேண்டுகோள் விடுத்து வருகின்றோம். இது எமது சமயத்துக்கு ஒவ்வாததும் ஏற்றுக் கொள்ள முடியாததுமான பாவச் செயலென சுட்டிக்காட்டியும் வந்திருக்கின்றோம். மனிதர்களுக்காக மிருகங்களையோ பட்சிகளையோ பலியிடுவதும் ஆலய திருத்தலத்திலோ சுற்றாடலிலோ எந்தவொரு உயிரினத்துக்கும் கொடுமை செய்வதும் அனுமதிக்க முடியாதவை.

யாழ்.சிவபூமியில் கோணாவத்தை என்ற ஆலயத்தில் இவ்வருடமும் மிருகபலி நிகழ்வு இடம்பெறவிருப்பதை அறிந்து அதிர்ச்சி அடைவதோடு அதனை நிறுத்துமாறு ஆலய நிர்வாகத்தினரையும் பூசகர்களையும் வேண்டுகின்றோம்.

மேலும் இதனை ஓர் அரசியல் பிரச்சினை ஆகவோ மதத் துவேசத்தை ஏற்படுத்துகின்ற நிலைமையாகவோ எவரும் மாற்ற வேண்டாம். இந்தப் பிரச்சினைகளை கையாளும் பொறுப்பை இந்துக்களிடமே விட்டுவிடுங்கள். வழிபாட்டுத் தலத்தில் சமூகம் சம்பந்தமான பிரச்சினைகள் குறித்து கேள்விகள் எழலாம். சமூக நம்பிக்கையின் அடிப்படையில் ஓர் நிகழ்வு இடம்பெறும் போது அதனை அந்த கண்ணோட்டத்தில் அணுக வேண்டும். அதே நேரத்தில் சமூக விடயங்களை சமய நம்பிக்கையுடன் கலக்கக்கூடாது.

எமது சமயத்தின் புனிதமான கோட்பாடுகளுக்கோ அல்லது வழிபாட்டுத் தலங்களின் புனிதத்திற்கோ அல்லது தெய்வீக தன்மைக்கோ எவரும் களங்கம் ஏற்படுத்தக் கூடாது என அவர் கேட்டுள்ளார். (அ-2)

# போரில் இடம்பெயர்ந்த சகலரும் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர்

## ஜெனீவாவில் ரவிநாத் ஆரியசிங்க

(கொழும்பு)

போரில் இடம்பெயர்ந்த சகலரும் மீள் குடியேற்றப்பட்டு விட்டதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஜெனீவாவுக்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார்.

இதன்படி மொத்தமாக 2 இலட்சத்து 95 ஆயிரத்து 873 பேர் மீள்குடியேற்றப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜெனீவாவில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களை சொந்த இடங்களில் மீள்குடியேற்றுவதற்காக பலாலி உள்ளிட்ட இராணுவ முகாம்களில் நிலை நிறுத்தப்பட்டிருந்த படை வீரர்களை அகற்றி கொள்வது குறித்து ஆராயப்பட்டு வருகின்றன.

மேலும் பலாலி விமான நிலையம் மற்றும் காங்கேசன்துறைத் துறைமுகம் ஆகியவற்றை விஸ்தரிக்க காணிகள் பெற்றுக் கொள்ளப்பட்டன.

இந்த விஸ்தரிப்பு நடவடிக்கைகளின் போது காணிகளை இழப்போருக்கு நட்ட ஈடு வழங்கப்படவுள்ளது.

போர் நிறைவடைந்த காலத்தில் இரண்டாயிரம் சதுர கிலோமீற்றர் பரப்பில் நிலக்கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டிருந்தன . தற்போது நூறு சதுர கிலோ மீற்றருக்கும் குறைவான பகுதியில் மட்டுமே நிலக்கண்ணி வெடிகள் அகற்றும் பணிகளை தொடர வேண்டியுள்ளது என ரவிநாத் ஆரியசிங்க தெரிவித்துள்ளார். (அ-2)

# கைப்பணி பயிற்சி பெற்ற 190 பேருக்கு உதவிகள்

பனைசார் கைப்பணி பயிற்சியாளர்களுக்கு 19 இலட்சம் ரூபா பெறுமதியான கைப்பணி உபகரணங்கள் கையளிக்கப்படவுள்ளதாக பனை அபிவிருத்தி சபை தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு ஆலங்குடா பகுதியில் பனை உற்பத்தி கைப்பணி பயிற்சி பெற்ற 190 பேருக்கு தலா 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பனை சார் உற்பத்தி கைப்பணி உபகரணங்கள் வழங்கி வைக்கப்படவுள்ளன.

பாரம்பரிய கைத் தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா எதிர்வரும் ஜுன் மாதம் 7 ஆம் திகதி இவ்வுபகரணங்களை வழங்கி வைக்கவுள்ளாரென அவர் மேலும் கூறினார். (அ-2)

# அடிப்படை உரிமை மீறல் மனுவை வாபஸ் பெற்றார் அசாத் சாலி

(கொழும்பு)

கொழும்பு மாநகர சபையின் முன்னாள் பிரதி மேஜர் அசாத் சாலி கைது செய்யப்பட்டு தடுப்பு காவலில் வைக்கப்பட்டமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று முன்தினம் மீள் பெறப்பட்டது.

அசாத் சாலி தற்போது விடுதலை செய்யப்பட்டுள்ளதால் மனுவை திரும்பப் பெறுவதாக அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஜே.வெலியமுன உயர் நீதிமன்றிற்கு அறிவித்தார்.

இதனடிப்படையில் மனு தள்ளுபடி செய்யப்பட்டது.கே.ஸ்ரீபவன் சலிம் மர்சுக் ,பியசாத் டெப் ஆகிய நீதியரசர்கள் முன்னிலையில் இந்த மனு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

பொலிஸ்மா அதிபர், குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பணியாளர் உள்ளிட்டோர் மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இந்தியாவின் சென்னை நகரில் வெளியாகும் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் வெளியிட்ட கருத்துக்கள் காரணமாக அசாத்சாலி புலனாய்வுப் பிரிவினரால் கொலன்னாவை பிரதேசத்தில் வைத்து அண்மையில் கைது செய்யப்பட்டார் .

அவர் தடுப்பு காவல் உத்தரவின் பேரில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தபட்டிருந்த போது சட்டத்தரணி கௌரி சங்கரி தவறாக இந்த அடிப்படை உரிமை மனுவை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார். (அ-2)

# கிராம அபிவிருத்தி சங்கங்கள் முறையாக செயற்படுவதில்லை மக்கள் சுட்டிக்காட்டு

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலர் பிரிவிலும் கிராம அபிவிருத்தி சங்கங்கள் , மாதர் அபிவிருத்தி சங்கங்கள் மிகக் குறைந்த அளவிலேயே செயற்ப்பட்டு வருகின்றன.

ஏனைய சங்கங்கள் எவையும் மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு இயங்காதுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சில கொடுப்பனவுகளோ அல்லது விசேட கூட்டங்களோ நடைபெறும் போது இயங்காமல் இருக்கின்ற இந்த சங்கங்களின் நிர்வாகத்தினருக்கு அறிவிக்கப்படுகிறது. அவர்களும் சென்று வருவார்கள்,அங்குள்ள திட்டங்கள், உதவிகள் தமது கிராமத்து மக்களுக்கு இவர்கள் தெளிவுபடுத்துவதில்லை. இந்த கிராம அபிவிருத்தி சங்கங்கள் ,மாதர் அபிவிருத்தி சங்கங்களை மேற்பார்வை செய்வதற்கு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இருக்கின்ற போதிலும் சங்கங்களின் தொழிற்பாடுகளை அவதானிப்பதாக தெரியவில்லை.

எனவே மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலரும் பிரதேச செயலக மட்டங்களில் இயங்கும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் இதில் கவனம் எடுத்து இயங்காத நிலையில் உள்ள சங்கங்களை இயங்க வைப்பதற்கு ஏதுவாக புதிய தெரிவுகள் செய்யும் கிராம மக்களின் நலனில் அக்கறை கொள்ள ஆவன செய்யவேண்டுமென பொதுமக்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (அ-3-254)

# அமைச்சர் அதாவுத உட்பட 19 பேருக்கு எதிராக வழக்கு

(கொழும்பு)

சிரேஷ்ட அமைச்சர் அதாவுத செனவிரட்ன உள்ளிட்ட 19 பேருக்கு எதிராக சட்டமா அதிபர் ஆலோசனையின் படி, வரகாபொல மாவட்ட நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

வரகாபொல பொலிஸார் இந்த வழக்கை பதிவு செய்துள்ளனர். வரகாபொல - கொஹோம்பதெனிய நீர் விநியோக திட்டத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தி 10 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமாக நட்டத்தை ஏற்படுத்தியமை உள்ளிட்ட 4 குற்றச்சாட்டுகளை முன்வைத்து இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது சந்தேகத்திற்குரியவரான சிரேஷ்ட அமைச்சர் அதாவுத செனவிரட்ன நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை.

சுகவீனம் காரணமாக தமது தரப்புவாதி நீதிமன்றில் பிரசன்னமாகவில்லை என்று அமைச்சர் சார்பான சட்டத்தரணிகள் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

அதுகுறித்த மருத்துவ அறிக்கையை யும் அவர்கள் நீதிமன்றில் கையளித்துள்ளனர். அமைச்சர் உள்ளிட்ட 19 பேருக்கு குற்றப்பத்திரிகையை விளக்கும் நடவடிக்கை எதிர்வரும் ஜுலை மாதம் 5ஆம் திகதி இடம் பெறவுள்ளது.

அன்றைய தினம் அனைத்து பிரதிவாதிகளும் நீதிமன்றில் ஆஜ ராக வேண்டும் என்றும் வரகாபொல நீதிமன்ற நீதவான் பணிப்புரை விடுத்துள்ளார். (அ-2)





கிளி/ புனித பற்றிமா றோ.க.த.க. பாடசாலையின் 60 ஆவது ஆண்டு நிறைவுவிழா அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பாடசாலை மாணவிகளின் கலை நிகழ்வினையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# ஆசிய பிராந்தியத்தில் வளமும் வாய்ப்புக்களும் அதிகரித்துள்ளன


## மன்மோகன்சிங்



**இந்தியாவும் ஜப்பானும் இயற்கையான கூட்டாளிகள்; ஜப்பானுடனான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். ஆசியாவின் வளர்ச்சிக்கு அச்சாரமிட்ட நாடு ஜப்பான் என பிரதமர் மன்மோகன் சிங் புகழாரம் சூட்டினார்.**

ஜப்பானில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் மன்மோகன் சிங், ஜப்பான் - இந்தியா கூட்டமைப்பு, ஜப்பான் - இந்தியா நாடாளுமன்ற நட்புறவு அமைப்பு, சர்வதேச நட்புறவு பேரவை உள்ளிட்ட அமைப்புகள் ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சிகளில் நேற்று முன்தினம் பங்கேற்று உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமூக மற்றும் பொருளாதார ரீதியாக ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் பெரும் அளவிலான மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. கடந்த அரை நூற்றாண்டு காலமாக இப் பிராந்தியத்தில் வளமும், வாய்ப்புகளும் அதிகரித்துள்ளன. அதே சமயம், பல முனைகளிலிருந்து சவால்களும் அதிகரித்துள்ளன. ஸ்திரத்தன்மைக்கும், பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் எழுந்துள்ளது.



அமைதியையும், ஸ்திரத்தன்மையையும் ஏற்படுத்த இருநாடுகளும் முழு ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும். ஜப்பானுடனான இந்தியாவின் உறவு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. பொருளாதார மேம்பாட்டுக்காக மட்டுமின்றி, அமைதியையும், ஸ்திரத்தன்மையையும் ஏற்படுத்துவதில் இரு நாடுகளும் இயற்கையான கூட்டாளியாகத் திகழ்கின்றன.

ஜப்பானுடனான உறவுக்கு முக்கியத்துவம் கொடுத்தே **கிழக்கை நோக்கி** என்ற கொள்கையை அமுல்படுத்தி வருகிறோம். பாதுகாப்பு மற்றும் வெளி யுறவுத் துறை ரீதியாக இருநாடுகளும் பலமுறை நேரடி பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளன. ஜப்பான் கடற்படையினருடன் இணைந்து கூட்டுப் பயிற்சியிலும் இந்தியா ஈடுபட்டுள்ளது.

இருநாடுகளுக்கும் இடையேயான பாதுகாப்புத் துறை ரீதியான ஒத்துழைப்பை மேலும் பலப்படுத்த வேண்டும். பிராந்திய அளவில் மட்டுமின்றி சர்வதேச அளவிலும் இருநாடுகளும் இணைந்துசெயற்பட வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு பேரவையை மாற்றியமைப்பதில் இரு நாடுகளும் முக்கிய பங்காற்ற வேண்டும். கடற் பகுதி பாதுகாப்பிலும், எரிசக்தித் துறை பாதுகாப்பிலும் இரு நாடுகளும் ஒரே விதமான சவால்களை சந்தித்து வருகின்றன. கடல் சார்ந்த பிரச்சனைகள் அனைத்தும் சர்வதேச சட்டத்தின்படி தீர்வு காணப்பட வேண்டும்என்றார்.

**பத்மஸ்ரீ விருது வழங்கி கௌரவிப்பு**

ஜப்பான் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் மன்மோகன்சிங், சர்வதேச தமிழ ஆராய்ச்சி சங்கத்தின் முன்னாள் தலைவர் நொபொரு கராஷிமாவுக்கு நேற்று முன்தினம் பத்மஸ்ரீ விருது வழங்கி கௌரவித்துள்ளார்.

பிரதமர் மன்மோகன் சிங், மூன்று நாட்கள் பயணமாக ஜப்பான் சென்றுள்ளார். இந்நிலையில் அந்நாட்டு தலைவர்களை சந்தித்து, பல்வேறு வர்த்தக ஒப்பந்தங்களில் அவர் கையெழுத்திட்டு வருகிறார்.

ஜப்பானின், டோக்கியோ பல்கலைக்கழக பேராசிரியர் நொபொரு கராஷிமா (வயது 80). இவர் தென்னிந்திய வரலாறு குறித்து ஆய்வு செய்தவர். இதற்காக சென்னை பல்கலைக்கழகத்தில், கல்வெட்டு குறித்து ஆய்வுகளை மேற்கொண்டார்.

நன்றாக தமிழ் பேசக்கூடிய கராஷிமா, சர்வதேச தமிழ் ஆராய்ச்சி சங்க தலைவராகவும் பொறுப்பு வகித்துள்ளார். தமிழுக்கு இவர் ஆற்றிய சேவையை பாராட்டி பத்மஸ்ரீ விருது அறிவிக்கப்பட்டது.

உடல்நிலை சீரின்மையால் டில்லியில் கடந்த மாதம் 5ஆம் திகதி நடந்த விழாவில், கராஷிமா பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பாக். – இந்தியா இடையே பேச்சுக்கள் அவசியம்

(புதுடில்லி)

பாகிஸ்தான், சிறையில் இந்தியர்கள் கொல்லப்பட்ட சம்பவம் உட்பட பல்வேறு பிரச்சினைகளால், இரு நாட்டு உறவுகளுக்கு இடையே பின்னடைவு ஏற்பட்டுள்ளது.


எனவே, இந்தியா - பாக். இடையே ஒருங்கிணைந்த பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட வேண்டும் என வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் கூறியுள்ளார்.

இந்நிலையில் வெளியுறவுத்துறை அமைச்சர் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் கூறியதாவது,

இந்திய - பாக். உறவு நிலை தற்போது கவலையளிப்பதாக உள்ளது. கடந்த ஜனவரி மாதம், எல்லை அருகே இந்திய இராணுவ வீரர்கள் தலை துண்டிக்கப்பட்டு கொல்லப்பட்டதால், இரு நாடுகளுக்கு இடையேயான நீர்வளத்துறை செயலர்களின் பேச்சுவார்த்தை இரத்து செய்யப்பட்டது. அதன் பின் பாக். சிறையில் இந்தியர்கள் கொல்லப்பட்டதால் நிலைமை இன்னும் மோசமானது. இதனை தொடர்ந்து பல்வேறு சம்பவங்களால் இரு தரப்பிலும் பேச்சுவார்த்தை நடைபெறாமல் உள்ளது.

பாகிஸ்தானில் பிரதமராக பொறுப்பு ஏற்கவுள்ள, நவாஸ் ஷெரீப் இந்தியாவுடன் உறவுகளை சீரமைக்க விரும்புவதாக கூறியுள்ளமை வரவேற்கத்தக்கது.

இதை பயன்படுத்தி, எங்கிருந்து பேச்சுவார்த்தையை நிறுத்தினோமோ அங்கிருந்து தொடர வேண்டும் என்றார். (அ-2)




இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள கியூபா வெளியுறவுத்துறை அமைச்சர் புருனோ எடுவார்டோ ரோட்ரிகுயிஜ் பரில்லா டில்லியில் உள்ள ஐதராபாத் இல்லத்தில் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித்தை சந்தித்து பேசியதைப் படத் தில் காணலாம்.

பாரதச் செய்தி

# இலங்கை கடற்பகுதிக்குள் தமிழக மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட தடை

## நாகை மீனவர் கூட்டத்தில் தீர்மானம்



இலங்கை கடற்பகுதிக்குள் எல்லை தாண்டி சென்று மீன்பிடிக்கும் கடற்றொழிலாளர்களுக்கு மீன்பிடித் தொழில் செய்ய தடை விதிப்பது என்று காரைக்கால் நாகை மாவட்ட மீனவர்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து மீனவ பஞ்சாயத்தார் வீரதாசன் கூறியதாவது,

மீனவர்களின் ஒரே வாழ்வாதாரம் மீன்பிடித்தொழில் மட்டுமே. மீனவர்கள் தங்களது வாழ்வாதாரத்தை தேடி உயிரையும் பணயம் வைத்து காலம் காலமாக மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆனால், சமீபகாலமாக காரைக்கால் மற்றும் நாகை மாவட்ட மீனவர்களும் தமிழக மீனவர்களும் இலங்கை கடற்பரப்பிற்குள் நுழைந்து மீன்பிடிப்பதால் பல்வேறு பிரச்சினைகள் தோன்றியுள்ளன.

எனவே, இந்திய கடல் எல்லைக்குள் மட்டுமே மீன் பிடிப்பதென்பது கண்டிப்பாக இந்திய எல்லையைத் தாண்டி இலங்கைக் கடற்பகுதிக்குள் சென்று மீன்பிடிக்கக்கூடாது என்றும் அவ்வாறு இலங்கைக் கடற்பகுதிக்குள் சென்று யாராவது மீன்பிடித்து இலங்கை அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டால் அவர்களை மீட்பதற்கான நடவடிக்கைகளை எவரும் எடுப்பதில்லை என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் அவ்வாறு எல்லை தாண்டி மீன்பிடிக்கும் மீனவர்களை 2 மாதம் மீன்பிடித் தொழிலில் ஈடுபடத் தடை விதிப்பது என்றும் ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதிப்பது என்றும் பஞ்சாயத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.


மேலும் எந்தக் காரணத்தைக் கொண்டும் இரட்டை மடிவலை மற்றும் சங்கு வலைகளைப் பயன்படுத்தக்கூடாது. சின்னஞ்சிறிய மீன் குஞ்சுகளைக் கூட விட்டு வைக்காமல் அள்ளும் சுருக்குவலைகளை பயன்படுத்துவதால் மீன் வளம் குறைவடையும்

எனவே, அபாயத்தைத் தடுக்க படிப்படியாக 3 ஆண்டுகளுக்கு சுருக்குவலைகளை பயன்படுத்துவதை கண்டிப்பாக தடை செய்வது என்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (அ-2)

# நக்சலைட்டுக்களுடன் இனி பேச்சு இல்லை; தாக்குதலை தீவிரப்படுத்துவோம்

நக்சலைட்டுகளுக்கு எதிரான தாக்குதலை தீவிரப்படுத்துவோம். இனிமேல் அவர்களுடன் பேச்சு நடத்தப் போவதில்லை என்று மத்திய உள்துறை இணையமைச்சர் ஆர்.பி.என்.சிங் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்று முன்தினம் அவர் டில்லியில் செய்தியாளர்களிடம் கூறியதாவது,



நக்சலைட்டுக்களின் கொடூரமான படுகொலைகள் கடந்த 6 மாதங்களாக அதிகரித்துள்ளன. நக்சலைட்களுக்கு எதிரான கொள்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டும். அவர்களுக்கு எதிரான தாக்குதலை தீவிரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

உள்துறை அமைச்சராக ப.சிதம்பரம் இருந்தபோது, பேச்சு நடத்த நக்சலைட்டுகளுக்கு அழைப்பு விடுத்தார். ஆனால், அதனை அவர்கள் ஏற்கவில்லை. அவர்களுக்கு ஜனநாயகத்திலும், பேச்சுவார்த்தையிலும் நம்பிக்கையில்லை. வன்முறையை அவர்கள் கைவிடாதவரை பேச்சு நடத்துவதற்கான வாய்ப்பு இல்லை.

இவர்களால் பாதிக்கப்பட்ட மாநிலங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கும் விடயத்தை மறுபரிசீலனை செய்யவுள்ளோம். கடந்த ஆண்டுகளில் வழங்கப்பட்ட நிதியை, சில மாநில அரசுகள் செலவிடாமல் அப்படியே வைத்துள்ளன. வளர்ச்சிப் பணிகளை நடத்தி, அதன் பயன்கள் மக்களை சென்றடைவதை உறுதிப்படுத்தும் வழிவகைகள் குறித்து ஆராயப்படும்.

**நவீன ஆயுதங்கள் வழங்கப்படும்**

நக்சலைட்டுகளால் பாதிப்புக்கு உள்ளாகியுள்ள மாநிலங்களுடன் ஒருங்கிணைந்து மத்திய அரசு செயற்படும். மேலும் அந்த மாநிலங்களில் மேற்கொள்ளப்படும் நக்சலைட்டு ஒழிப்பு வேட்டைக்காக நவீன ஆயுதங்கள் வழங்குவதுடன் போதிய பாதுகாப்புப் படையினரும் அனுப்பி வைக்கப்படுவார்கள் என்றார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏவுகணை மாதிரி படம் திருட்டு; சீனா மீது அமெ. குற்றச்சாட்டு

(வோஷிங்டன்)

போர் விமானங்கள், ஏவுகணைகள் உள்ளிட்டவைகளை அமெரிக்காவுக்கு இணையாக சீனாவும் தயாரித்து வருகிறது. இந்த நிலையில் அமெரிக்கா தயாரித்து கணனியில் பாதுகாத்து வைத்திருந்த மாதிரி வரைபடங்களை சீனா திருடி விட்டதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

பிரசி-3 என்ற அதிநவீன பேட்ரியாட் ஏவுகணை, ஏவுகணைகளை சுட்டு வீழ்த்தக்கூடிய தொழில்நுட்பம் உள்ளிட்ட 30 இற்கும் மேற்பட்ட மாதிரிகளை சைபர் கிரைம் மூலம் திருடியதாக அமெரிக்காவின் இராணுவ தலைமையகமான பென்டகன் தெரிவித்துள்ளது.

இது குறித்த தகவல் அமெரிக்காவின் வோஷிங்டன் போஸ்ட் பத்திரிகையில் வெளியாகியுள்ளது.

இதில் சீன அரசு மற்றும் இராணுவத்துறை மீது அமெரிக்கா நேரடியாக குற்றம் சாட்டவில்லை. அதேபோன்று அவுஸ்திரேலியாவும் சீனா மீது திருட்டு புகார் கூறியுள்ளது. அவுஸ்திரேலியாவில் புதிதாக உளவுத்துறை தலைமை அலுவலகம் கட்டப்படவுள்ளது.

இது மிகவும் பாதுகாப்பு வசதியுடன் அமையவுள்ளது. இது குறித்து தயாரிக்கப்பட்ட புளூ பிரிண்டையும் கணனியில் இருந்து சீனா திருடியுள்ளது. இந்த தகவலை அவுஸ்திரேலியாவின் அரச தொலைக்காட்சி தெரிவித்துள்ளது. (அ-2)



கிர்கிஸ்தானுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின்(வலது) பிஸ்கெக் நகரில் தஜிகிஸ்தான் ஜனாதிபதி எமோமலிரக்மோனை சந்தித்து கைலாகு வழங்கியதை படத்தில் காணலாம்.

## உலக தரிசனம்

# முஸ்லீம் லீக் ஆட்சிக்கு வந்தவுடன் முஷாரப் மீது தேசத்துரோக வழக்கு

பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (என்) தலைமையிலான ஆட்சி அமைந்தவுடன் முன்னாள் ஜனாதிபதி பர்வேஷ் முஷாரப் மீது தேசத்துரோக வழக்கு தொடரப்படும் என்று அக்கட்சியின் எம்.பி. தாரிக் அஸீம் தெரிவித்துள்ளார்.



தனது ஆட்சியின் போது அவசரநிலையை அமுல்படுத்தி நீதிபதிகள் மீது நடவடிக்கை எடுத்தது, பலுசிஸ்தானில் முக்கிய பிரமுகர் அக்பர் பக்டினை இராணுவ நடவடிக்கை மூலம் கொன்றது ஆகிய வழக்குகளில் பர்வேஷ் முஷாரப் கைது செய்யப்பட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் அவர்மீது தேசத் துரோக வழக்குத் தொடர வேண்டும் என்று கோரி க்கை எழுந்தது.

பாகிஸ்தானில் ஒருவர் மீது தேசத் துரோக வழக்கை அரசுதான் தொடர முடியும் என்ற சட்டம் உள்ளது.

ஆனால் முஷாரப் மீது வழக்குத் தொடர தனக்கு அதிகாரம் இல்லை என்றும் புதிதாக தேர்ந்தெடுக்கப்படும் அரசுதான் அது தொடர்பாக முடிவு எடுக்க முடியும் எனவும் தற்போது ஆட்சியில் உள்ள இடைக்கால அரசு தெரிவித்துவிட்டது.

இந்நிலையில் சமீபத்தில் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் நவாஸ் ஷெரீப் தலைமையிலான பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சி அதிக இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியமைக்கவுள்ளது.

இதைத் தொடர்ந்து அக்கட்சியின் எம்.பி. தாரிக் அஸீம் செய்தியாளர்களிடம் கூறியதாவது,


முஷாரப் மீது தனிப்பட்ட முறையில் தனக்கு பிரச்சினை ஏதும் இல்லை. அதே சமயம் அரசியல் சாசன சட்டத்தை மீறியதற்காக அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நவாஸ் ஷெரீப் ஏற்கனவே தெரிவித்துள்ளார். இந்த விடயத்தில் அவர் உறுதியாக உள்ளார்.

அதன்படி ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் முஷராப் மீது தேசத் துரோக வழக்கு தொடருவோம். அவர் செய்த தவறுக்கான பலனை அவர் அனுபவிக்க வேண்டும் என்றார். (அ-2)

# அணுமூலக்கூறு உட்பகுதியை விஞ்ஞானிகள் படமெடுத்தனர்

(ஆம்ஸ்டர்டாம்)

அணுமூலக்கூறின் உட்பகுதியை முதன் முறையாக விஞ்ஞானிகள் படம் எடுத்துள்ளனர்.



அணுமூலக்கூறின் உட்பகுதியின் வடிவமைப்பை இதுவரை காலமும் படம் எடுக்க முடியவில்லை. ஏனெனில் அணு சோதனையின்போது அவற்றின் துகள்கள் உடனடியாக அழிந்துவிடும்.

ஆனால், சமீபத்தில் நடத்தப்பட்ட சோதனையின்போது நெதர்லாந்து விஞ்ஞானிகள் கதிரியக்கக் கருவிகள் மற்றும் நுணுக்குக் காட்டி உதவியுடன் ஐதரசன் துகள்களைப் பார்த்தனர். இதற்கு முன்பு இதுபோன்ற துகள்களை அவர்கள் பார்த்ததில்லை.

எனவே, அவற்றின் உள் அமைப்பை உடனடியாக படம் எடுத்தனர். இதற்காக அவர்கள் 20 ஆயிரம் மடங்கு பெரிதாகக் காட்டும் விசேடவில்லையையும் மிகப் பெரிதாகக் காட்டும் நுணுக்குக்காட்டியையும் பயன்படுத்தினார்கள். அணுமூலக்கூறின் உள் அமைப்பை படம் எடுத்ததன் மூலம் இலத்திரன்களின் புதிய அமைப்பைக் கண்டுபிடிக்க முடியும் என விஞ்ஞானிகள் தெரிவித்தனர். (அ-2)

# ஈராக்கில் கார் குண்டு வெடிப்பு; உயிரிழப்பு 70ஐ தாண்டியுள்ளது



ஈராக் தலைநகர் பக்தாத்தில் இடம் பெற்ற கார் குண்டுவெடிப்பில் 70 பேருக்கும் மேற்பட்டவர்கள் பலியாகியுள்ளனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

ஈராக்கில் சன்னி, ஷியா பிரிவினரிடையே தாக்குதல்கள் நடந்து வருகின்றன. இந்நிலையில் தலைநகர் பக்தாத்தில் ஷியா முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் பகுதியில் நடந்த கார் குண்டு தாக்குதலில் 70 இற்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் சதர் நகரில் சென்று கொண்டிருந்த பேருந்தில் குண்டு வெடித்தது. இதில் 5 பேர் உயிரிழந்தனர் .25இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

மொசூல் நகரில் ஆயுதம் ஏந்தியவர்கள் நடத்திய தாக்குதலில் 3 பொலிசார் உயிரிழந்தனர். மேலும் சில இடங்களில் நடந்த வன்முறைகளில் 5 பேர் உயிரிழந்தனர். (அ-2)

# படகு மூலம் ஆஸி வருவோர் திருப்பியனுப்பப்படுவர்

## ஆஸி. துணைத்தூதர் ஹோலி தெரிவிப்பு

படகுகள் மூலம் சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவினுள் நுழையும் இலங்கைத் தமிழர்கள் உடனடியாக திருப்பி அனுப்பப்படுவார்கள் என சென்னையில் உள்ள அவுஸ்திரேலியத் துணைத்தூதர் டேவிட் ஹோலி தெரிவித்துள்ளார். இது குறித்து நேற்று முன்தினம் அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது, இலங்கைத் தமிழர்கள் உட்பட பல்வேறு தரப்பட்ட மக்களிடம் அவுஸ்திரேலியாவுக்கு அழைத்து செல்வதாகக் கூறி அவர்களிடம் போலியான வாக்குறுதிகளை அளித்து பணம் பறிக்கும் நபர்கள் உள்ளனர். அவர்களை நம்பி படகுகள்மூலம் அபாயகரமான பயணத்தை அந்த மக்கள் மேற்கொள்கின்றனர். இத்தகைய படகுப் பயணத்தின் போது பெரும்பாலானமக்கள் உயிரிழந்தனர்.

இதுபோன்று படகுகள் மூலம் அவுஸ்திரேலியா வருபவர்களை நவுறு, பப்புவா நியுகினியா போன்ற தீவுகளுக்கு அனுப்பி வைத்து அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டு வந்தது. ஆனால் தற்போது கடல் பாதுகாப்பு நடவடிக்கைகளை அவுஸ்திரேலிய அரசு அமுல்படுத்தியுள்ளதால் படகுகள் மூலம் வருபவர்களைத் தடுக்கவும் கடலில் அவர்கள் உயிரிழப்பதை தடுக்கவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. அதன்படி இலங்கைத் தமிழர்கள் உட்பட சட்ட விரோதமாக படகுகள் மூலம் அவுஸ்திரேலியாவிற்குள் நுழைபவர்கள் திருப்பி அனுப்பப்படுவார்கள். பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட ஆயிரத்து 177 இலங்கைத் தமிழர்கள் இதுவரை திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்றார் அவர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்முடைய எண்ணங்களை நாம் மறைத்தாலும் நமது செயல்கள் அவற்றை அம்பலப்படுத்திவிடும்.
*-மெர்ரி கிளாட்டன்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அதிவேக நெடுஞ்சாலை நீங்கள் வரவா? நாங்கள் வரவா?

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையில் அதிவேக நெடுஞ்சாலை அமைப்பதற்கான உடன்படிக்கை ஒன்றில் இலங்கையும் சீனாவும் கைச்சாத்திட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தையும் கொழும்பையும் இணைக்கும் ஏ9 பாதைக்கு மேலாக இந்த அதிவேகப் பாதை அமைக்கப்படவுள்ளது.

கொழும்புக்கும் காங்கேசன்துறைக்கும் இடையில் புகையிரத சேவையை நடத்தும் பொருட்டு புகையிரதப் பாதை அமைக்கும் நடவடிக்கைகளும் தீவிரமாகி இருக்கின்றன.

அதேநேரம் பலாலிக்கும் இரத்மலானைக்கும் இடையில் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் விமான சேவையும் இடம்பெறுகின்றது.

இந்நிலையில் யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையில் அதிவேக நெடுஞ்சாலை அதிரடியாகத் தேவைதானா? என்ற கேள்வி எழவே செய்யும்.

இந்திய வீடமைப்புத் திட்டம் இன்னமும் முழுமையடையாத நிலையில் - இடம்பெயர்ந்த தமிழ் மக்களின் மீள்குடியமர்வு நடவடிக்கைகளுக்கு வீட்டுத் திட்டம் போதுமானதல்ல என்ற புள்ளி விபரங்களுக்கு மத்தியில்,

யாழ் - கொழும்புக்கு இடையில் அவசரமாக அரங்கேறும் அதிவேகப் பாதையானது முன்னுரிமை அடிப்படையில் வள ஒதுக்கீடு இடம்பெறவில்லை என்பதை உறுதி செய்கிறது.

தமிழர் பிரதேசங்களில் இன்னமும் மிதிவெடி அகற்றப்படாமல் - உடைந்து போன வைத்திய சாலைகள் கட்டப்படாமல் - மீள்குடியமரும் மக்களின் இருப்பிடங்கள் கவனிக்கப்படாமல் இருக்கும்போது,

அது தொடர்பான திட்டங்களில் அல்லவா இலங்கை அரசும் சீனாவும் உடன்படிக்கை செய்ய வேண்டும்.

இதைவிடுத்து யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்கும் இடையில் அதிவேகப் பாதை அமைப்பது எந்தத் தேவை கருதியதென்ற சிந்தனையில், நீங்கள் வருவதற்கா? அல்லது நாங்கள் வருவதற்கா? என்ற புரியாத புதிர் எழுகை பெறுகிறது.

அதாவது எதிர்காலங்களில் வட மாகாணத்தில் தமிழ் மக்கள் தங்கள் உரிமைகள் தொடர்பில் போராட்டங்களை முன்னெடுப்பார்களாக இருந்தால்,

அதனைத் தடுப்பதற்கும் அடக்குவதற்குமாகத் தென் பகுதியிலிருந்து துருப்புக்களையும் கனரக வாகனங்களையும் அதிவேகமாகக் கொண்டு வருவதற்கு அதிவேகப் பாதை வசதியாக இருக்கும் என்பதால், நீங்கள் வருவதற்காகவா? என்ற கேள்வி முன்னெழுகிறது.

மறுபக்கமாக 1958களில், 1983களில் நடந்த தென்பகுதிக் கலாசாரம் வரும் காலங்களில் அரங்கேறினால் சிதம்பரம் கப்பலுக்காக காத்திராமல் தமிழ் மக்களாகிய நீங்கள் அதிவேகமாக உங்கள் சொந்த இடங்களுக்குச் செல்வதற்கு இந்த அதிவேக நெடுஞ்சாலை உதவும் என்பதால்,நாங்கள் வருவதற்கா? என்ற கேள்வி முன்வைக்கப்படுகின்றது.

இதில் எது சரி என்பதைத் தவிர வேறு ஏதேனும் காரணம் உண்டா? என்று கேட்பதற்கு இடம் இருப்பதாக தெரியவில்லை.

# இலங்கையின் மனிதவுரிமை நிலைமைகள் மோசமடைவு

## முன்னாள் தூதுவர் மார்ஷன் தெரிவிப்பு

இலங்கையில் நடைபெறவுள்ள பொது நலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டை கனேடிய அரசாங்கம் மட்டும் புறக்கணிப்பது உள்நாட்டு அரசியலைக் கருத்திற் கொண்டே அமைந்துள்ளதாக இலங்கைக்கான கனடாவின் முன்னாள் உயர்ஸ்தானிகர் மார்டின் கொலாகொட் தெரிவித்துள்ளார். இவ் விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழ் வாக்காளர்களின் ஆதரவைத் திரட்டவே கனடா, இலங்கைக்கு எதிராக செயற்படுகின்றது.

கனேடிய வாழ் தமிழ் மக்களின் வாக்குகளை இலக்கு வைத்தே தற்போதைய அரசாங்கம், பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டை புறக்கணிக்க முயற்சித்து வருகிறது.

1983 ஆம் ஆண்டு காலப்பகுதி யில் கொலாகொட் இலங்கையில் கடமையாற்றியுள்ளார். உள்நாட்டு அரசியல் நோக்கங்களே இந்த விவகாரத்தில் மேலோங்கிக் காணப்படுகின்றன.

இலங்கையில் மனித உரிமை நிலைமைகள் மோசமாகக் காணப்படுகின்றது என்பதில் தமக்கு மாற்றுக் கருத்து கிடையாது. யுத்தத்தின் பின்னர் மனித உரிமை நிலைமைகள் மேம்படுத்தப்பட வேண்டுமென எதிர்பார்க்கிறேன்.

நீதவான்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். ஊடகவியலாளர்கள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். அரசாங்க த்தை விமர்சனம் செய்வோருக்கு எதிராக அடக்கு முறைகள் பிரயோகிக்கப்படுகி ன்றன.

இலங்கை மனித உரிமை நிலைமைகள் தொடர்பில் சர்ச்சைகள் காணப்படுவது நிதர்சனமான் உண்மையாகும். எனினு ம், கொழும்பில் நடை பெறவு ள்ள பொது நலவாய நாடுகள் தலைவர்கள் மாநா ட்டை கனேடிய அரசாங்கம் மட்டும் புறக்கணிப்பது உள்நாட்டு அரசியலை கருத்திற்கொண்டே என தாம் கருதுவதாக குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# பௌத்தர்கள் இல்லாத இடத்தில் புத்தர் சிலை அமைப்பது ஏன்?

## பொன்.செல்வராசா எம்.பி கேள்வி

மட்டக்களப்பு மாவட்டத்தில் பௌத்த மக்கள் இல்லாததால் ஏற்கெனவே இருக்கின்ற புத்தர் சிலைகளை பராமரிப்பதற்கு யாருமே இல்லாத நிலையில் புதிதாக எதற்கு புத்தர் சிலை?

இப்பிரதேசத்தில் புத்தர் சிலைகளை அமைத்து புத்தபெருமானை அவமதிக்காதீர்கள் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு நகர நுழைவாயிலில் புத்தர் சிலை அமைக்கப்பட மாட்டாது என மட்டக்களப்பு 231ஆவது படைப்பிரிவின் பிரிகேடியர் சுசந்த திலகரத்ன உறுதியளித்துள்ளதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராசா தெரிவித்தார்.

நேற்று மட்டக்களப்பில் மட்டக்களப்பு மாவட்டத்தின் மாநகர சபையின் நுழைவாயில் வரவேற்பு வளைவுக்கு அருகில் புத்தர் சிலை அமைக்கும் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அதனைக் கண்டித்தும் நேற்று புதன்கிழமை காலை மட்டக்களப்பு பிள்ளையாரடி பிரதேச மக்களினாலும் அவ்வூர் பிரமுகர்களாலும் "அத்துமீறி புத்தர் சிலை வைப்பதற்கு எதிர்ப்புப் பேரணி" ஏனும் தொனிப் பொருளிலான மாபெரும் எதிர்ப்புப் பேரணியொன்று இடம்பெற்ற போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மட்டக்களப்பு மங்களாராம விகாரை விகாராதிபதி அம்பித்திய ஸ்ரீ சுமரரத்ன தேரர் மட்டக்களப்பு மாவட்டத்தில் காலங்காலமாக வாழ்ந்து வருகின்ற மக்களுக்கு மத்தியில் இன முறுகலை ஏற்படுத்த முனைகின்றார்.

இலங்கை நாட்டில் சமாதானம் நிலவி வருகின்ற இக்கால கட்டத்தில் இவ்வாறு பௌத்த மக்கள் இல்லாத பிரதேசத்தில் புத்தர் சிலையை அமைத்து இனங்களுக்கு மத்தியில் முரண்பாடுகளை தோற்றுவிக்கும் மட்டக்களப்பு மங்களாராம விகாரை விகாராதிபதி அம்பித்திய ஸ்ரீ சுமரரத்ன தேரரின் இந்த நடவடிக்கையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டிக்கின்றது.

புத்தர் சிலை அமைப்பதற்கு நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர், வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு அனுமதி வழங்கியுள்ள இந்த செயற்பாடானது மாவட்டத்தில் வாழ்கின்ற மக்களின் சமாதானத்தையும் சகவாழ்வையும் குழப்பும் நடவடிக்கையாகும். இதனை உடனடியாக நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் நிறுத்த வேண்டும்.

இதேவேளை குறித்த புத்தர் சிலையை இந்த இடத்தில் வைக்கவுள்ளார் என்பதை அறிந்து இதற்கு ஆட்சேபனை தெரிவிக்கும் வண்ணமும் எதிர்ப்புத் தெரிவித்தும் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை ஏற்பாடு செய்து அதை நடத்திக் கொண்டிருந்தோம்.

இது [illegible] மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் மற்றும் மட்டக்களப்பிலுள்ள 231ஆவது படைப்பிரிவின் பிரிகேடியர் சுசந்த திலகரத்ன ஆகியோரை சந்தித்து இது பற்றி கலந்துரையாடினோம்.


இச்சந்திப்பின்போது குறித்த பகுதியில் புத்தர் சிலை அமைக்கப்பட மாட்டாது. என்னை நம்புங்கள். ஏனெனில் மங்களாராம விகாராதிபதி தற்போது கண்டியில் உள்ளார். எதற்கும் நீங்கள் பயப்படத தேவையில்லை. தயவு செய்து ஆர்ப்பாட்டத்தை கைவிடுங்கள் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க ஆர்ப்பாட்டத்தை கைவிட்டு விட்டு மகஜரை மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸிடம் கையளித்ததுடன் இதன் பிரதிகளை 231ஆவது படைப்பிரிவின் பிரிகேடியர் சுசந்த திலகரத்ன மற்றும் அதிகாரிகளிடம் சமர்ப்பித்துள்ளோம்.

இங்கு புத்தர் சிலை அமைக்கப்பட மாட்டாது என பிரிகேடியர் வாக்குறுதி அளித்ததற்கிணங்கவே குறித்த ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டுள்ளோம்.

பௌத்தர்கள் இல்லாத மட்டக்களப்பு மாவட்டத்தில் புத்தர் சிலையை அமைத்து புத்த பெருமானை அவமதிக்காதீர்கள். இங்கு ஏலவே அமைக்கப்பட்டுள்ள புத்தர் சிலைகளை பராமரிப்பதற்கு யாருமே இல்லாத நிலையில் மீண்டும் அதே பிரதேசத்தில் புத்தர் சிலை அமைக்கப்படுவதானது புத்தரை மேலும் மேலும் அவமதிக்கின்ற செயலாகவே நாம் கருதுகின்றோம்.

நீங்கள் உங்களுடைய விகாரைகளில் எத்தனை சிலைகளை வேண்டுமானாலும் அமையுங்கள். நாங்கள் ஒன்றும் சொல்ல மாட்டோம்.பௌத்தர்களே இல்லாத மட்டு மாநகர சபை எல்லையில் புத்தர் சிலையை அமைத்து புத்தரை இம்சை செய்யாதீர்கள் என த. தே. கூட்டமைப்பு மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா தெரிவித்துள்ளார் .(செ-11)

## சத்திய தரிசனம்



நீங்கள் அனைவரும் வீடுபேறு அடைவீர்கள் என்பதில் உறுதியுடன் இருங்கள். நீங்கள் காப்பாற்றப்பட்டுவிட்டீர்கள் என்பதனை அறியுங்கள். காலம்மாறி மேம்பாடடையும் அனைவருக்கும் வாழ்வு மகிழ்ச்சியாக இருக்கும். களிப்பு நிரம்பியிருக்கும். பொற்காலம் மீண்டும் ஆரம்பிக்கும் என்பதனை நம்பிடப் பலரும் தயங்குகின்றனர். இந்த தர்மஸ்வரூபம் வீணா வந்திடவில்லை என்பதனை மட்டும் நான் உறுதியாக உங்களுக்குத் தெரிவிக்கிறேன். அபாயத்திலிருந்து மனிதகுலத்தைக் காப்பதில் அது வெற்றிபெறும்.தியானமும் தவமும் ஒருவரது (சொந்த) சுயமான நன்மைக்குப் பயன்படும். ஆனால் பெரியளவில் உலகிற்கு நன்மையானது தியாகத்தின் வாயிலாகவே பெறப்படுகின்றது. உபநிடதங்கள் வீடுபேற்றுக்கான ஒரேவழி தியாகம் என அறிவிக்கின்றன. தங்கள் பிள்ளைகளுக்காக செல்வத்தைச் சேர்ப்பவர்கள் தாங்கள் அனுபவிக்காது சேர்த்து வைத்து தங்களது பிள்ளைகளையும் சீரழிக்கின்றனர். ஆகவே, உங்களது செல்வங்களை தர்மம் செய்து அதனைப் பொருளுள்ளதாக்குங்கள். இந்தச் செல்வத்தைக் கிராமப்புறங்களில் துன்பத்தில் தவிக்கும் மக்களுக்கு உதவிபுரியும் வகையில், நல்ல வகையில் பயன்படுத்துங்கள்.

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### காலையில் கஞ்சியும் நெய்யும் அருந்துவதன் மேன்மை என்ன?

நம் நாட்டில் அதிகாலையில் கஞ்சியும் நெய்யும் அருந்தும் வழக்கம் இருந்தது. பண்டைக்காலத்தில் நவீன உணவு முறைகள் மற்றும் பாஸ்புட் உணவு வகைகள் இன்றைய தலைமுறை பழக்கப்படுத்தி வருவதால் கஞ்சி, நெய், கீரை, பயறு வகைகள் என்பவைக்கு இடமில்லாமல் போய்விட்டது. காலை உணவுக்கு கஞ்சியும் நெய்யும் அருந்தியிருந்தவர்கள் அதில் கூடவே கீரை வகைகள், பயறு வகைகள் முதலியவையும் சேர்த்திருந்தனர்.

சரிவிகித உணவாக அமைந்தாலே அன்றைய மக்கள் இவ்வகை உணவைப் பழக்கப்படுத்தியிருந்தனர். கஞ்சியில் இருந்தும் தாராளமான நீர் தமது இரத்தத்தில் கட்டியிருக்கும் விஷ அம்சத்தையும் அசுத்தங்களையும் முற்றிலும் அகற்றிவிட உதவுகின்றது.

மேலும் இவ் உணவில் அடங்கியிருக்கும் விற்றமின்கள் உடல் நலத்தைப் பாதுகாக்க உதவும். நெய்யிலிருந்து தேவையான பொஸ்பரஸ் மற்றும் கொழுப்பு கிடைக்கின்றது. பயறு வகையில் இருந்து புரதச்சத்தும் கீரை வகை களிலிருந்து விற்றமினும் கிடைக்கும். கஞ்சியின் சோறு நம் உடலுக்கு தேவைப்படும் காபோவைதரேற்றையும் அளிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மினி உலகக் கிண்ணப் போட்டியில் பங்கேற்கும் இந்திய வீரர்களுக்கு கடும் கட்டுப்பாடு

மினி உலகக் கிண்ணப் போட்டியில் பங்கேற்க சென்றுள்ள இந்திய அணி வீரர்களுக்கு கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. ஐபிஎல் கிரிக்கெட் சூதாட்ட விவகார எதிரொலியாக இந்த கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதன்படி இந்திய வீரர்களை கண்காணிக்கும் முழு பொறுப்பும், இந்திய அணி முகாமையாளராக இருந்த ஒடிசா கிரிக்கெட் சங்க நிர்வாகி ரஞ்ஜிப் பிஸ்வாலிடம் ஒப்படைக்கப் பட் டுள்ளது. நேர்மையான நடவடிக்கைக்கு பெயர் பெற்றவர் ரஞ்ஜிப் பிஸ்வால். இதன் காரணமாகவே அவருக்கு இந்த பொறுப்பு வழங்கப்பட்டிருக்கிறது.

இங்கிலாந்தில் தங்கியிருக்கும்போது இந்திய வீரர்கள் யாரும் இரவு நேர விருந்துக்குச் செல்லக்கூடாது. இரவு நேரத்தில் தேவையில்லாமல் ஹொட்டலை விட்டு வெளியே செல்லக்கூடாது. பிஸ்வாலின் அனுமதி இல்லாமல் எந்த வீரர்களும் ஹொட்டலை விட்டு வெளியேறக் கூடாது, இரவு நேர சாப்பாட்டுக்கு செல்வதென்றால்கூட இவரிடம் அனுமதி பெறவேண்டும், வெளியில் இருந்து எந்த தொலைபேசி அழைப்பும் வீரர்களுக்கு வராது. பூத்திரிகையாளர்களும் வீரர்களை தொடர்புகொள்ள அனுமதி பெற்றே செல்ல வேண்டும். வீரர்களின் கைபேசிகள் முழு நேரமும் தீவிர கண்காணிப்பில் இருக்கும். வீரர்கள் யாரிடம் இருந்தும் பரிசு பொருட்களும் பெறக்கூடாது என்பது உள்ளிட்ட பல கட்டுப்பாடுகளை இந்திய கிரிக் கெட் சபை விதித்திருக்கிறது.

இந்த கட்டுப்பாடுகளும் விதி முறைகளும் ஏற்கனவே இருந்த போதிலும், 2011 உலகக் கிண் ணத்துக்கு பின்னர் இதை கண்டு கொள்ளாமல் இருந்தனர். இப்போது ஐபிஎல் சூதாட்ட விவகாரம் பூதாகரமாக வெடித்துள்ளநிலையில், இந்த கட்டுப்பாடுகளை கண்டிப்புடன் கடைப்பிடிக்க கிரிக்கெட் சபை தீவிரமாக உள்ளது.

## சூதாட்ட கேள்விகளுக்கு புன்னகையுடன் நழுவிய தோனி

மினி உலகக் கிண்ணம் என்று அழைக்கப்படும் 7ஆவது சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் இங்கிலாந்தில் அடுத்த மாதம் 6ஆம் திகதி தொடங்கி, 23ஆம் திகதி வரை நடைபெற வுள்ளது. இதில் பங்கேற்பதற்காக இந்திய கிரிக்கெட் அணி நேற்று இங்கிலாந்துக்கு புறப்பட்டது.

இதையொட்டி மும்பையில் நேற்று முன்தினம் செய்தியாளர் களைச் சந்தித்த இந்திய அணித் தலைவர்,

மினி உலகக் கிண்ணப் போட்டிக்கான இந்திய அணி சரியான கலவையில் சிறப்பாக இருக்கிறது. இந்த கிண்ணத்தை நமது அணி வெல்ல நல்ல வாய்ப்பு உள்ளது. வீரர்கள் அனைவரும் நம்பிக்கையுடன் ஆடி வருகிறார்கள். எனவே சிறப்பாக ஆடுவோம் என்று நம்புகிறேன்' என்றார்.

இதன்போது குறுக்கிட்ட ஊடகவியலாளர் ஒருவர் சூதாட்ட பிரச்சினைக்கு பின் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் அனைத்தும் நேர்மையாக இருக்கும் என்று ரசிகர்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்படுத்துவது எந்த அளவுக்கு கடினமாக இருக்கும் என்று கேட்டார்.

உடனே குறுக்கிட்ட இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின்(பி.சி.சி.ஐ.,) ஊடக முகாமையாளர் கடும் கட்டுப்பாடு களை விதித்தார். சம்பியன்ஸ் கிண்ணம் தொடர்பாக மட்டும் கேட்கும்படி நிபந்தனை விதித்தார்.


தவிர, சூதாட்டம் தொடர்பான கேள்விகளுக்கு பதில் அளிக்க வேண்டாமென டோனிக்கு அறிவுறுத்தினார். தோனியும் புன்னகை செய்தவாறு நழுவினார்.



# சீனிவாசனுக்கு தொடரும் தலையிடி

சூதாட்ட விவகாரத்தில் மருமகன் குருநாத் கைதாகியுள்ள நிலையில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைத் தலைவர் பதவியில் இருந்து என். சீனிவாசன் பதவி விலகவேண்டும் என்று மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் ஜிதேந்திரசிங் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சீனிவாசன் பதவி விலக வேண்டும் என்ற குரல் வலுத்து வரும் நிலையில் தாம் பதவி விலக முடியாது என்று அவர் மறுத்து வருகிறார். இந்நிலையில் விளையாட்டுத்துறை அமைச்சகம் நேற்று வெளியிட்ட அறிக்கையில், தார்மீக அடிப்படையில் விசாரணை முடிவடையும் வரை சீனிவாசன் பதவியில் இருந்து



விலகவேண்டும். அனைத்து விளையாட்டுகளிலும் நடைபெறும் முறைகேடுகளை சட்டத்தின் கீழ் விளையாட்டுத் துறை அமைச்சகம் தடுக்க நடவடிக்கை மேற்கொளளும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைத் தலைவர் பதவியில் இருந்து சீனிவாசன் பதவி விலகவேண்டும் என்று ராஜிவ் சுக்லா, அருண் ஜேட்லி ஆகியோர் வலியுறுத்தியதைத் தொடர்ந்து விளையாட்டுத்துறை அமைச்சகத்தின் அறிக்கை வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாக்.கிரிக்கெட் சபைத் தலைவர் தற்காலிகமாக நீக்கம்

பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் பதவியிலிருந்து ஷாகா அஷ்ரப் தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளார். இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றமே அவரைத் தற்காலிகமாக பதவியிலிருந்து நீக்கியுள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத்தலைவர் பதவிக்கு அண்மையில் மீண்டும் 4 ஆண்டுகளுக்குத் தெரிவுசெய்யப்பட்டிருந்த ஷாகா அஷ்ரப், இதன் காரணமாக எதிர்வரும் ஜூன் 13ஆம் திகதி வரை தனது பதவியைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

ஷாகா அஷ்ரப் இரண்டாவது முறையாகத் தெரிவுசெய்யப்பட்ட தேர்தல் தவறானது எனத் தெரிவித்து ராவல்பிண்டி கிரிக்கெட் சபையின் முன்னாள் அதிகாரியொருவர் தாக்கல் செய்த வழக்கின் கார்ணமாகவே இந்த முடிவு பெறப்பட்டுள்ளது.

குறித்த தேர்தல் மோசடியானதாக அமைந்ததாகவும், அதன் காரணமாக



ஷாகா அஷ்ரப்பை பதவியிலிருந்து விலக்க வேணடுமெனவும் அந்த முன்னாள் அதிகாரி தெரிவித்திருந்தார்.

குறித்த அதிகாரியின் கோரிக்கைகளில் நியாயமான தனமைகள் காணபபடுவதாகத் தெரிவித்த நீதிமன்றம், எதிர்வரும் ஜூன் 13ஆம் திகதி மீண்டும் விசாரணைகள் இடம்பெறும் வரை ஷாகா அஷ்ரப் தனது பதவியின் அதிகாரத்தைப் பயன்படுத்தத் தடை விதிக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முடிவு காரணமாக எதிர்வரும் மே 28ஆம், 29ஆம் திகதிகளில் இடம்பெறவிருந்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் வருடாந்தப் பொது மாநாடு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## கிரிக்கெட்டை காதலியுங்கள்

கிரிக்கெட்டை இன்னும் பைத்தியக்காரன் போல் காதலிக்கிறேன் என்று நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் கூறியுள்ளார்.

மும்பையில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட சச்சின் பேசுகையில், இன்னும் எனக்கு கிரிக்கெட் மீது பைத்தியக்காரத்தனமான காதல் உள்ளது. அதை நான் தீவிரமாக காதலிக் கிறேன்.

எனக்கு 23 வருடமாக ஆதரவு கொடுத்து வரும் ரசிகர்களுக்கு நன்றிக் கடன் பட்டுள்ளேன். ஒவ்வொரு வீரருக்கும் நான் சொல்லிக் கொள்ள விரும்புவது இதுதான் - கிரிக்கெட்டை காதலியுங்கள். அப்போதுதான் அதில் ஈடுபாட்டுடன் இருக்க முடியும்.

அதேபோன்று என் மீது அன்பு



செலுத்தும் ரசிகர்கள் மீதும் நான் தீராத நேசத்தை வைத் துள்ளேன் என்றும் அவர்களுக்காக என்னால் முடிந்ததைத் தர விரும்புகிறேன், முயலுகிறேன் எனவும் கூறினார்.

## கிறிஸ் லைனுக்கு அபராதம்

அவுஸ்திரேலியாவின் துடுப்பாட்ட வீரர் கிறிஸ் லைனுக்கு 2000 அவுஸ்திரேலிய டொலர்கள் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சமூக இணையத்தளம் ஒன்றில் கிறிஸ் லைன் வெளியிட்டிருந்த கருத்துக்கள் அவமதிக்கும் வகையில் அமைந்துள்ளதாகத் தெரிவித்து இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.


கிரிக்கெட் விழுமியங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து கிறிஸ் லைன் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை அவர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

பிரிஸ்பேன் பெண் ஒருவரினால் ரக்பி வீரர் பென் டியோவிற்கு எதிராக மேற்கொளளப்பட்ட தாக்குதல் குற்றச்சாட்டு குறித்து கிறிஸ் லைன் கருத்து வெளியிட்டிருந்தார்.

இதற்கு முன்னர், சமூக இணையத் தளத்தில் கருத்து வெளியிட்டமைக்காக அவுஸ்திரேலியாவின் டேவிட் வோணருக்கும் அபராதம் விதிக்கப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜொலிஸ்ரார் வெற்றிக்கிண்ணம் ஸ்ரான்லி அணி இரு சாதனைகள்









ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணத்துக்காக ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் வருடா வருடம் நடத்தும் 30 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் 2-வது சுற்றில் ஸ்ரான்லி அணி, யங்ஸ்ரார் அணியை 157 ஓட்டங்களால் வெற்றிபெற்று காலிறுதிக்குத் தகுதி பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி அணி 29 ஓவர்களில் 6 இலக்குகளை இழந்து 311 ஓட்டங்களை எடுத்ததுடன் கழக அணி ஒன்றால் எடுக்கப்பட்ட அதிக கூடிய ஓட்ட எண்ணிக்கை என்ற புதிய சாதனையையும் படைத்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கிய சுதர்ஸன், கனன்ராஜ் ஆகிய இருவரும் முறையே 107, 97 ஓட்டங்களை எடுத்ததுடன் முதலாவது விக்கெட்டுக்காக தமக்கிடையில் 216 ஓட்டங்களைப் பகிர்ந்து 30 ஓவர்களைக் கொண்ட போட்டிகளில் முதலாவது விக்கெட்டுக்காக பெறப்பட்ட அதிகூடிய இணைப்பாட்டம் என்ற சாதனையையும் படைத்தனர். தவிர செல்வராசா 28, ராஜிவ் 17 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் யங்ஸ்ரார் அணி சார்பாக ரஜீவ் 5 இலக்குகளையும், வசி ஒரு இலக்கினையும் கைப்பற்றினர்.

312 என்ற கடின வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்குத் தமது துடுப்பாட்டத்தை ஆரம்பித்த யங்ஸ்ரார் அணி 27 ஓவர்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 154 ஓட்டங்களையே எடுத்தது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக சுஜன் 49, கமல் 56 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் ஸ்ரான்லி அணி சார்பாக மதன் 3, செல்வா, றாஜிவ் ஆகியோர் தலா 2, கௌரி, கஜதீபன் ஆகியோர் தலா ஒரு இலக்கினைக் கைப்பற்றினர்.

இதன் மூலம் ஸ்ரான்லி அணி 157 ஓட்டங்களால் அபார வெற்றியைப் பெற்றது.

30 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட போட்டியை முதன்முதலில் யாழ்.நகரில் 1983-ம் ஆண்டு ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் ஆரம்பித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜொலிஸ்ரார் அணி வெற்றி

ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம், யாழ். மாவட்ட துடுப்பாட்ட அணிகளுக்கிடையில் 30 பந்துப் பரிமாற்றங்கள் மட்டுப்படுத்தப்பட்ட துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியொன்றை யாழ்ப்பாணம் இந்து மைதானத்தில் நடத்தி வருகின்றது.

இச்சுற்றுப் போட்டியின் போட்டியொன்றில் ஜொலிஸ்ரார் அணியினை எதிர்த்து திருநெல்வேலி சி.சி. அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி சி.சி. அணி, 19.3 பந்துபரிமாற்றங்களில் 79 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் அசோகன் 26 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். பந்துவீச்சில் ஜொலிஸ்ரார் அணி சார்பாக றுக்ஸமன் 4, வாமணன் 3 இலக்குகளையும் கைப்பற்றினர்.

80 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய ஜொலிஸ்ரார் அணி, 13.4 பந்து பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் மணிவண்ணன் 38, பகீரதன் 20 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் திருநெல்வேலி சி.சி. அணிசாபாக பிரதீஸன் 3 இலக்குகளைக் கைப்பற்றினார்.

# வலைப்பந்தாட்டம் சண்டிலிப்பாய் இந்து சம்பியன்

மைலோ கிண்ணத்திற்கான யாழ். மாவட்ட பாடசாலைகளின் 18 வயதுப்பிரிவு அணிகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி கடந்த திங்கட்கிழமை உடுவில் மகளிர் கல்லூரி வலைப்பந்தாட்டத் திடலில் நடைபெற்றது.

இச்சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அணியினை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்து கல்லூரி அணி மோதியது. இப்போட்டியில் சண்டிலிப்பாய் இந்து கல்லூரி அணி 23:14 புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றுச் சம்பியனாகியது.

# மூன்றாவது காலிறுதியில் கால் பதித்தது ஓல்ட் கோல்ஸ்

(யாழ்ப்பாணம்)

யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் நடத்தும் வீ.டி.ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணத்துக்கான 50 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப்போட்டியன் 13-வது போட்டியில் அரியாலை சென்றல் அணியை ஓல்ட் கோல்ஸ் அணி 7 இலக்குகளால் வெற்றிகொண்டு காலிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை சென்றல் அணி 30.1 பந்து பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 142 ஓட்டங்களைபெற்றது.

துடுப்பாட்டத்தில் அவ்வணி சார்பாக நிரோஸன் 15 , துவாரகன் ஆட்டமிழக்காமல் 23, சிந்துஜன் 31, வினோர்தன் 33 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் கஜேந்திரன் 4, தலீபன் 3,றிரோஸன் 2 என இலக்குகளை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பொடுத்தாடிய ஓல்ட் கோல்ஸ் அணி 25.3 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை கடந்து 150 ஓட்டங்களை பெற்றனர்.

துடுப்பாட்டத்தில் ஓல்ட் கோல்ஸ் அணி சார்பாக சிறிகுகன் 65, நிரோஸன் ஆட்டமிழக்காது 48, திலீபன் 16 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் துவாரகன், சிந்துஜன் ஆகியோர் முறையே 2,1 இலக்குகளை கைப்பற்றியிருந்த னர்.

இப்போட்டியில் வெற்றி பெற்ற ஓல்ட் கோல்ஸ் அணி ஜொலிஸ்ரார் ஸ்ரீகாமாட்சி அணிகளுக்கிடையிலான போட்டிகளில் வெற்றி பெறும் அணியுடன் 3 ஆவது கால் இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

# கிரிக்கெட் போட்டி

(சாவகச்சேரி)

மட்டுவில் கண்ணகை விளையாட்டுக் கழகத்தின் பத்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ். மாவட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான 5 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் போட்டி எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமையும், இரண்டாம் திகதி ஞாயிற்றுக் கிழமையும் பன்றித்தலைச்சி அம்மன் ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் அன்றைய இரு தினங்களிலும் காலை 9 மணிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் தெரிவிக்கப்படுகின்றது. (3-29)

# ஆயிரம் தேரர்கள்...

நேரத்தில் செய்ய வேண்டியதை ஆரம்பத்தில் செய்வது பொருத்தமற்றது எனவும் தேசபற்றுள்ள தேசிய அமைப்பின் ஏற்பாட்டாளர் குணவங்ச தேரர் தெரிவித்துள்ளார்.

மாடுகள் அறுக்கப்படுவது குறித்து திடீரென நிலைப் பாடுகள் முன்வைக்கப்பட்டமை ஏகாதிபத்தியவாத சூழ்ச்சியாகும். தேரர்கள் தீக்குளிக்க வேண்டுமாயின் இதற்கு முன்னர் பல சந்தர்ப்பங்கள் இருந்தன.

ஸ்ரீமகா போதி மீது குண்டு தாக்குதல் நடத்தப் பட்ட போதும், அரந்தலாவ பிக்குகள் கொலை செய்யப் பட்ட சந்தர்ப்பத்திலும் தலதா மாளிகை மீது தாக்குதல் நடத்தப்பட்ட போதும் இவ்வாறான தற்கொலைகளை செய்திருக்க முடியும் எனவும் குணவங்ச தேரர் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

# அவுஸ்...

தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கடல் மார்க்கமாக கொழும்புக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளதாகவும கடற்படையினா மேலும் தெரிவித்தனா.

புலனாய்வுத்துறையினரின் விசாரணைகளுக்காக மோதர துறைமுகத்திற்கு அழைத்து வரப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (செ)

# ராஜீவ் கொலை...

சந்திராசாமி விசாரிக்கப்படவில்லை, ராஜீவ் படுகொலை தொடர்பான சில வீடியோக்கள் சிறப்பு புலனாய்வு குழுவிடம் ஒப்படைக்கப்படவில்லை என்று ராஜீவ் கொலை வழக்கை விசாரித்த சிபிஐ முன்னாள் விசாரணை அதிகாரி ரகோத்தமன் தொலைக்காட்சி பேட்டி ஒன்றில் கூறியுள்ளார்.

மேலும்பல உண்மைகள் மறைக்கப்பட்டிருக்கின்றன. எனவே மறு விசாரணை நடத்தி புதைக்கப்பட்ட உண்மைகளை வெளியே கொண்டுவர வேண்டும்என அவர் கோரியிருக்கிறார்.

நீதிபதிகள் செல்வம் மற்றும் தேவதாஸ் ஆகியோா அடங்கிய டிவிஷன் பெஞ்ச் வெளியுறவுத் துறை செயலாளர் மற்றும் சிபிஐ துணை இயக்குநர், இந்திய உளவுத்துறை இயக்குநர் ஆகியோர் பதிலளிக்க வேண்டும்என உத்தரவிட்டு வழக்கை ஒத்திவைத்தது. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு வாடகைக்குத் தேவை

கொக்குவில் பகுதியில்
நான்கு பேர் கொண்ட
குடும்பமொன்றுக்கு
வீடு வாடகைக்குத் தேவை

தொடர்பு: 077 542 0567

(இ)



**ENGLISH THE EASY WAY**

Modern 5 Way Approach to English Language Learning

இலகுவழி ஆங்கில கற்கைநெறி

By: S.Muththulingam

சனி, ஞாயிறு காலை 9.00 - 11.00
செவ், வியா மாலை 3.00 - 5.00
இடம்: சிகரம் விரிவுரை மண்டபம்
153, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
☎ 021 222 0011

முதல் வகுப்பு இலவசம்



## சோதிடம்

இலங்கை வாழ் வட பகுதி மக்களின்
அமோக வரவேற்பைப் பெற்ற

**S.பேகன்**

தஞ்சாவூரிலிருந்து இலங்கை வந்துள்ளார்

சந்திப்பு நேரம்: 9 AM - 5 PM

தொடர்புகட்கு - 075 087 4641, 021 222 2829

பிள்ளையார் இன் ஹோட்டல்

No. 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(c-3436)


# ஏணையிலி...

ஏனைய சிறுவர்களால் விளையாட்டு காட்டப்பட்டுக்கொண்டிருந்த போது வேகமாக ஏணையிலிருந்து தலைகீழாக விழுந்ததில் நெற்றியில் பலமாக அடிபட்டுள்ளது.

இதனையடுத்து உடனடியாக முழங்காவில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்பு அன்றைய தினமே மாலை 6.30 மணியளவில் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டு சிகிச்சைக்காக குழந்தை அனுமதிக்கப்பட்டது.

இந்நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை 3.30 மணியளவில் குழந்தை உயிரிழந்துள்ளது.

குழந்தையின் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரணவிசாரணையதிகாரி ந.பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டதோடு பிரேத பரிசோதனையின் பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-6)


## தவறிவிட்டது

ஜெயபாலசிங்கம் ஜெயகாந் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (813072220V) சாரதி அனுமதிப் பத்திரம், தொழில் அடையாள அட்டை, வாகன காப்புறுதிப் பத்திரம், வரிப் பத்திரம் மற்றும் இரு வங்கி அட்டைகள் என்பன 26.05.2013 அன்று யாழ்ப்பாணம் புல்லுக் குளத்திற்கு முன்பாக தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், பாதுகாப்பு பிரிவு என்னும் விலாசத்தில் ஒப்படைத்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**தொ.பே: 0776442005**


# புதிய அரசியலு...

ன் உரையாற்றுகையிலேயே அவா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

நாட்டில் நீதியை நிலைநாட்டும் வகையிலும் ராஜபக்ஷ றெஜிமென்டை இலலாதொழிக்கும் வகையிலும் நாட்டு மக்களிடம் அதிகாரத்தை ஒப்படைக்கும் வகையிலும் ஐக்கிய தேசியக் கட்சியினால் புதிய அரசியல் அமைப்பிற்கான யோசனை வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கு நாட்டு மக்கள் பூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டும்.

நாட்டில் நீதி குழி தோண்டி புதைக்கப்பட்டுள்ளது.

ஊழல் மோசடிகள் நிறைந்து காணப்படுகின்றன.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை தேவையில்லாது பயன்படுத்தப்படுகின்றது.

தற்போது கிரிக்கெட் விளையாட்டும் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே, இவற்றை இல்லாதொழிக்கவே ஐக்கிய தேசியக் கட்சியினால் புதிய அரசியல் யோசனை வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி முறையை ஒழித்தல், சுயாதீன ஆணைக் குழுக்களை அமைத்தல், மக்களிடம் அரசியல் அதிகாரத்தை வழங்குதல் மற்றும அரசியலில் பெண்களுக்கு முன்னுரிமை வழங்குதல் போன்ற யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

ஆகவே இதற்கு நாட்டு மக்களின் பூரண ஆதரவு தேவைப்படுகின்றது. மக்கள் அனைவரும் இதற்கு ஆதரவு தெரிவித்து புதிய இலங்கையை உருவாக்க ஒன்றிணைய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-11)

# குறும்...

மேற்கொண்டனர். இதேவேளை அவரது சடலத்திற்கு அருகிலிருந்து மோட்டார் சைக்கிள் ஒன்றும் கைத்தொலைபேசி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளன.

இவரது மரணம் விபத்தொன்றில் நிகழ்ந்திருக்கலாம் எனவும் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (செ-6)


## கனடாவில் படிக்க, உழைக்க... 40 நாள்களில் செல்லலாம்

மென்பனி தூவும் கனடா தேசத்தில்
மாலை நேர உலா வர என்றும் உங்கள்
எண்ணம் உடனடியாக நிறைவேறும்.

**பயணச்சீட்டு, ஊன், உறைவிடம் இலவசம்.**

படிக்க உழைக்க சட்ட ஆலோசனை.

எல்லா நாள்களும் உங்கள் வரவிற்காக
மு.ப. 8 - பி.ப. 8 வரை காத்திருப்போம்.

(சி-3456)

அடிக் குறிப்பு:
உள்நாட்டில் (யாழ்ப்பாணத்தில்) தொழில்நுட்பத்துறை, துணை மருத்துவத்துறை போன்ற பல துறைகளில் கல்வி கற்கக்கூடிய நிலையு;ம் தொழில்வாய்ப்பும் நிறையவே உண்டு என்பதை எம் இளையோருக்கு நினைவூட்ட விரும்புகின்றோம்.
(இந்த அடிக்குறிப்பு கௌரவ இயக்குநர் சபைக் கட்டளைப்படி இங்கே பிரசுரமாகின்றது)

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்**

175, பருத்தித்துறைவீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 221 9016, 021 568 9090





இந்திய சமையற்கலை வல்லுநர்களால்
விசேடமாக தயாரிக்கப்பட்ட
உணவு வகைகள் வேண்டிய அளவு
(Buffer) புஃவே முறையில்
ஜூன் 1,2 ஆம் திகதி சனி, ஞாயிறு
ஆகிய இத்தினங்களில் மாலை 6 மணி
தொடக்கம் இரவு 10 மணிவரை உண்டு
மகிழ நாடவேண்டிய இடம்,

முற்றிலும் குளிரூட்டப்பட்ட ரெஸ்ரோரன்ட்

# பிள்ளையார் இன்

31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

விசேட விலைக் கழிவு
**200 ரூபா மட்டுமே...!**

உணவு வகைகள், பூரி, பாஜி உட்பட
பல வகையான தோசை வகைகளும்
பெற்றுக்கொள்ளலாம்.

**தொடர்புகளுக்கு:**
**0778959716**



(சி-3457)



தற்போது யாழ் நகரில்...




- ஆய்வுகூட பரிசோதனைகளை உள்ளடக்கிய முழு நேர பாடநெறி
- உயிரியல் துறையில் தொழில் சார் Biomedical Scientist களாக UK இல் பதிவு செய்வதற்கான சந்தர்ப்பம்
- சர்வதேச ரீதியில் அதிக தொழில் வாய்ப்புக்களுக்கு இட்டுச் செல்லும்
- பாடநெறி முடிவில் பிரபல தனியார் வைத்தியசாலைகளில் உள்ளகப் பயிற்சி
- உயிரியல் துறையில் நவீன வசதிகளுடனான கற்றல் சூழல்




ISO 9001:2008 CERTIFIED
14 Years of Trust & Excellence in Higher Education

**BCAS CAMPUS**
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
www.bcas.lk

16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131

Colombo : 077 482 9765
Kandy : 081 222 4731
Batticaloa : 077 766 6432
Kurunegala : 077 387 4747

(c-3455)

Building Careers - Transforming Lives


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிரவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.05.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.